படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள்,
ஊடக ஊழியர்கள், கலை, கலாசார செயற்பாட்டாளர்கள்
1981 - 2009 மார்ச்

# கருத்துக் கொலைக்கு இரையானோர்



சீதா ரஞ்சனி

சுதந்திர ஊடக இயக்கம்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள்,
ஊடக ஊழியர்கள், கலை, கலாசார செயற்பாட்டாளர்கள்
1981 - 2009 மார்ச்


# கருத்துக் கொலைக்கு இறையானோர்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள்,

ஊடக ஊழியர்கள், கலை, கலாசார செயற்பாட்டாளர்கள்

1981 - 2009 மார்ச்

# கருத்துக் கொலைக்கு இரையானோர்



சீதா ரஞ்சனி

சுதந்திர ஊடக இயக்கம்

இல. 96, கிருள வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05

freemediasrilanka@gmail.com

## கருத்துக் கொலைக்கு இறையானோர்

முதலாவது பதிப்பு : 2011
ஆசிரியர் : சீதா ரஞ்சனி
© சுதந்திர ஊடக இயக்கம்

ISBN : 978-955-0583-02-7

மொழி பெயர்ப்பு : எஸ். கணேசன்

அட்டை மற்றும் பக்க வடிவமைப்பு : சுகந்தி மணிமாறன்

வெளியீடு : சுதந்திர ஊடக இயக்கம்
மே/பா : இலங்கை பத்திரிகை நிறுவனம்,
இல. 98, கிருள வீதி,
நாரஹேன்பிட்டி, கொழும்பு 05
freemediasrilanka@gmail.com

அச்சு : சமயவர்தன அச்சகம்,
இல. 53, மாலிகாகந்தை வீதி, கொழும்பு 10

# நூலைப்பற்றி ஒரு வார்த்தை...

"கருத்துக் கொலைக்கு இரையானோர்" நூல் வெளியாவது இலங்கையின் காணக்கூடிய அதேபோல் காணமுடியாத அரசியல் சக்திகளுக்கு ஊடகங்கள் மோசமான நிலைக்கு உள்ளான சந்தர்ப்பத்திலாகும். இருந்தும் இலங்கையில் ஒட்டுமொத்த ஊடக அடக்குமுறையின் சரித்திரம் இந்த நூலில் உள்ளடக்கப்படவில்லை. ஊடக அடக்குமுறை உச்சகட்டத்தில் இருந்தபோது இடம்பெற்ற மனிதக் கொலைகள் மாத்திரம் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைச் சரித்திரத்தில் கொலையுண்ட எந்தவொரு ஊடக-வியலாளரது கொலை தொடர்பான விசாரணைகளும் முடிவடையவில்லை. எந்தவொரு விசாரணை அறிக்கையும் வெளியிடப்படவில்லை. ஏனைய கொலைகள் தொடர்பாக செயற்படும் சட்டம் ஊடகவியலாளருக்கு எதிரான சம்பவங்களில் செயற்படாதது விசேடமாக குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நூலுக்கான தகவல்களைச் சேகரிப்பது 2009 மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது. இருந்தும் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என எதுவித தகவல்களும் வெளிவராத நிலையில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல்போய் இரண்டு வரு-டங்கள் ஆகின்றன. இருந்தும் இந்த தகவல் பட்டியல் இத்துடன் நின்றுவிடுமா என்பது குறித்துச் சிந்திக்க முடியாதுள்ளது.

இந்த ஆய்வை மேற்கொண்ட கீதா ரஞ்சனி சுதந்திர ஊடக இயக்கத்தின் ஆரம்பம் முதல் இன்றுவரை தொடர்ந்து செயற்பட்டு வருகிறார். அவர் அவ்வப்போது சுதந்திர ஊடக இயக்கத்தின் செயலாளராகவும், ஏற்பாட்டாளராகவும் பதவி வகித்துள்ளார். 30 வருடங்களாக ஊடகத்துறையில் பணியாற்றி வரும் இவர் தற்போது சுதந்திர ஊடக இயக்கத்தின் செயலாளராக கடமையாற்றுகின்றார். கவிஞராகவும், எழுத்தாளராகவுமுள்ள இவர் பரந்தளவில் தொடர்புகளைப் பாவித்து இந்தத் தகவல்களைச் சேகரித்துள்ளார். இவருக்கு உதவிய சகலருக்கும் சுதந்திர ஊடக இயக்கம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது. அதேபோல் இந்த நூலை அச்சிட உதவி-யோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

**சுனில் ஜயசேகர,**
ஏற்பாட்டாளர் - சுதந்திர ஊடக இயக்கம்.

# உள்ளடக்கம்


1. அறிமுகம்

2. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் மற்றும் கலை, கலாசார செயற்பாட்டாளர்களின் பெயர் பட்டியல்.

3. படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பான சிறு குறிப்புகள்
   - முக்கிய பிரிவைச் சேர்ந்த நபர்கள் தொடர்பான தகவல்கள்
   - ஒரு மூலத்தில் மாத்திரம் இனங்காணப்பட்ட சிலரது தகவல்கள்
   - ஊடக, கலை நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர்கள்
   - திடீர் விபத்து மற்றும் காணாமற் போனோர் தொடர்பான தகவல்கள்

4. கொலையுண்ட முறை தொடர்பான சில ஆய்வுகள் (பிரதான பட்டியலுடன் தொடர்பானவர்கள் மாத்திரம் கணக்கிடப்பட்டுள்ளனர்)
   - கொலைகள் நடைபெற்றுள்ள விதம் குறித்த சில ஆய்வுகள்
   - இன அடிப்படையில் கொலைகள் இடம்பெற்றுள்ள விதம்
   - துறை அடிப்படையில் கொலைகள் இடம்பெற்றுள்ள விதம்
   - மாகாண மட்டத்தில் கொலைகள் இடம்பெற்றுள்ள விதம்
   - முக்கிய காரணங்களின் படி கொலைகள் இடம்பெற்றுள்ள விதம்

5. சில பொது முடிவுகள்

# அறிமுகம்

கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் மற்றும் கலை கலாசார செயற்பாட்டாளர்கள் என நாம் இங்கு குறிப்பிடுவது ஆண், பெண் இருபாலாரையும் என்பதை ஆரம்பத்திலேயே தெரிவிக்க வேண்டியுள்ளது. ஏனென்றால், இந்தச் சொல்லுக்குள் இரு பாலாரும் அடங்கினாலும் சமூக மற்றும் அத்துறையின் ஆதிபத்தியத்துக்குள் ஆண் தரப்பினர் மட்டுமே நினைவுக்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளதே காரணமாகும்.

மாற்றுக் கருத்தைக் கொண்டிருத்தல், கருத்தை வெளிப்படுத்துதல் மற்றும் தகவல்களை வெளியிடும் சுதந்திரத்தை இழந்தமையினால் வரலாற்றில் உயிரை பலி கொடுத்தவர்கள் தொடர்பாக ஆராய்வது முக்கியமானதாகும். இதனாலேயே கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் மற்றும் கலை கலாசார செயற்பாட்டாளர்கள் தொடர்பான தகவல்களை திரட்ட முடிவுசெய்துள்ளோம். மறுபுறம் சுதந்திரமான கருத்துக்களை கொண்டிருத்தல், வெளிப்படுத்துதல் மற்றும் ஊடகங்கள் வழியாக வெளிப்படுத்தும் சுதந்திரத்தை மீறுவதற்கான காரணங்கள் என்னவென்று இனங்காண்பதற்கு இத்தகவல்கள் முக்கியமானதாகும். அதேபோல் சிலரின் கொலை ஊடக செயற்பாட்டுடன் தொடர்பற்றது என்ற போதும் அவர்கள் உயிருடன் இருந்தால் அவர்களின் செயற்பாடுகளுக்கு ஒரு பெறுமதியை வழங்க முடியுமென்பதாலேயே.

கருத்துக் கொலை மற்றும் ஊடக அடக்குமுறையின் மிகமோசமான குற்றம் மனிதக் கொலையாகும். மனிதக் கொலை மற்றும் கொலைசெய்யப்பட்ட விதம் குறித்து ஆராய்ந்த போது, கருத்துக்களைக் கொண்டிருத்தல், வெளிப்படுத்துதல் மற்றும் தகவல்களை வெளியிடுவதை தடுப்பதற்கு, அடக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏனைய முயற்சிகளின் விபரீதத்தை புரிந்து கொள்ளக்கூடியதாகவிருக்கும். இவ்வாறு இடம்பெறுவதற்கான காரணமாகவிருந்த சமூக அரசியல் நிலைமைகளை உணர்ந்து கொள்வதற்கும் இது உதவியாகவிருக்கும். இத்தகவல் தொகுப்பு அதை ஆய்வு செய்ய ஒரு வழியை

திறந்து வைப்பதாக அமையும். இதை இலகுவாக்க இந்தத் தகவல்கள் சம்பந்தப்பட்ட துறையின் முக்கியத்துவம், சிரேஷ்ட அல்லது பிரபல்யம் போன்ற காரணங்களை கொண்டு வரிசைப்படுத்தாமல் கொலையுண்ட ஆண்டு என்ற ரீதியில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

1992ஆம் ஆண்டு சுதந்திர ஊடக இயக்கம் ஆரம்பமான வேளையிலேயே ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்படுவதற்கு எதிராக எழுப்பப்பட்ட குரல் மற்றும் ஏனைய செயற்பாடுகளுடன் ஊடகச் சுதந்திரம் தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தில் கட்டியெழுப்பப்பட்டது. இலக்கியம், கலை கலாசார உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்காகவும் முன்னின்று செயற்பட்டது அந்த சுதந்திர ஊடகப் போராட்டத்தின் ஒரு பகுதியாக இணைத்துக் கொள்ளப்பட்டது. அந்த நோக்கத்துக்கூடாகச் செயற்பட்டு இந்தத் தகவல் திரட்டில் ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் மட்டுமன்றி கலை கலாசார செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்தவர்களின் தகவல்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இவர்களில் சிலர் தொழில்சார் முழுநேர ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் மற்றும் கலை கலாசார செயற்பாட்டாளர்களாவர். இன்னும் சிலர் வேறு தொழில் அல்லது ஏனைய அரசியல் இயக்கங்களுடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டே ஊடக மற்றும் கலை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாவர். விஷேடமாக வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் இயக்கம்/ குழுக்களில் அதேபோல் இடதுசாரி அரசியல் இயக்கங்களில் முழுநேர செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களில் சிலர் அந்த அரசியல் அல்லது குழுக்களின் வெளியீடுகளில் முழுநேர ஊடகவியலாளர்களாகவும் ஊடக ஊழியர்களாகவும் செயற்பட்டுள்ளனர். மேலும் சிலர் சமூக, சமத்துவம் மற்றும் சமாதானம் சகவாழ்வுக்காக உழைக்கும் முன்னணி இயக்கங்களுடன் இணைந்து அந்த கருத்துக்களைக் கொண்டு செல்லும் ஆக்கங்களை நிர்மாணித்தவர்களாவர். அன்றுபோல் இன்றும் பிரதேச செய்தியாளர்கள் சுயாதீன ஊடகவியலாளர்களில் பலர் வேறு தொழில்கள் அல்லது வர்த்தகங்களில் ஈடுபட்டுக் கொண்டே செய்தியாளர்களாகவும் செயற்படுகின்றனர். வடக்கின் ஊடக கலாசாரம் கொழும்பில் ஆதிக்கம் செலுத்தும் ஊடக கலாசாரத்திலிருந்து வேறுபட்டு

தமக்கே உரித்தானதாக இருப்பது ஏனைய பிரதேசங்களை விட மாறுபட்டதாகும். இப்பிரதேசங்களிலும் மேற்கூறியபடி நிருபர்களாக (பிரதான ஊடகங்களுக்கும் அதேபோல் பிரதேச ஊடகங்களுக்கும்) இருப்பதுடன் மாவட்ட ஊடகங்களில் முழுநேர ஊடகவியலாளர்களும் அதேபோல் ஏனைய தொழில் புரிவோரும் இருக்கின்றனர்.

தொடர் கொலைகள், கொலை அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல் காரணமாக இன்றைய நிலையில் அந்த பிரபல ஊடக கலாசாரம் சீரழிந்து யாழ்ப்பாண ஊடகவியலாளர்களை மாத்திரம் ஊடகவியலாளர்களாக கணிப்பதும் கொழும்புக்கு வெளியே பிற மாவட்டங்களிலிருந்து செயற்படும் ஊடகவியலாளர்களை பிரதேச நிருபர்களாக கணிப்பிடும் பழைய சம்பிரதாயம் தொடர்பாக சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. இருந்தும் இங்கு அது போன்ற வேறுபாடுகள் இன்றி சகலரையும் சமமாக கணிப்பிட்டுள்ளோம்.

இந்தத் தகவல் திரட்டின் பிரதான பட்டியலில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இரு மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், தெற்கில் மூன்று மாணவர்கள் மாணவ அரசியல் செயற்பாட்டாளர்களாக தனியாக சேர்க்கப்பட்டுள்ளனர். காரணம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் இருவரும் (மாணவி மற்றும் மாணவர்) மேற்கூறியபடி மாற்றுக் கருத்துக் கொண்டதனால் கொலை செய்யப்படும் அரசியலுக்கு எதிராக கருத்து தெரிவிக்கும் உரிமைக்காக செயல்பட்டு, கொலைக்கெதிராக சமாதானம் மற்றும் ஜனநாயகத்துக்காக செயல்பட்டு, அதற்காக படைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு மற்றும் பிரதான ஊடக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாகும். ஆயுதம் தாங்கிய அரசியல் இயக்கத்தின் மாணவர் பரிவை பிரதிநிதித்துவப்படுத்தி, அந்த மாணவ அமைப்பின் வெளியீடுகள் மற்றும் ஏனைய இரகசிய வெளியீடுகளுக்கு மட்டும் பங்களிப்பு செய்ததால் தெற்கு மாணவர்கள் மூவரும் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உயிரோடிருந்தால் துறைக்கு பாரிய சேவைகளை செய்யக்கூடிய திறமையை வெளிப்படுத்திய மேலும் சிலரின் திடீர் மரணம் குறித்த குறிப்புகள் "திடீர் விபத்து மற்றும்

காணாமல் போதல் தொடர்பான சில தரவுகள்" என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. வேறு சில சம்பவங்களாக குறிப்பிடப்பட்டுள்ள இருவர் சில இடங்களில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்கள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தகவல்களைத் தேடிப்பார்க்கும் போது இறுதிக் காலத்தில் அவர்கள் ஊடக நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என தெரியவந்துள்ளது. கொலைக்கான காரணம் ஊடகம் அல்லது கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் அல்லவென்றும் வேறு காரணங்கள் இருந்ததாகவும் தெரியவந்தது. ஒரு படை அதிகாரி குறித்து தகவல்கள் இப்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளதேயென்றால் ஊடக நிறுவனம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அங்கு பாதுகாப்புக்காக இருந்த நிலையில் கொல்லப்பட்டதாலேயேயாகும்.

ஒரு மூலத்தால் மாத்திரம் மட்டும் இனங்காணப்பட்ட சில தகவல்கள் என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்ட சில பெயர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய இரண்டாவது மூலங்கள் மூலம் அந்தக் கொலைகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமற்போனதால் பிரதான பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. எழுத்து மூலம் மட்டும் அதில் குறிப்பிட்டுள்ள சிலர் குறித்து தகவல் கிடைத்துள்ளது. தனிப்பட்ட தகவல்கள் மூலம் இரு தமிழ் ஊடகவியலாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எப்படியிருந்தும் (பிரதான பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள) சகலரது மரணமும் இயற்கை மரணமல்ல. தவிர்க்க முடியாத விபத்து காரணமாகவுமல்ல. அனைத்தும் கொலைகாரர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு பிடிக்காத மாற்றுக் கருத்துக்களை கொண்டிருந்ததாலோ அல்லது கொலையாளிகளுக்குப் பிடிக்காத கருத்துக்களை வெளியிட்டதாலோ அல்லது கொலையாளிகளை இனங்காணக்கூடிய தொடர்பாடலில் ஈடுபட்டதாலோ அல்லது மக்களுக்கு பயனளிக்கும் தொடர்பாடலில் ஈடுபட்டதாலோ அல்லது இணக்கப்பாட்டுக்கு, விவாதத்துக்கு சமூகத்துக்குள் இடமளிக்காத காரணத்தாலோ இடம்பெற்ற கொலைகளாகும். ஆட்சி அதிகாரம் காரணமாக ஏற்பட்ட கொலைகளாகும். அகிம்சைக்குப் பதிலாக பயங்கரவாதம் சமூகத்துக்குள் புரையோடிப் போனதால் ஏற்பட்ட கொலைகளாகும்.

பயங்கரவாதம் அரச பயங்கரவாதம் காரணமாக இடம்பெற்ற கொலைகளாகும். அரசியல்வாதிகளின் ஊழல், மோசடி முறையற்ற நடவடிக்கைகளை அம்பலத்துக்கு வருவதைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட கொலைகளாகும். நாட்டின் பல்வேறுப்பட்ட இனங்களை ஏற்றுக்கொள்ளாததால் ஏற்பட்ட யுத்தம் மற்றும் யுத்த சூழ்நிலையால் மேற்கொள்ளப்பட்ட கொலைகளாகும். யுத்தம் மற்றும் அது தொடர்பான முறைகேடுகளை வெளிச்சத்துக்கு வருவதைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட கொலைகளாகும். இதன் கருத்து இதில் சில கொலைகள் ஊடகம் மற்றும் கலை கலாசார பாவனை காரணமாக ஏற்பட்டதல்ல என்ற போதும் மாறுபட்ட கருத்து, அரசியல் கொள்கைகளைக் கொண்டிருத்தல், தம்மால் கட்டுப்படுத்த முடியாத யுத்தத்துக்கு பலியாவது போன்ற காரணங்களால் இடம்பெற்றதாகும்.

நாட்டு மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், மோதல்கள் தொடர்பாக நாட்டை ஆளும் அரசே பொறுப்புக் கூறவேண்டும் என்ற போதும், கொலையுண்ட விதம், பிரதேசம் மற்றும் கால கட்டத்தின் படி மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல விதமான கொலைகளையும் கீழ்க் கண்டபடி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. இனப்பிரச்சினை/யுத்தம் மற்றும் அது சம்பந்தப்பட்ட கொலைகள் (தமிழ் ஆயுதக் குழுக்கள் உருவானது, குழுக்களுக்குள் ஏற்பட்ட கொலைகள், குழுக்களிடையிலான கொலைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.)

2. மக்கள் விடுதலை முன்னணியினால் (ஜே.வி.பி.) ஏற்படுத்தப்பட்ட கிளர்ச்சி மற்றும் அரசின் பதிலடி காரணமாக இடம்பெற்ற கொலைகள்.

3. அரசியல்வாதிகளின் சதி காரணமாக இடம்பெற்ற கொலைகள்.

இது தொடர்பான குறிப்பு, மாகாண மற்றும் மக்கள் இன அடிப்படையில் கொலைகள் நடைபெற்ற விதம் தொடர்பான குறிப்பு **"கொலைகள் நடைபெற்ற விதம் தொடர்பான ஆய்வுகள் சில"** என்ற தலைப்பின் கீழ் இந்நூலின் இறுதிப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இனப்பிரச்சினை/யுத்தம் மற்றும் அது தொடர்பான கொலைகள்" என்ற ரீதியில் இதில் பெரும்பாலான கொலைகள் இடம்பெற்றுள்ளன. பிரதான பட்டியலில் இடம்பெற்றுள்ள கொலைகள் என்றாலும் 109 பேருக்குள் 77 பேரது கொலைகள் இந்தத் தலைப்பின் கீழேயே இடம்பெற்றுள்ளன. கிளர்ச்சிக் காலத்தின்போது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)யால் கொலையுண்ட இடதுசாரிகளினால் பெரும்பாலானோர் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தை ஆதரித்தது மற்றும் அதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை தேர்தலுக்கு ஆதரவளித்தவர்களாகும். விஜய குமாரதுங்க போன்ற கலைஞர்கள் முதல் கொலைசெய்யப்படட இடதுசாரிகளையும் சேர்த்தால் அத்தொகை மிக. அதிகமாகும். அதேபோல் கொலையுண்ட பெரும்பாலானோர் தமிழர்களாவர். அது 114 பேரில் 60 பேராகும்.

எப்படியிருந்தும் தமிழ் மக்களின் தகவல் தெரிந்துகொள்ளும், கருத்துக்களைக் கொண்டிருக்கும், வெளிப்படுத்தும் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் சரித்திரத்தில் மிக மோசமானதாகும். சுதந்திரத்தின் பின்னர் இலங்கை சரித்திரத்தில் மிக மோசமான கருத்து அடக்குமுறை வெளிப்படுத்தப்பட்டது, தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களது இதயத்தைப் போன்ற யாழ் வாசிகசாலை தீயிடப்பட்டதாகும். அது திடீரென ஏற்பட்டதல்ல. முறையாகத் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்ட அழிவாகும். தமிழ் மக்களின் இதயம், மூளையைப் போன்ற அந்த வாசகசாலையில் மிகப் பெறுமதியான சுமார் 9700 நூல்கள் எரிந்து சாம்பலாகியதாக தெரிவிக்கப்படுகின்றனது. 1981 ஜுன் முதலாம் திகதி நல்லிரவில் மேற்கொள்ளப்பட்ட இந்த மோசமான சம்பவத்துக்குப் பின்னர் தமிழ் மக்கள் மிகுந்த கவலையும் வேதனையும் அடைந்தனர். அது மட்டுமின்றி ஆசியாவிலேயே சிறந்த பெறுமதியான இந்த வாசிகசாலையான யாழ். வாசிகசாலை தீயிட்டுக் கொழுத்திய சம்பவத்தினால் அறிஞர் உலகமே கவலையடைந்தது. வாசிகசாலைக்கு தீயிட்டு விட்டு அவர்கள் வெளியேறிவிடவில்லை. கொழும்பிலிருந்து சென்ற அரசியல்வாதிகளின் குண்டர்கள் வாசிகசாலையின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று பெற்றோலை ஊற்றி தீயிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. 1981ஆம் ஆண்டு ஜுன் 04ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த

அபிவிருத்தி சபைத் தேர்தலில் மோசடி செய்து வெற்றிபெறும் நோக்குடன் மே 31ஆம் திகதி முதல் தெற்கிலிருந்து திட்டமிட்டுச் சென்ற அரசியல் குண்டர்களை ஈடுபடுத்தி யாழ் வாசிகசாலையை தீயிடும் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஜுன் முதலாம் திகதி இரவு வாசகாலை தீப்பற்றி எரியும் செய்தியைக் கேள்விப்பட்டு தீ கொழுந்துவிட்டு ஆகாயம் வரை தீப்பிளம்புகள் கிளம்புவதைக் கண்ட டேவிட் அடிகளார் மூச்சடைத்து அந்த இடத்திலேயே இறந்து கீழே சாய்ந்தார். அடிகளார் அந்த வாசிகசாலைக்கு அடிக்கடி சென்று நூல்களை வாசித்ததுடன் அச்சந்தர்ப்பத்தில் ஆய்வு நூலொன்றையும் எழுதுவதில் ஈடுபட்டிருந்தார். வாசிகசாலையில் முடிந்தவரை பயனைப் பெற்ற அங்கு அலுவலக உதவியாளராகப் பணியாற்றிய பற்குணம் நாடக ஆசிரியராகவும் நடிகராகவுமிருந்தவராவார். வாசிகசாலையை தீயிட்டதை நேரில் கண்ட அவர் மனநோயாளியானார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழனின் ஆத்மாவைக் காயப்படுத்தி 1981 ஆண்டு முதலே அடக்குமுறை ஆரம்பமானது. இளைஞர்களின் அரசியல் எழுச்சியும் அந்த காலகட்டத்திலேயே உருப்பெற்றது. அதன் பின்னரான காலகட்டம் தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தை பின்தள்ளி குழுக்களுக்கிடையிலான அதிகாரம் போராட்டக் காலமாக மாறியது. குழுக்களுக்குள் ஜனநாயகம் குறித்து கேள்வி எழுப்புவோரை கொலை செய்தல், அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் பிரிந்து செல்வோரைக் கொலை செய்தல் என அதிகரித்துச் சென்றது. குழுக்களுக்கிடையிலான கொலைகள் அதிகரித்து இறுதியில் ஏனைய குழுக்களை அடக்கி ஒடுக்கிவிட்டு எல்.ரீ.ரீ.ஈ. பலம்பெற்றது. இருந்தும் சமீபகாலச் சரித்திரத்தில் மிக மோசமான கருத்து அடக்குமுறை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான 1981ஆம் ஆண்டு முதல் கொலையுண்ட நபர்களின் தகவல்கள் இந்த நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரை கொலை தொடர்பான தகவல்கள் திரட்டியபடியே இங்கு தரப்படுகிறது. இலங்கையில் கருத்துக்களுக்கான அடக்குமுறை சரித்திரத்தில் பாரம்பரிய அரச நிர்வாக காலம் வரை பரந்து செல்கின்றது. மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் மற்றும் அது தொடர்பான நூல்களை (ஓலைச்சுவடிகளில்

எழுதியவை) பாவிக்கும் உரிமையை மீறும் வகையிலான அடக்குமுறைகள் சோஹாரிக திஸ்ஸ அரசர் காலம் (கி.பி. 214-236) வரை நீடிக்கிறது. மகா விகாரை மற்றும் அபயகிரிக்கிடையில் ஏற்பட்ட தேரவாத பௌத்தம் மகாயான பௌத்தம் தொடர்பான வாதப் பிரதிவாதங்களினாலேயே ஏற்பட்டது. கோத்தபாய அரச காலத்தில் மகாயான கருத்துக்களைக் கொண்ட பிக்குகள் 60 பேரை கரும்புள்ளி செம்புள்ளியிட்டு நாட்டை விட்டு வெளியேற்றியதாகவும் நூல்களை தீயிட்டுக் கொழுத்தியதாகவும் அறிவிக்கப்படுகிறது. மகா வம்சத்தின்படி மதத்தைப் பின்பற்றும் வாதம் காரணமாக மேலும் மோசமான சாஸ்திர மற்றும் கலை அழிவுக்குட்பட்டது மகாசேன அரச காலத்திலாகும். கரும்புள்ளி செம்புள்ளியிட்டு நாட்டை விட்டு வெளியேற்றிய பிக்குகளைக் கண்ட சங்கமித்ர என்ற பெயருடைய மகாயான பிக்கு இலங்கைக்கு வந்து மகாசேன அரசரை மகாயான பௌத்த முறைக்கு மாற்றிக்கொண்டு செய்த சதியின்படி அந்த அழிவு ஏற்பட்டதாக சரித்திரத்தில் கூறப்படுகிறது. இதன்படி மகா விகாரையிலுள்ள பிக்குகளுக்கு தானம் வழங்கும் நாட்டு மக்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. சங்கமித்ர தேரரின் நண்பரான சோன என்ற அமைச்சருடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு மகா விகாரை மற்றும் அதனுடனிணைந்த விகாரைகளை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. பின்னர் அரசரின் நண்பரான அமைச்சர் மேகவர்ணாபயவின் வழிகாட்டலின்படி அரசர் மீண்டும் மகா விகாரையைக் கட்டியெழுப்ப நடவடிக்கை மேற்கொண்டதாகவும் அரசரின் ஒரு மனைவி மகா விகாரையை அழித்த சங்கமித்த தேரர் மற்றும் அமைச்சர் சோன ஆகியோரை ஒரு தச்சனைக் கொண்டு கொலை செய்ததாகவும் மகா வம்சத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் ஏற்பட்ட காலிங்க மன்னர் ஆக்கிரமிப்பின்போது பௌத்த நூல்கள் பல அழிக்கப்பட்டதாகவும் மற்றும் பல விகாரையில் அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எப்படியிருந்தும் பாரம்பரிய தகவல்கள் மூலம் கருத்து அடக்குமுறையின் ஆரம்பம் அரச நிர்வாகிகள் அடுத்தவர்களின் பேச்சுக்களில் ஏமாற்றப்பட்டது, அடுத்தவர்களின் கருத்துக்களை பொறுத்துக் கொள்ளாமை, இணக்கப்பாட்டுக்கு இடமளிக்காமை, போன்ற காரணங்களைப் போல் சிவில் மற்றும் வெளி ஆக்கிரமிப்புக்கான சாட்சியங்கள்

இருக்கின்றன. சதிகளுக்கு அதில் முதலிடம் கிடைத்துள்ளது. ஜனநாயகத்தை கௌரவிக்கும் உலகமே கிராமமாக மாறியுள்ள ஒழுக்கமுள்ள இந்த உலகின் ஒரு சிறு நாடான இலங்கையின் அந்த ஒழுக்கத்தை மீறி அடக்குமுறை மென்மேலும் அதிகரிப்பது கவலை தரக்கூடியதாகும். ஒழுக்கம் நியாயமுள்ள ஒரு நாட்டில் சௌபாக்கியத்தைக் கொண்டுவருவது சுதந்திரமான கருத்துக்களேயன்றி இனவாத, யுத்தவாத, ஒழுக்கமற்ற, நீதியற்ற தன்மையாகவிருக்காது. உதிக்கும் சூரியனை உள்ளங்கையால் மறைத்துவிட முடியாது. மனிதாபிமானத்தின் பேரில் உண்மை வெளிப்படுவதை தடுத்து விடமுடியாது. இருந்தும் கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் மற்றும் இனவாத தடைகளுக்கிடையில் எப்போதும் கலவரங்கள் உலகம் முழுவதும் இடம்பெற்றே வருகிறது.

நாம் அறிந்திருந்த சம்பவங்களுக்கு மேலாக நான்கு மாதங்கள் முழுவதும் தகவல்களை சேகரிக்க வேண்டியிருந்தது. எழுத்து மூலத் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ள காலத்துக்கேற்ற, பிரதேசத்துக்கேற்ற சிரேஷ்ட பிரஜைகளிடமிருந்து தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. சகல தகவல்களும் ஒரு மூலத்துக்கு மேல் பயன்படுத்தி உறுதிப்படுத்தப்பட்டவையாகும். சிலவேளை அதிக விவரங்கள் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒரு நபருக்காக 40க்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புக்களை எடுக்க வேண்டியிருந்தது. வாய்மூல தகவல்களை பல்வேறு தரப்புகளில் உறுதிப்படுத்திக் கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக பெயரை வெளியிட முடியாவிட்டாலும் வடக்கு - கிழக்கு வெளிநாடு சென்றுள்ள மற்றும் கொழும்பிலுள்ள பல சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் முஸ்லிம் நண்பர்கள் சிலரதும் சில ஊடக நிறுவனங்களினதும் உதவிகள் இந்த தகவல் சேகரிப்பின்போது எமக்கு கிடைத்தது. கொழும்பைக் களமாகக் கொண்ட சிரேஷ்ட ஊடக நண்பர்கள் பலரின் ஞாபக சக்தியும் எமது தகவல் திரட்டலுக்கு பேருதவியாகவிருந்தது. தனி நபர்களின் மூலங்கள் பலவற்றுடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்தது. யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தின் அறிக்கைகளடங்கிய நூல்கள், கலவர காலத்தில்

கொலைசெய்யப்பட்டவர்களின் தகவல்களடங்கிய நூல்கள் அதேபோல் பல்வேறு நூல்கள் பல இந்த தகவல் ஆய்வுக்கு பேருதவியாகவிருந்தது. பத்து வருட "யுத்திய" பத்திரிகைகள், முக்கிய ஊடக நிறுவனங்களின் வாசிகசாலைகள், தேசிய நூலக சேவைகள் சபையின் வாசிகசாலை, தமிழ் அரசியல் கட்சிகளின் தகவல்கள், இடதுசாரி அரசியல் கட்சிகளின் தகவல்கள், பல இணையதளங்கள் தகவல்களைத் திரட்டும் போது உதவியாகவிருந்தன. உதவி புரிந்த சகலருக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஆய்வை மேற்கொள்ள எனக்கு அழைப்பு விடுத்த சுதந்திர ஊடகத்தின் முன்னாள் ஒருங்கிணைப்பாளரான சுனந்த தேசப்பிரிய அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2008 அக்டோபர் மாதம் இந்த ஆய்வு முடிவுக்கு வந்த போதும் அச்சிடுவதில் தாமதம் ஆனபடியால், 2009 மார்ச் மாதம் வரையான சம்பவங்கள் மீண்டும் சேர்க்கப்பட்டு இவ்வாறு உங்கள் கைகளில் சேர்க்கப்படுகிறது. அதே போல் தயாரிக்கப்பட்ட இந்தப் பட்டியல் பரிபூரணமாகவிருக்க முடியாது. சாதாரணமாக சரித்திரம் எழுதப்படுவது குரல்களுள்ள, சத்தியுள்ளவர்களுக்கு சாதகமாகவிருப்பது உண்மையாகும். மட்டுப்படுத்தப்பட்ட வரப்பிரசாதமுள்ளவர்கள், அதிகார கருத்துக்களுக்குள் பெண்கள் அந்த சரித்திரத்தில் இடம்பெறமாட்டார்கள். இல்லாவிட்டால் குறைவாக இடம்பெற்றிருப்பர். இந்தத் துறைக்குள் எங்காவது பெயர் குறிப்பிடப்படாமல், எவருடைய நினைவிலும் நிற்காமல் அமைதியாக சேவை புரிந்தவர்கள் சரித்திரத்தின் பக்கங்களில் விடுபட்டிருக்கலாம். எமது முயற்சியானது அவ்வாறு மறைந்திருந்தவர்களை தேடுவதாக இருந்தபோதும் இந்தக் குறுகிய காலத்துக்குள் கண்டுபிடிக்க முடியாதவர்கள் இன்னும் இருக்கலாம். எதிர்கால வெளியீடுகளில் அவ்வாறு சந்திப்பவர்களுக்கு சரித்திரத்தில் இடம் ஒதுக்கப்படவேண்டும்.

**சீதா ரஞ்சனி**
seetharanjanee@gmail.com
2011 ஜனவரி

## கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் மற்றும் கலை கலாசார செயற்பாட்டாளர்களின் பெயர்ப்பட்டியல்

(கொலை செய்யப்பட்ட வருடங்களின்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ளது)

### 1981

- நவரட்னம் - புகைப்படக் கலைஞர்
  **ஜூன்** 03
- விமல் எஸ். சுரேந்திர - புகைப்படக் கலைஞர்
  **அக்டோபர்** 26

### 1982

- சதாசிவம் சிவசண்முக மூர்த்தி (சுந்தரம்)
  ஊடகவியலாளர் - **ஜனவரி** 02

### 1984

- ராஜரத்தினம் ஜெயச்சந்திரன் (பார்த்தன்)
  ஊடகவியலாளர் - **ஜூன் - ஆகஸ்டுக்கிடையில்**

### 1986

- காவலூர் எஸ். ஜெகநாதன் - எழுத்தாளர்

### 1987

- நிலந்த குணவர்தன - ஒளியமைப்பு கலைஞர் - ரூபவாஹினி - **அக்டோபர்** 05
- றேனுகா அத்தநாயக்க - பொறியியலாளர் - ரூபவாஹினி
  **அக்டோபர்** 05
- காமினி ஜயந்த - தொழில்நுட்ப அதிகாரி - ரூபவாஹினி
  **அக்டோபர்** 05
- வை. கருணாபால - சாரதி - ரூபவாஹினி
  **அக்டோபர்** 05

- குமாரையா கமலதாஸ் - அச்சக ஊழியர்
  அக்டோபர் 13
- அருண கஹந்தகமகே - கவிஞர்
  அக்டோபர் 19
- நந்தன மாரசிங்க - கலைஞர்
  நவம்பர் 29
- சத்தியபால வன்னிகம - எழுத்தாளர்
  நவம்பர் 18, கடத்தப்பட்டார்
- கே.எம். வாசகர் - ஊடகவியலாளர்
- எஸ். நடராஜா - ஊடகவியலாளர்

---

## 1988

- விஜய குமாரணதுங்க - கலைஞர் - பெப்ரவரி 16
- சந்திரசிரி வீரவிக்கிரம சிங்ஹசேன - விற்பனைப் பிரதிநிதி மே 17
- ஜீ.பி. குணதாச - விற்பனை உதவியாளர் - மே 17
- கந்தையா கந்தசாமி - ஊடக நிறுவன உரிமையாளர்
  ஜூன் /ஜூலை
- ஹென்ரி பமுணுவ - ஊடக ஊழியர்
  அக்டோபர் 02
- டி.பி. விஜேசூரிய - கலாசார செயற்பாட்டாளர்
  அக்டோபர் 03
- ஜே.ஈ. குணசேகர - எழுத்தாளர் /மொழிபெயர்ப்பாளர்
  அக்டோபர் 19
- டி.எம்.டி. சந்திரவிமல - ஊடகவியலாளர்
  நவம்பர் 17
- நெல்சன் கருணாரத்ன - ஊடகவியலாளர்
  நவம்பர் 23
- எச்.ஈ. தயாநந்த - எழுத்தாளர் - டிசம்பர் 02
- என்.சீ.எம். இஸ்மாயில் - ஊடகவியலாளர் - டிசம்பர்
- எஸ். செல்வராசா - ஊடகவியலாளர்

---

## 1989

- டி.என்.எஸ். பத்திரன - ஊடகவியலாளர்
  ஜனவரி 24
- ஆனந்த நவரத்ன - எழுத்தாளர்
  ஜனவரி 25

- பீ.எம். வீரகோன் பண்டார - கலாசார செயற்பாட்டாளர் **பெப்ரவரி 09**
- என்.ஜீ. பிரேமரத்ன (உபாலி) - வீதி நாடகக் கலைஞர் **பெப்ரவரி 11**

  சரத் செனவிரத்ன - வீதி நாடகக் கலைஞர் **பெப்ரவரி 11**
- ஜே.ஏ. மைத்திரிபால ஜயவீர (லொக்கு ஐயா) - வீதி நாடகக் கலைஞர் **பெப்ரவரி 11**
- காமினி சேனக பண்டார (சாகர) - எழுத்தாளர் **மார்ச் 06**
- கே. தனபாலசிங்கம் - எழுத்தாளர் - **மார்ச் 24**
- சுனில் நவரத்ன - ஊடகவியலாளர் - **மார்ச்**
- டி. மகாலிங்கம் - ஊடகவியலாளர் - **மே 11**
- பி.டி. விமலசேன - அச்சக முகாமையாளர் - **மே 27**
- ஐவன் ஜயசேகர - ஊடகவியலாளர் - **ஜுன் 04**
- தேவிஸ் குருகே - ஊடகவியலாளர் - **ஜுலை 23**
- பிரேமகீர்த்தி டி அல்விஸ் - ஊடகவியலாளர் **ஜுலை 31**
- குலசிரி அமரதுங்க - ஊடகவியலாளர் **ஆகஸ்ட் 11**
- சாகரிகா கோமஸ் - ஊடகவியலாளர் **செப்டெம்பர் 18**
- ராஜினி ராஜசிங்கம் திராணகம - எழுத்தாளர் **செப்டெம்பர் 21**
- ஐ. சண்முகலிங்கம் - ஊடகவியலாளர் **நவம்பர் 06**
- எம். அமிர்தலிங்கம் - பத்திரிகை உரிமையாளர் / டெமில் டிரஸ்ட் பண்ட்
- ஆர்.டி. பிட்டவெல - நடனக் கலைஞர்
- சரத் சந்திரரத்ன - பாடகர்
- எம். நவரத்னம் - ஊடகவியலாளர்

---

## 1990

- லக்ஷ்மன் பெரேரா - நாடகத் தயாரிப்பாளர் **ஜனவரி 27**
- ரிச்சட் டி செய்சா - ஊடகவியலாளர் **பெப்ரவரி 18**
- குமரகுரு குகமூர்த்தி - ஊடக ஊழியர் **செப்டெம்பர் 16**

- சோ. பத்மநாதன் - ஊடக ஊழியர் **செப்டெம்பர் 27**
- யூ.எல். தாவூத் - எழுத்தாளர் - **1990**
- அஹமட் லெப்பே - எழுத்தாளர் - **டிசம்பர் 26**

## 1991

- வேலுப்பிள்ளை ஆனந்தன் - எழுத்தாளர் - **பெப்ரவரி** 21
- சோசாபிள்ளை நோபட் அல்லது டொமினிக் - எழுத்தாளர் - மே 17
- செல்வநிதி தியாகராஜா - ஊடகவியலாளர் /கலாசார செயற்பாட்டாளர் - **ஆகஸ்ட் - 26**
- எஸ். தில்லைநாதன் - கலாசார செயற்பாட்டாளர் **ஆகஸ்ட் 26**
- கே. மனோகரன் - கலாசார செயற்பாட்டாளர் **ஆகஸ்ட் 26**

## 1993

- அந்தனி குவின்டஸ் பெர்ணாண்டோ - ஊடகவியலாளர் மே 02

## 1994

- ஏ. சபாலிங்கம் - எழுத்தாளர் - **மே 01**
- கனகரத்தினம் ஸ்ரீஸ்கந்தராஜா (கே.எஸ். ராஜா) - ஊடகவியலாளர் - **டிசம்பர் 03**

## 1995

- கருணாரத்ன சப்புதன்திரி - ஊடகவியலாளர் ஏப்ரல் 29
- கிரம பியசோம - ஊடகவியலாளர் - **ஏப்ரல் 29**
- எட்வின் வீரசிங்க - புகைப்பட ஊடகவியலாளர் - **ஏப்ரல்** 29
- எஸ்.எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்) வானொலிக் கலைஞர் - **ஆகஸ்ட் 30**

## 1996

- சுதீப பூர்ணஜித் - ஊடகவியலாளர் - **ஜுலை 28**
- கந்தையா கஜேந்திரன் - ஊடகவியலாளர் **அக்டோபர் 27**

## 1997

- திருநாவுக்கரசு தர்மலிங்கம - பத்திரிகை விற்பனைப் பிரதிநிதி - **அக்டோபர் 02**

## 1998

- சஷி கிருஷ்ணகுமார் - சுயாதீன ஊடகவியலாளர்
  **செப்டெம்பர் 29**

## 1999

- ரோஹணகுமார - ஊடகவியலாளர் -
  **செப்டெம்பர் 07**
- அற்புதராஜா நடராஜா (ரமேஷ்) - ஊடகவியலாளர்
  **நவம்பர் 02**
- அனுர பிரியந்த குரே - ஒளியமைப்பு கலைஞர் -
  **ஐ.டி.என். - டிசம்பர் 18**
- இந்திக பத்தினிவசம - படப்பிடிப்பு உதவியாளர் -
  சிரச - **டிசம்பர் 18**
- பெஸ்டியன் அந்தனி மரியதாஸ் - வானொலிக் கலைஞர்
  **டிசம்பர் 31**

## 2000

- செழியன் பேரின்பநாயகம் - ஊடகவியலாளர் / எழுத்தாளர் - **செப்டெம்பர் 10**
- ஏ.எம். நியமத்துல்லா - ஊடகவியலாளர்
  **செப்டெம்பர் 16**
- மயில்வாகனம் நிமலராஜன் - ஊடகவியலாளர்
  **அக்டோபர் 19**

## 2004

- அய்யாத்துரை ஜி. நடேசன் - ஊடகவியலாளர்
  **மே 31**
- கந்தசாமி ஐயர் பாலநடராஜன் - எழுத்தாளர்
  **ஆகஸ்ட் 16**
- லங்கா ஜயசுந்தர - புகைப்பட ஊடகவியலாளர்
  **டிசம்பர் 11**

## 2005

- தர்மரத்தினம் சிவராம் - ஊடகவியலாளர்
  **ஏப்ரல் 28**
- கண்ணமுத்து அரசகுமார் - ஊடக ஊழியர்
  **ஜ"ன் 29**
- ரேலங்கி செல்வராஜா - ஊடகவியலாளர்
  **ஆகஸ்ட் 12**
- டி. செல்வரத்தினம் - பாதுகாப்பு ஊழியர்
  **ஆகஸ்ட் 29**

- யோககுமார் கிருஷ்ண பிள்ளை - ஊடக ஊழியா **செப்டம்பர் 30**
- ஏ.எல்.எம். பளீல் - (நட்பிட்டிமுனை பளீல்) - எழுத்தாளர் **டிசம்பர் 02**
- கே. நவரட்ணம் - ஊடக ஊழியர் - **டிசம்பர் 22**

## 2006

- சுப்பிரமணியம் சுகிர்தராஜன் - ஊடகவியலாளர் - **ஜனவரி 24**
- எஸ்.டி. கணநாதன் - தமிழ் செய்தி மற்றும் தகவல் நிலைய பங்காளர் - **பெப்ரவரி 01**
- பெஸ்டியன் ஜோர்ஜ் சுரேஷ் - ஊடக ஊழியர் **மே 03**
- ராஜரட்ணம் ரஞ்சித்குமாா - ஊடக ஊழியர் **மே 03**
- நிஹால் டி சில்வா - எழுத்தாளர் - **மே 27**
- சம்பத் லக்மால் டி சில்வா - ஊடகவியலாளர் **ஜ"லை 02**
- மரியதாஸ் மனோஜன்ராஜ - ஊடக ஊழியர் **ஆகஸ்ட் 01**
- பத்மநாதன் விசாமநந்தன் - பாடகர் / இசையமைப்பாளர் **ஆகஸ்ட் 02**
- சதாசிவம் பாஸ்கரன் - ஊடக ஊழியர் **ஆகஸ்ட் 15**
- சின்னத்தம்பி சிவமகாராஜா - ஊடக உரிமையாளர் **ஆகஸ்ட் 20**

## 2007

- எஸ். ரவீந்திரன் - ஊடக ஊழியர் - **பெப்ரவரி 12**
- சுப்பிரமணியம் ராமச்சந்திரன் - ஊடகவியலாளர் **பெப்ரவரி 15**
- சுபாஷ் சந்திரபோஸ் - ஊடகவியலாளர் - **ஏப்ரல் 16**

  செல்வராசா ரஜிவர்மன் - ஊடகவியலாளர் **ஏப்ரல் 29**
- சகாதேவன் நிலக்ஷன - ஊடகவியலாளர், ஊடக மாணவர் - **ஆகஸ்ட் 01**
- அந்தனிப்பிள்ளை ஷெரீன் சித்திரஞ்சன் - ஊடக ஊழியர் -**நவம்பர் 05**

- வடிவேல் நிமலராஜா - ஊடக ஊழியர்
**நவம்பர் 17**
- இசைவிழி செம்பியான் (சுபாஜினி) - புலிகளின் குரல் ஊடகவியலாளர் - **நவம்பர் 27**
- சுரேஷ் லிம்பியோ - புலிகளின் குரல் - ஊடக ஊழியர்
**நவம்பர் 27**
- டி. தர்மலிங்கம் - புலிகளின் குரல் - ஊடக ஊழியர்
**நவம்பர் 27**
- டபிள்யூ குணசிங்க - ஊடகவியலாளர்
**டிசம்பர் 05**

---

## 2008

- பரணிரூபசிங்கம் தேவகுமார் - ஊடகவியலாளர்
**மே 28**
- மொஹமட் மஹ்ரூப் ரஷ்மி - ஊடகவியலாளர் - **அக்டோபர் 06**

---

## 2009

- லசந்த விக்ரமதுங்க - பத்திரிகை ஆசிரியர், ஊடகவியலாளர் **ஜனவரி 08**
- புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி - ஊடகவியலாளர்
**பெப்ரவரி 12**
- சசிமதன் - ஊடக ஊழியா - **மார்ச் 06**

## ஒரு மூலத்தில் மாத்திரம் இனங்காணப்பட்ட சிலர்

- கே.எஸ். இரத்தினசிங்கம் - ஊடகவியலாளர் - மட்டக்களப்பு
  1986

- டீ. தயானந்தன் - ஊடகவியலாளர் - தம்பிலுவில் - அம்பாறை
  1985

- ஏறாவூரில் கொலைசெய்யப்பட்ட கவிஞர்
  1990 ஆகஸ்ட் 11

- நாகலிங்கம் தியாகராஜா - ஊடகவியலாளர் - மட்டக்களப்பு

- கே.பி. உபசேன - பத்திரிகை விற்பனை பிரதிநிதி
  1988 மே 16

- யூ.சீ. கருணாதிலக - ஹரிஸ்பத்துவ - புகைப்படக் கலைஞர்
  1988 ஜுலை 09

- விஜேசிரி நாணயக்கார - ஊடகவியலாளர் - மத்துகம
  1989 ஏப்ரல் 22

- ஜினசேன கஸ்தூரியாராச்சி - ஊடகவியலாளர் - கேகாலை - 1989 ஆகஸ்ட் 21

- ஐ.சி. பெர்ணாண்டோ - பத்திரிகை விநியோகம் - மெனிக்ஹின்ன - பயங்கரவாத காலத்தில்

## ஊடக, கலை நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்கிய அனைத்து பல்கலைக்கழக மாணவர் மகா சபையின் மாணவ அரசியல் செயற்பாட்டாளர்கள்

- பத்மசிரி திரிமாவிதான - படைப்பாளர்
  **1988 அக்டோபர் 22**
- உபாலி கமகே - "வெடி ஹண்ட" ஆசிரியர் - **1990 ஜனவரி**
- அத்துல சேனாரத்ன - "வெத சிசுஹண்ட" ஆசிரியர் - **1990 செப்டெம்பர் 17**

திடீர் விபத்து – காணாமற் போனோர் தொடர்பான தகவல்கள்

- லீனா அய்ரின் ஹப்புதன்திரி - எழுத்தாளர் / கவிஞர் - **1987 மே 18**
- சந்திரகுமார விக்கிரமரட்ண - கவிஞர் - **1991ஆம் ஆண்டு முதல் காணவில்லை**
- குலசிங்க - ஊடகவியலாளர்
- கே. நந்தகுமார் - ஊடகஊழியர் - **2001 மே 06**
- ருக்ஷிகா பிரசாதினி - ஊடகவியலாளர்
  **2006 டிசம்பர் 19**

ஏனைய சில சம்பவங்கள்

- கோப்ரல் சேபால குணதிலக - இராணுவம்
  **1984 நவம்பர் 03**
- ஆனந்த மெண்டிஸ் - மீட்டியாகொட நிருபர் - **1988 ஏப்ரல் 17**
- ரணதுங்க - பக்கவடிவமைப்பாளர் - **பயங்கரவாத காலத்தில்**

## படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் மற்றும் கலை கலாசார செயற்பாட்டாளர்களின் தகவல்கள்

(கொல்லப்பட்ட ஆண்டின் படி வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.)

# 1981

### நவரத்தினம் - புகைப்பட ஊடகவியலாளர்
### கொலையுண்ட தினம் - 03 ஜுன் 1981

தேடிக் கண்டுபிடித்த தகவல்களின் படி ஊடகத்துடன் தொடர்பு கொண்டதற்காக கொலையுண்ட முதலாவது நபர் புகைப்பட ஊடகவியலாளர் நவரத்தினமாவார். 1981ஆம் ஆண்டு ஜுன் 03ஆம் திகதி சுண்ணாகம் பிரதேசத்தில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் இவர் கொல்லப்பட்டார். ஜுன் 04ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவிருந்த மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் மோசடி செய்து வெற்றிபெறும் நோக்கில் அப்போதைய அரசின் முக்கியஸ்தர்களின் ஏற்பாட்டில் 1981 மே மாதம் 31ஆம் திகதி இரவு முதல் யாழ். குடா நாட்டை தீயிட்டுக் கொளுத்தும் நடவடிக்கை மூன்று தினங்கள் வரை முடுக்கிவிடப்பட்டது.

இடம்பெற்ற வன்முறைகளின் உச்சமாக ஜுன் முதலாம் திகதி ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலகமான யாழ் நூலகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. தமிழ் மக்களின் இதயத்துக்கும் மூளைக்கும் தீயிட்ட இச்சம்பவம் இந்நாட்டின் ஊடக அடக்குமுறையின் பாரிய அச்சுறுத்தலாக, அழிவாக பதிவாகியுள்ளது. அன்றைய தினமே "ஈழநாடு" பத்திரிகை அலுவலகமும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. நவரத்தினம்

தீயிடப்பட்ட "ஈழநாடு" பத்திரிகைக்கு புகைப்படங்களை வழங்கிய, புகைப்படப்பிடிப்பை தனிப்பட்ட தொழிலாகக் கொண்டவராவார் என தெரிவிக்கப்பட்டபோதும் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள அக்கால கட்ட த்தில் அந்த பத்திரிகையில் எவரையும் தொடர்புகொள்ள எடுத்த முயற்சிகள் தோல்வியுற்றது. அக்காலத்தில் பத்திரிகையில் முழுநேரப் புகைப்படப்பிடிப்பாளர்கள் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுவதுடன் குறைந்த வசதிகளின் கீழ் லித்தோ அச்சு முறையில் பத்திரிகை வெளியிடப்பட்டது. தீவைப்பு இடம்பெற்ற அந்த சில நாட்களில் யாழ். மாவட்டத்தில் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட நிலையில் புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தபோது புகைப்படவியலாளர் நவரத்தினம் கொல்லப்பட்டிருக்கலாமென தெரிவிக்கப்படுகின்றது. இவர் 40 முதல் 45 வயதுக்கிடைப்பட்டவரென தெரிவிக்கப்படுகிறது. இவர் தொடர்பான ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை.



## விமல் எஸ். சுரேந்திர - புகைப்பட ஊடகவியலாளர் கொலை செய்யப்பட்ட தினம் - 26 அக்டோபர்

கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டாவது புகைப்பட ஊடகவியலாளர் என தெரிவிக்கப்படும் விமல் எஸ். சுரேந்திர (சோமரத்ன விமல் சுரேந்திர) இலங்கையின் தேசிய ஊடகமொன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது கொழும்பு மாவட்டத்தில் கொல்லப்பட்ட முதலாவது ஊடகவியலாளராவார். அவர் "திவயின" பத்திரிகையில் புகைப்பட ஊடகவியலாளராகவிருந்ததுடன் தவஸ, சிரிலக, ஜனதின மற்றும் அத்த ஆகிய பத்திரிகைகளிலும் கடமையாற்றியுள்ளார். பொரளையில் கிரிஷாந்த என்ற பெயரில் ஸ்டுடியோ ஒன்றை நடாத்திக் கொண்டிருந்த இவர் சில ஊடக நண்பர்களுடன் அங்கிருந்த அறையொன்றில் தங்கியிருந்தார். 1981ஆம் ஆண்டு 26ஆம் திகதி அப்போதைய அரசில் முக்கிய அமைச்சராகவிருந்த ஜோன் அமரதுங்கவின் கந்தானையிலுள்ள வீட்டுக்கருகிலுள்ள பிரதான வீதியில் இவர் கொலை செய்யப்பட்டார். இதை திடீர் விபத்தாக

காட்ட முயற்சிக்கப்பட்ட போதும், இக்கொலை சந்தேகத்துக்கிடமாகவிருந்தது. மோட்டார் சைக்கிளொன்றில் சென்றுகொண்டிருந்த விமல் எஸ் . சுரேந்திர மோட்டார் விபத்தில் சிக்கியதாக தெரிவிக்கப்பட்டபோதும் அவரது மோட்டார் சைக்கிள் சாதாரணமாக நிறுத்தப்படுவது போல் கொழும்பு பக்கம் நோக்கி வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அவரது ஹெல்மட் (தலைக்கவசம்) சம்பந்தப்பட்ட அரசியல்வாதியின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டது. அதேபோல் அன்று இரவு அவர் இறந்த பின்னர் அவரது அறைக்குச் சென்ற பொலிஸார் உபாலி பத்திரிகை நிறுவனத்தால் அவருக்கு வழங்கப்பட்ட நவீன புகைப்படக் கருவி (கெமரா) மற்றும் பிரபல அரசியல்வாதியின் மனைவியின் புகைப்படங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர். சகல தகவல்களும் சந்தேகத்துக்கிடமாக இருந்தபடியால் தனியாக இது தொடர்பான தகவல்களைத் தேடி சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முன்வந்த அவரது சகோதரருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் அவர் மத்திய கிழக்கு நாடொன்றுக்கு சென்று விட்டார். கொலைசெய்யப்பட்ட தினத்தன்று மாலை விமல் கந்தானைக்குச் சென்றது சம்பந்தப்பட்ட அரசியல்வாதியின் மனைவியினது உறவுமுறைச் சகோதரி மணமுடித்திருந்த அமைச்சரின் முக்கிய ஆதரவாளரான அவரது நண்பரின் அழைப்பின்பேரில் அவரைச் சந்திக்கவே. கொலைக்கான திட்டம் அங்கிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், பாதுகாப்புக்காக ஓடிச் சென்ற அமைச்சரின் வீட்டு முற்றத்தில் கடுமையாகத் தாக்கப்பட்டு கீழே விழுந்த அவரை கால்களைப் பிடித்து இழுத்துச் சென்று வீதியில் போட்டுள்ளனர். பொலிஸார் நான்கு மணித்தியாலங்களாக அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் இறப்பதற்கு சற்று முன்னரே எடுத்துச் சென்றதாகவும் "ராவய" பத்திரிகை இது தொடர்பாக மேற்கொண்ட புலனாய்வுக் கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# 1982



**சதாசிவம் சிவசண்முக மூர்த்தி (சுந்தரம்)**
**ஆசிரியர் புதிய பாதை**
**கொலை செய்யப்பட்ட தினம் 02 ஜனவரி 1982**

சதாசிவம் சிவசண்முக மூர்த்தி என்ற பெயருடைய அவர் "சுந்தரம்" என்ற பெயரிலேயே பிரபலமானார். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்க அரசியலை மேற்கொண்டு அர்ப்பணிப்புடன் அரசியல் செயற்பாட்டாளராகவும், அரசியல் பத்திரிகையொன்றை ஆரம்பித்து அதன் ஆசிரியராகவுமிருந்ததால் சரித்திரத்தில் இவரது பெயர் இடம்பெறும். தமிழ் சமூகத்தின் உரிமைகளுக்காக போராடுவதற்கு புலிகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்ட இவர் குறுகிய காலத்திலேயே அதன் அரசியல் போக்கு குறித்து விரக்தியடைந்தார். அதிலிருந்து வெளியேறி புதிய அரசியல் அமைப்பொன்றை ஆரம்பித்து 1980ல் "புதிய பாதை" என்ற பெயரில் பத்திரிகையொன்றை ஆரம்பித்தார். பின்னர் "புளொட்" என்ற பெயரில் இந்த அரசியல் குழு அழைக்கப்பட்டது. அடக்குமுறைக்கு எதிராக குரல் எழுப்பும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட "புதிய பாதை" பத்திரிகையின் ஆசிரியராக குறுகிய காலத்துக்கே கடமையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. 1982ஆம் ஆண்டு ஜனவரி 02ஆம் திகதி பத்திரிகை அச்சிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அதை அச்சிடும் "யாழ் சித்ரா" அச்சகத்தில் இருந்தபோது அங்குவந்த ஆயுதம் தாங்கிய புலிகளால் அவர் படுகொலை செய்யப்பட்டார். புலிகளின் தலைவர் பிரபாகரனே நேரடியாக வந்து இக்கொலையை மேற்கொண்டதாக புளொட் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 1984



**ராஜரத்தினம் ஜெயச்சந்திரன் (பார்த்தன்) - ஊடகவியலாளர்**

**கொலை செய்யப்பட்ட தினம் 1984 ஜுன் - ஆகஸ்ட்டுகிடையில் உள்ள ஒரு நாளில்**

திருகோணலை பன்குளத்தை வசிப்பிடமாகக் கொண்ட ராஜரத்தினம் ஜெயச்சந்திரன் பிரபலமானது அவரது உண்மைப் பெயரில் அல்ல. "பார்த்தன்" என்ற புனைப் பெயரிலேயே அவர் அழைக்கப்பட்டார். புளொட் அரசியல் பிரிவின் செயற்பாட்டாளரான அவரது அரசியல்துறைப் பெயர் பார்த்தன் என்பதுடன் அவர் ஊடகத்துறையிலும் அதே பெயரைப் பயன்படுத்தி வந்தார். புளொட் அமைப்பின் அரசியல் பிரிவு (தமிழ் ஈழம் விடுதலைக் கழகம்) ஆரம்பித்த "விடுதலை" பத்திரிகையின் ஆசிரியராக பார்த்தன் செயற்பட்டார். மட்டக்களப்பிலிருந்து இந்தப் பத்திரிகை வெளிவந்தது. புளொட் அமைப்பின் தகவல்களின் படி 1984ஆம் ஆண்டு ஜுன் - ஆகஸ்ட் மாதங்களுக்கிடையில் ஒரு நாள் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட பார்த்தன் கொலை செய்யப்பட்டுள்ளார்.

# 1986

## காவலூர் எஸ். ஜெகநாதன் - எழுத்தாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 1986

தமிழ் இலக்கியத் துறையில் வடக்கு - கிழக்கு மற்றும் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ள இலக்கியவாதிகளின் சாட்சியங்களின்படி காவலூர் எஸ். ஜெகநாதன் பிரபல சிறுகதை எழுத்தாளராவார். அவர் தமிழ் நாட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியை சகலரும் அறிந்திருந்தபோதும் கொலைசெய்யப்பட்ட தினத்தை அவர்களால் ஞாபகப்படுத்திக் கூறமுடியவில்லை. அது 1986ஆம் ஆண்டாகவிருக்கும் என அனுமானிக்கப்படுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இரசாயன கூட உதவியாளராக கடமையாற்றிய இவர் அந்நாட்களில் விடுமுறை கிடைக்கும் போதெல்லாம் அடிக்கடி யாழ்ப்பாணம் சென்று அக்கறையுடன் இலக்கிய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இந்தியாவிலிருந்து எழுத்தாளர்களை அழைப்பித்து இலக்கிய சம்பாஷணைகளை மேற்கொள்வதில் முன்னணி வகித்து செயற்பட்டுள்ளார். அந்த எழுத்தாளர்களுடனான தொடர்புகளினால் அவர் அக்காலத்தில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையிலிருந்து இந்தியா நாகப்பட்டிணம் வரை மூன்று மணித்தியாலங்களில் செல்லக்கூடிய படகுகள் மூலம் அடிக்கடி சென்று இலக்கியத் தொடர்புகளை மேற்கொண்டுள்ளார். இலக்கியவாதிகளை யாழ்ப்பாணத்துக்கும் அழைத்து வந்துள்ளார். பின்னர் குடும்பத்துடன் இந்தியா சென்ற அவர் அக்காலத்தில் அங்கிருந்து இயங்கிய தமிழ் போராட்டக் குழு ஒன்றுடன் தொடர்புகொண்டு செயற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அந்தக் குழு ஈரோஸ் அமைப்பென சிலர் கருதுகின்றனர். அத்துடன் அக்குழுவின் உள்விவகாரம் காரணமாக காவலூர் எஸ். ஜெகநாதன் சுட்டுக்கொல்லப்பட்டதாக ஒரு கருத்து நிலவுகிறது. யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையில் பிறந்த அவர்

பின்னர் அனலைத்தீவில் குடியேறி வாழ்ந்துள்ளார். அது அவரது மனைவியின் ஊராகும். "காவலூர்" என்பது ஊர்காவற்துறை தீவுக்கு வழங்கப்படும் மற்றுமொரு பெயராகும். அது அவரது மனைவியின் ஊராகும். "காவலூர்" என்பது ஊர்காவற்துறை தீவுக்கு வழங்கப்படும் மற்றுமொரு பெயராகும். அவர் எழுத்தாளராக அறிமுகமானது தமது ஊர் பெயரான காவலூர் என்பதையும் இணைத்துக்கொண்டு காவலூர் எஸ். ஜெகநாதன் என்ற பெயரிலாகும்.

# 1987



நிலந்த குணவர்தன - ஒளியமைப்பு கலைஞர்
றேணுகா அத்தநாயக்க - பொறியியலாளர்
காமிணி ஜயந்த - தொழில்நுட்ப அதிகாரி
வை. கருணாபால - சாரதி
கொலைசெய்யப்பட்ட தினம் - 05 அக்டோபர் 1987

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களான இந் நான்கு பேரும் ஒரே தினம் ஒன்றாக கொலை செய்யப்பட்டுள்ளனர். ரூபவாஹினி கூட்டுத்தாபன பலாலி இராணுவ தளத்திலிருந்து விஷேட ஒளிபரப்பு நடவடிக்கை மற்றும் அறிக்கையிடலை மேற்கொண்ட இவர்கள் கொழும்பிலிருந்து அங்கு சென்ற குழுவினராவர். ஒரு குழுவினர் விடுமுறையில் செல்வதற்கு முன்னர் மற்ற குழுவினர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்வது வழமையாகும். சம்பவம் நடந்த தினத்தன்று கடமையில் இருந்தது மேற்கூறிய நால்வர் உட்பட மேலும் சிலர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அன்று இரவு ஒளியமைப்புக் கலைஞர் நிலந்த குணவர்தன, பொறியியலாளர் றேணுகா அத்தநாயக்க மற்றும் தொழில்நுட்ப அதிகாரி காமினி ஜயந்த, சாரதி கருணாபால ஆகியோருடன் வழமைபோல் தமது தங்குமிடத்துக்கு வந்திருந்த தமிழ் அறிவிப்பாளர் விக்னேஸ்வரனை அவரது வீட்டில் விட்டு வரச் சென்றுள்ளனர். காங்கேசன்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மயிலிட்டி சந்தியில் விக்னேஸ்வரனின் வீட்டுக்குச் சென்ற இந்த நான்கு பேரும் திரும்பி வரவில்லை. வாகனமும் காணாமற் போயிருந்தது. அவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு பின்னர் கொலைசெய்யப்பட்டு எரிக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. கொழும்பிலிருந்து சென்ற ரூபவாஹினி குழுவினர் வடக்கு யுத்தம் தொடர்பான செய்திகளை கொழும்புக்கு அனுப்பியதோடு அவை நாள்தோறும் ஒளிபரப்பப்பட்டுள்ளன.

இதன் காரணமாக அப்போது பல சந்தர்ப்பங்களில் அவர்களுக்குப் புலிகளால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கொலைசெய்யப்பட்ட நிலந்த குணவர்தன ஒளியமைப்புக் கலைஞராக 1985ஆம் ஆண்டு ரூபவாஹினியில் இணைந்துகொண்ட இளைஞராவார். இவர் கொழும்பு ஹோக்கந்தர என்ற இடத்தில் வசித்து வந்தார். இளைஞரான றேணுகா அத்தநாயக்க வெயாங்கொடையை வசிப்பிடமாகக் கொண்ட பொறியியலாளராவார். இவர்கள் அனைவரும் அக்கால கட்டத்தில் இளைஞர்களாக இருந்தனர். இவர்கள் ஓய்வுபெறும் வயது வரை அவர்களுக்குரிய சம்பளத்தையும் ஏனைய கொடுப்பனவுகளையும் அவர்களது குடும்பத்தினருக்கு தொடர்ந்து வழங்க ரூபவாஹினி கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. சாரதி கருணாபால 2000ஆம் ஆண்டு ஓய்வுபெறும் வயதைக் கடந்துள்ளார். அவர்கள் நால்வரும் கொலைசெய்யப்பட்ட தினம், அதிகாலை ஒளிபரப்பு செய்யப்பட்ட தினம், அதிகாலை ஒளிபரப்பு தளத்தில் எடுத்துக் கொண்ட புகைப்படம் இத்துடன் வெளியிடப்படுகின்றது. படத்தின் இடமிருந்து றேணுகா அத்தநாயக்க, நிலந்த குணவர்தன மற்றும் கருணாபால நின்று கொண்டிருக்கிறார். காமினி ஜயந்த அமர்ந்திருக்கின்றார்.

## குமரையா கமலதாஸ் - அச்சக ஊழியர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 13 அக்டோபர் 1987

யாழ். "உதயன்" பத்திரிகையின் அச்சக ஊழியரான குமரையா கமலதாஸ் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டார். இனப்பிரச்சினைக்கு தீர்வாக 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மீறும் சம்பவங்கள் செப்டெம்பர் மாதம் முதலே ஆரம்பமானது. எல்.ரீ.ரீ.ஈ. இந்திய அமைதிகாக்கும் படைக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் அக்டோபர் மாதமளவில் தாக்குதலை துரிதப்படுத்தியது யாரென்ற கேள்வி மாத்திரம் எஞ்சியதுடன் நிலைமை மோசமடைந்தது. அக்டோபர் 10ஆம் திகதி தாக்குதல்

இடம்பெற்றதுடன் மக்கள் நினைக்க முடியாத வகையில் ஷெல் வெடிகள் வந்து விழுந்தன. அக்டோபர் 13ஆம் திகதி இவ்வாறு ஏவப்பட்ட ஷெல் தாக்குதலில் "உதயன்" பத்திரிகையின் அச்சக ஊழியரான கமலதாஸ் கொல்லப்பட்டார்.



## அருண கஹந்த கமகே - கவிஞர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 19 அக்டோபர் 1987

பிரபல எழுத்தாளரான பியசேன கஹந்தகமகேயின் சகோதரரான அருண கஹந்தகமகே ஒரு கவிஞர். பல்வேறு பத்திரிகைகளுக்கு கவிதைகளை எழுதிய அவர் அரச சார்பற்ற நிறுவனமொன்றால் வெளியிடப்பட்ட "மிஷன்" என்ற பத்திரிகையிலும் கடமையாற்றியுள்ளார். கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரான அவர் யுத்தத்துக்கு விரோதமான இடதுசாரியாகவிருந்ததுடன் தனவந்த வர்க்கத்துக்கு எதிரான அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் சார்ந்து அநீதிக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டதால் பிரதேச மக்கள் மத்தியில் பிரபலமடைந்திருந்தாக கூறப்படுகிறது.

காலி அம்பலாங்கொடை, வேரங்கெட்ட கொட என்ற கிராமத்தில் பிறந்த அவர் பின்னர் அம்பாறை உகண பிரதேசத்தில் வாழ்ந்துள்ளார். வாழ்ந்த இடத்திலிருந்து வெகு தொலைவில் பொலன்னறுவை, பிம்புரத்தாவ பிரதேசத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றின் சமூக அபிவிருத்தி அதிகாரியாக கடமையாற்றி வந்தார். நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் பல நாட்களுக்குப் பின்னர் வீட்டுக்கு வந்திருந்த அவர் 1987 அக்டோபர் மாதம் 19ஆம் திகதி நண்பரொருவரை சந்திப்பதற்காகச் சென்றுள்ளார். அம்பாறை கண்டி பிரதான வீதியில் அரந்தலாவ பிரதேசத்தில் 29ஆவது மைல்கல் அருகே இராணுவ சீருடைக்குச் சமமான சீருடை அணிந்திருந்த சிலரால் இவரது மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டதாக மோட்டார் சைக்கிளுக்குப் பின்னால் வந்த இ.போ.ச. பஸ் வண்டியின் சாரதி கண்டுள்ளார். பிரதேசத்தில் பிரபலமான நபரான அவர் குறித்து சாரதி

நன்கறிந்தவராவார். அருண கஹந்த கமகே என்ற அந்த மனிதாபிமானக் கவிஞர் அந்தப் பிரதேசத்திலேயே சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். எல்.ரீ.ரீ.ஈயினரால் 31 பௌத்த பிக்குகள் வெட்டியும் குத்தியும் கொலை செய்யப்பட்டது இந்தப் பிரதேசத்திலேயேயாகும். அத்துடன் அச்சம்பவம் இடம்பெற்றது ஜுன் மாதம் 2ஆம் திகதியாகும். இதன் காரணமாக இக்கொலையும் எல்.ரீ.ரீ.ஈ. யினரால் நடத்தப்பட்ட கொலையென நம்பப்படுகிறது. இருந்தும் அவர் மிக நெருங்கிப் பழகிய, கண்டியில் வசிக்கும் சிரேஷ்ட சுயாதீன ஊடகவியலாளரைப் போல் மேலும் சிலரின் சந்தேகங்களின் படி இக்கொலை அரசியல் கொலையாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது. சுமார் 35 பயணிகள் பயணம் செய்த பஸ் வண்டியை தாக்கும் சந்தர்ப்பத்தை விட்டுவிட்டு ஒரு நபரைப் பிடிக்க எல்.ரீ.ரீ.ஈ.யினர் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பது இந்த சந்தேகத்தை உறுதிப்படுத்தவுள்ள ஒரு காரணமாகும்.



## நந்தன மாரசிங்க (37) - கலைஞர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 29 நவம்பர் 1987

கவிஞர் பாடலாசிரியர் போலவே கலை நடவடிக்கைகளை கட்டியெழுப்பியவர் நந்தன மாரசிங்க. அனுராதபுரத்தில் பிறந்து அனுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றுள்ளார். இளம் வயதிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) அரசியலுடன் இணைந்து அதன் தலைவர் விஜேவீரவின் மிக நெருங்கியவராக இருந்துள்ளார். பலமுறை சிறை சென்றும் மிருகத்தனமாக தாக்குதலுக்குள்ளாகி சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். ஒரு முறை விஜேவீரவை மீட்டெடுக்க, யாழ். சிறைச்சாலையைத் தாக்குவதற்கும் தலைமை வகித்துள்ளார். அனுராதபுர சிறைச்சாலையிலிருந்த தமது சகாவை மீட்டெடுக்க தாக்குதலொன்றையும் முன்னின்று மேற்கொண்டார். 1973ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட இவர் 1977ஆம் ஆண்டு விடுதலையானார். சிறைச்சாலையில் மறுசீரமைக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் (இரகசிய) மத்திய செயற்குழுவிலும் இவர் அங்கம் வகித்தார்.

சிறையிலிருந்து விடுதலையான அவர் புரட்சிகர அரசியலுக்காக முன்னின்று பாடுபட்டார். கலை மூலம் மக்களுக்காக மக்களைக் கவரலாம் என்ற நம்பிக்கையுடன் விடுதலைக் கீதங்களை எழுதினார். அரசியல் கருத்து மோதல் காரணமாக மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து அவருக்கு விலக வேண்டியதாயிற்று. கட்சியை விடுத்து கலை மூலம் மக்களுக்கு சேவை செய்வதை நோக்கமாகக் கொண்ட அவர் கண்டியில் மக்கள் கலைக் கேந்திரத்தை ஆரம்பித்தார். பின்னர் அது அனுராதபுரத்திற்கும் குருநாகலைக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

1984ஆம் ஆண்டு விசாரத குணதாச கப்புகே உட்பட பல கலைஞர்களுடன் "காலய ராவய" என்ற கலை நிகழ்ச்சி அனுராதபுரத்தில் ஆரம்பமானது இவரது தலைமையின் கீழேயே. 1987இல் எழுந்த மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) கொலை அரசியலை விமர்சித்ததுடன் அந்த முன்னணியின் தலைவர்களில் ஒருவரான இவரது கிளர்ச்சி அரசியலை பொறுக்க முடியாத மக்கள் விடுதலை முன்னணியின் கொலைப்பட்டியலில் இவரது பெயரும் சேர்க்கப்பட்டது. இரு குழந்தைகள் மற்றும் மனைவியுடன் வாழ்வதற்காக அவர் அனுராதபுரம் ஞாயிறு மக்கள் சந்தையில் பாதணி வியாபாரத்தில் ஈடுபட்டார். 1988 நவம்பர் மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் வழமைபோல் ஒரு சந்தை நாளாகவிருந்தது. மோட்டார் சைக்கிளில் வந்த கொலையாளிகள் இருவர் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டு இவரைக் கொலை செய்து விட்டு தப்பிச் சென்றனர்.



**சத்தியபால வன்னிகம - எழுத்தாளர் - கடத்தப்பட்ட தினம் 18 நவம்பர் 1987**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 1988 ஜனவரி இறுதி வாரத்தில**

1987 நவம்பர் மாதம் 18ஆம் திகதி மித்தெனிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சத்தியபால வன்னிகம 1988 ஜனவரி இறுதிப் பகுதியில் கொலைசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அந்த நாட்களில் தங்கல்ல வெட்டிய

பகுதியில் எரிக்கப்பட்டது இவரது உடல் என தெரிவிக்கப்படுகிறது. ருஹுணு பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பீடத்தின் விரிவுரையாளரான இவர் எழுத்தாளராகவும் பிரபலமடைந்திருந்தார். சாதி அடக்குமுறையை விமர்சித்து "கின்னென் உப்பன் மினிஸ்சு" (நெருப்பில் பிறந்த மனிதர்கள்) என்ற மேடை நாடகம் அவரால் தயாரிக்கப்பட்டதாகும். "திவயின" பத்திரிகையில் எட்டாம் பக்கத்துக்கு "சுனில் விக்ரம" என்ற பெயரில் தொடர் கட்டுரைகளையும் அவர் எழுதிவந்தார். அம்பாந்தோட்டை காரியமடித்த கிராமத்தில் 1950ஆம் ஆண்டு பிறந்த இவர் சிறிது காலம் பௌத்த துறவியாக இருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் "தத்துவம்" தொடர்பான கௌரவ பட்டத்தைப் பெற்று பட்டதாரியானார். மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) ஆதரவாளராக பிரசித்தமானார். கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்படி ஆர்ப்பாட்டங்களை நடத்தி, பாடசாலை மாணவர்களையும் இணைத்துக் கொண்டு ருஹுணு பல்கலைக்கழகத்திலிருந்து மாத்தறை வரையில் மக்கள் விடுதலை முன்னணி ஊர்வலத்தில் கலந்துகொண்டு இறுதியில் நடைபெற்ற கூட்டத்திலும் அவர் முக்கிய பேச்சாளராகவிருந்தார்.

1987ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி வீட்டிலிருந்து பல்கலைக்கழகத்துக்குச் செல்வதற்காக அவர் தயாரான போது மித்தெனிய பொலிஸார் இவரைக் கைதுசெய்துள்ளனர். இவரை விடுதலை செய்யும்படி கோரி 1988 ஜனவரி 22ஆம் திகதி அனைத்துப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். இருந்தும் அந்த மாதத்தின் இறுதியில் அவர் கொலைசெய்யப்பட்டு எரியூட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## கே.எம். வாசகர் - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 1987



1968ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்துகொண்ட கே.எம். வாசகர் தமிழ் தேசிய சேவையில் சிறந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் கலைஞராகவும் கடமையாற்றியுள்ளார். 1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற கலவரத்தில் உயிர் தப்பினார். கொழும்பில் வாழ்வது குறித்து அவரது குடும்பத்தினர் அச்சம் கொண்டிருந்தனர். மனைவி மற்றும் பிள்ளைகளைப் பார்க்க யாழ்ப்பாணம் சென்ற இவரை அவரது குடும்பத்தினர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் வேலையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகாமல் வீட்டிலிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 1987ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் இலங்கை வந்த இந்திய சமாதானப் படை யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவிருந்த போது ஏற்பட்ட மோதல் காரணமாக சிறந்த ஊடகவியலாளரான இவர் கொலையுண்டார். உறுதியாக இவர் மறைந்த திகதியை தேடிக்கண்டு பிடிப்பது கஷ்டமாகவிருந்த போதும் அக்கால கட்டத்தில் தமிழ் சேவையிலிருந்த சிரேஷ்ட ஊடகவியலாளர்களின் ஞாபகத்தின் படி இந்திய அமைதிப்படைக்கும் எல்.ரீ.ரீ.ஈ.யினருக்கும் முதன் முதலாக மோதல்கள் ஏற்பட்ட கால கட்டத்தில் இவர் கொல்லப்பட்டார். இவர் வாழ்ந்த பிரதேசத்தை நோக்கி ஷெல் வீச்சு இடம்பெற்ற போது அதில் சிக்கி இவர் கொல்லப்பட்டுள்ளார்.

## எஸ். நடராஜா - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 1987



1951ஆம் ஆண்டு முதல் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கொழும்பு கொட்டா வீதியில் இயங்கிய காலம் முதல்) கூட்டுத்தாபனத்தில் ஊடகவியலாளராக கடமையாற்றிய அவர் தேசிய தமிழ் சேவையின் நிர்வாகச் செயலாளராகவிருந்து ஓய்வு பெற்றார். தமிழ் சேவையில்

முதலாவதாக விளையாட்டு நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய பெருமையும் இவரைச் சாரும். ஓய்வு பெற்ற பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள சொந்த வீட்டுக்குச் சென்ற இவர் 1987ஆம் அண்டில் ஒரு நாள் வயல் வெளியில் நடந்து சென்றபோது ஷெல் வீச்சில் சிக்கி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். 1987ஆம் ஆண்டு கைச்சாத்தான இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்துடன் இலங்கைக்கு வந்த இந்திய அமைதிகாக்கும் படையினர் யாழ். குடாநாட்டு பாதுகாப்புக்கு பொறுப்பாகவிருந்தனர். அந்த வருடத்திலேயே அக்டோபர் மாதம் 10ஆம் திகதி முதல் ஷெல் தாக்குதலுடன் மோதல்களும் ஆரம்பமானது.

# 1988



**விஜய குமாரதுங்க (43) - நடிகர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் 16 பெப்ரவரி 1988**

கொலைசெய்யப்பட்டபோது விஜய குமாரதுங்க பிரபலமிக்க நடிகராகவும் பிரபலமிக்க இடதுசாரி இயக்கம் சார்ந்த அரசியல்வாதியாகவும் விளங்கினார். பல சினிமாப் படங்களில் பங்களிப்புச் செய்த அவர் மக்களது மனத் திரையில் ஒரு வீரராகவும் பரிணமித்தார். பாடிய ஒரு சில பாடல்கள் மூலம் அவர் ஒரு சிறந்த பாடகராகவுமிருந்தார். அதேபோல் அவர் இனவாதம் தலைதூக்கிய சமூக அரசியல் சூழ்நிலைக்குள் அச்சமின்றி நேர்மையுடன் இனங்களுக்கிடையில் சமாதானம் மற்றும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்காக உழைக்கும் தலைவராகவும் விளங்கினார். மனித சமூகத்தில் நீதி, சமத்துவம் மற்றும் நேர்மைக்காக செயல்பட்டவராவார்.

இலங்கை மக்கள் கட்சியின் தலைவரான அவர் மக்களின் உரிமைகளை வெற்றிகொள்வதற்கான அரசியல் வழிமுறைக்காக அனைவரதும் இணைந்த சக்தியில் நம்பிக்கை வைத்து ஐக்கிய சோசலிச முன்னணி என்ற கட்சியை கட்டியெழுப்புவதில் முன்னணி வகித்தார். பெரும் ஜனத்திரளுக்கு மத்தியில் அவரது இறுதிக் கிரியைகள் நடைபெற்றது. அவரது அரசியல் முன்னணியை உத்தியோகபூர்வமாக அறிவித்து அதன் தலைமைத்துவத்தை பொறுப்பேற்கத் தயாராகவிருந்த காலம் பெப்ரவரி 21ஆம் திகதியாகும். 1988ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி காலை கொழும்பு நாரஹேன்பிட்டியிலுள்ள அவரது வீட்டுக்கு முன்னால் வைத்து அவரது முகம் சிதறும் வகையில் மக்கள் விடுதலை முன்னணி கொலையாளிகள் சுட்டுக்கொலை செய்தனர்.

அவர் பின்னாளில் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட சந்திரிகா பண்டாரநாயக்க

குமாரதுங்கவை திருமணம் செய்திருந்தார். இவர் ஒரு மகளுக்கும் மகனுக்கும் தந்தையாவார்.

**சந்திரசிரி வீரவிக்ரம சிங்கசேன (24) - பத்திரிகை விற்பனைப் பிரதிநிதி**
**ஜீ.பி. குணதாச - விற்பனை உதவியாளர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 17 மே 1988**

பத்திரிகை விற்பனை முகவர் நிலையமாகவிருந்த வெலிமட விஜேவிக்ரம புத்தக நிலையத்தில் லேக்ஹவுஸ் பத்திரிகை விற்பனை செய்ததால் கலவர காலத்தில் இதுவும் கொலைப்பட்டியலில் சேர்க்கப்பட்டது. 1988 மே மாதம் 17ஆம் திகதி அல்லது அதற்கண்மைய நாளில் அங்கு வந்த துப்பாக்கிதாரிகள் புத்தக நிலையத்தை தீயிட்டுக் கொளுத்தியதுடன் அதன் உரிமையாளரது உறவினரான சந்திரசிரி வீரவிக்ரம சிங்கசேன என்ற இளைஞரையும் உதவியாளரான ஜீ.பி. குணதாச என்பவரையும் சுட்டுக் கொன்றனர்.



**கந்தையா கந்தசாமி - பத்திரிகை உரிமையாளர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 1988 ஜுன் / ஜுலை**

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த மனித உரிமைகள் பத்திரிகையான "சட்டடே ரிவியூ"வை சட்டத்தரணி கந்தையா முதலீடு செய்து ஆரம்பித்தார். ஊடகவியலாளராக இருக்காதபோதும் அவரது நோக்கம் கொழும்பை தளமாகக் கொண்ட ஊடகங்கள் மூலம் தெரிவு செய்து வடிகட்டி வழங்கும் செய்திகளை விட உண்மையான நிலையை தமது மக்களுடன் பகிர்ந்து கொள்வதாகும். 1981 ஜனவரி 5ஆம் திகதி வெளியான "சட்டடே ரிவியூ" முதலாவது இதழில் அவர் எழுதிய குறிப்பில் அவருக்குள்ளிருந்த ஊடகம் தொடர்பான அறிவு வெளிப்பட்டது. இலங்கையில் மூன்று மொழிகளிலும் வெளிவரும் தினசரிகள் 13க்கும் குறைவல்ல. அதில் ஒன்றைத் தவிர ஏனைய அனைத்தும் தெற்கில்

கொழும்பிலிருந்தே வெளிவருகின்றன. அதிலொன்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகையாகும். இதன் பொருள் என்னவென்றால் வடக்கிலோ அல்லது கிழக்கிலோ இடம்பெறும் சம்பவமொன்றை தெற்கிற்கு தகவல் அனுப்பி தெற்கில் அவற்றை தெரிவுசெய்து, வடிகட்டி, பதப்படுத்தி அல்லது திரிபுபடுத்தி முடிந்தால் தாளித்து அவற்றை மீண்டும் வடக்கிலுள்ள வாசகர்களுக்கு மீண்டும் அனுப்புவது தான் இயல்பு. வாராந்தம் வெளிவரும் எமது பத்திரிகைகள் மூலம் இந்தத் தகவல்களை தலை கீழாகத் திருப்புவதற்கு மற்றும் அதன் மூலம் தற்போதைய சமநிலையற்ற தன்மையை நீக்க நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையின் உரிமையாளரான அவரது கவனம் மனித உரிமைகள் மற்றும் புனரமைப்பு குறித்தே திரும்பியது. யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் 1930ஆம் ஆண்டு பிறந்த இவர் இலங்கை பல்கலைக்கழகத்தில் கணித பட்டதாரியானார். பின்னர் சட்டத்தரணியானார்.

சட்டடே ரிவியூ பத்திரிகை பல தடவைகள் தடைசெய்யப்பட்ட வேளைகளில் அதை மீண்டும் ஆரம்பிக்க அவரது பங்களிப்பு குறைவின்றி கிடைத்தது. இருந்தும் இறுதியாக தடைசெய்யப்பட்டபோது அவரது கொலைச் சம்பவமும் இடம்பெற்றதால் சட்டடே ரிவியூ பத்திரிகை மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை.

## ஹென்றி பமுணுவ - ஊடக ஊழியர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 02 அக்டோபர் 1988



தொழில் ரீதியாக "எத்த" பத்திரிகையின் அச்சகத்தில் அச்சுக் கோர்க்கும் (composing) பிரிவின் தலைவராகக் கடமையாற்றிய ஹென்றி பமுணுவ ஊடகவியலாளராகவும் பத்திரிகைக்கு கட்டுரைகளை எழுதி வந்தார். அதேபோல் "எத்த" பத்திரிகையை அச்சிட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்டே பிரதேச செயற்குழுத் தலைவராக

இடதுசாரி அரசியலில் ஈடுபட்ட அவர் மாகாண சபைத் தேர்தலில் ஒரு வேட்பாளராகப் போட்டியிட்டார். கொழும்பு மாவட்டத்தில் மகரகமவிலுள்ள அவரது வீட்டுக்கு 1988ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் திகதி வந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) துப்பாக்கிதாரிகள் அவரது மனைவி பிள்ளைகளுக்கு முன்னாலேயே அவரைச் சுட்டுக்கொலை செய்தனர்.



## டி.பி. விஜேசூரிய - கலாசார செயற்பாட்டாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 03 அக்டோபர் 1988

குருணாகலை மாவட்டத்திலுள்ள பொல்பித்திகம உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த தொரவேருவ கிராமத்தில் பிறந்த டி.பி. விஜேசூரிய கலைஞர், முற்போக்கு அரசியல் முன்னோடி மற்றும் இடதுசாரி அரசியல் தலைவராவார். மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) யால் 1988 அக்டோபர் 03ஆம் திகதி காலை 10.00 மணியளவில் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். 1971ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் அரசியலுக்காக தனது உயர் கல்வியையும் துறந்த அவர் சில காலம் சிறைவாசம் அனுபவித்து விட்டு விடுதலையாகி அந்த அரசியலைத் துறந்து மக்கள் சேவைக்காக சமூக இயக்கங்கள் பலவற்றில் முன்னணி வகித்தவராவார். கொலைசெய்யப்பட்ட போது அவர் இலங்கை மக்கள் கட்சியின் குருணாகலை மாவட்டத் தலைவராகவிருந்ததுடன் மாகாண சபை உறுப்பினராகவுமிருந்தார். தேசிய ஒற்றுமைக்காக பாடுபட்ட அவர் பல சமாதானக் குழுக்களில் அங்கம் வகித்து பேச்சுக்களில் கலந்துகொண்டுள்ளார். விவசாயிகளின் ஆர்ப்பாட்டங்கள், குடிநீர் வரி மீதான ஆர்ப்பாட்டங்கள் போன்ற பல போராட்டங்களில் கலந்துகொண்டு நீதி நேர்மையான சமூகத்தை கட்டியெழுப்ப உழைத்தார். கலைகளை நேசித்த அவர் கலை மூலம் மக்களை அறிவுறுத்த முடியுமென்று நம்பினார். இதற்காக அவர் "வீர புரன் அப்பு" வீதி நடனக் குழுவொன்றை அமைப்பதில் முன்னின்று செயற்பட்டவராவார். நேர்மை மிக்க சமூகத்துக்கான போராட்டங்களில் பிரதேச மக்களின் அறிவுப்

பசியின் தேவையை உணர்ந்து கொண்ட அவர் கிராம மக்களின் முயற்சியில் "கோர்கி நூலகத்தை" ஆரம்பிப்பதிலும் முன்னோடியாகவிருந்தார். நடிப்பில் ஆர்வம் காட்டிய அவர் சுவரொட்டிகளை வரைவதிலும் சிறந்து விளங்கினார். இவர் முன்னெடுத்தவைகளையும் இவரது பயணத்தையும் பொறுத்துக்கொள்ள முடியாததால் இவர் மக்கள் விடுதலை முன்னணியின் கொலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டார். காணியற்ற நூற்றுக்கணக்கான ஏழை அப்பாவிக் குடும்பங்களுக்கு காணி பகிர்ந்தளித்து விட்டு திரும்பிக் கொண்டிருக்கும்போது மடகல்ல பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியில் மறைந்திருந்த துப்பாக்கிதாரிகள் அவரையும் அவருடன் வந்த அவரது நண்பர்கள் மூவரையும் ஒன்றாகச் சுட்டுக் கொன்றனர்.



## ஜே.ஈ. குணசேகர - இலக்கியவாதி, மொழிபெயர்ப்பாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 19 அக்டோபர் 1988

யுத்தத்திற்கும் காலனித்துவத்திற்கும் எதிரான சூரியகாந்தி இயக்கத்தின் மூலம் செயற்பாட்டாளரான ஜே.ஈ. குணசேகர மக்கள் மத்தியில் அவரது இலக்கியப் படைப்புகளுக்காக பிரபலமாகியிருந்தார். விஷேடமாக சிறுவர்களுக்கான பல நூல்களை எழுதியுள்ளதுடன் சோவியத் கலாசார நிலையத்தால் வெளியிடப்பட்ட பல சிறுவர் நூல்களையும் இவர் மொழிபெயர்த்துள்ளார். 1985ஆம் ஆண்டு அவருக்கு சிறுவர் இலக்கியத்துக்கான அரச இலக்கிய விருதும் கிடைத்தது.

தொழிலில் இவர் ஆசிரியராகவிருந்தபோதும் திக்கி திக்கிப் பேசும் தன்மை கொண்டிருந்ததால் அதிலிருந்து இராஜினாமா செய்து முழுநேர மொழிபெயர்ப்பாளராகவும் சுயாதீன இலக்கிய நடவடிக்கைகளிலும் சமூக செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். ஹோமாகம, ஹபரகட என்ற இடத்தில் வசித்து வந்த அவர் கொலைசெய்யப்படும் போது ஹபரகட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையின் செயலாளராகவும் கடமையாற்றி வந்தார். நாடு முழுவதும்

இடதுசாரிகள் மற்றும் யுத்தத்துக்கு எதிரான சமாதான விரும்பிகள் கொலைசெய்யப்பட்ட பயங்கரவாத சூழல் நிலவிய காலத்தில் அதாவது 1988ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ஆம் திகதி அவரது வீட்டுக்குள் வைத்தே துப்பாக்கிதாரிகளின் தோட்டாவுக்கு இறையானார்.



## டி.எம்.டி. சந்திரவிமல - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 17 நவம்பர் 1988

இடதுசாரியான தந்தையின் அடிச் சுவட்டை பின்பற்றிச் சென்று இலங்கை சமசமாஜக் கட்சி அரசியலுடன் டி.எம்.டி. சந்திரவிமல தமது இளம் பருவத்தை ஆரம்பித்துள்ளார். தொழில் ரீதியாக அவர் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியராகவிருந்ததுடன் அகில இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் செயற்பாட்டாளராகவும் இருந்தார். பின்னர் நவ சமசமாஜக் கட்சியில் இணைந்து கொண்ட அவருக்கு இடதுசாரியென்பதால் தொழில் புரிந்த இடத்தில் பல்வேறு இடைஞ்சல்களுக்கு உள்ளாக நேர்ந்தது. பல சந்தர்ப்பங்களில் சிறை செல்ல வேண்டியும் ஏற்பட்டது. இருந்தும் சமூகத்தில் ஒரு புரட்சிகர மாற்றத்துக்கான அவரது நம்பிக்கையை தகர்க்க இவற்றால் முடியாமற் போனதுடன் கொலை செய்யப்படும் போது அவர் நவ சமமாஜக் கட்சியின் முழுநேர அரசியற் குழு உளுப்பினராக செயற்பட்டார். அக்கட்சியால் வெளியிடப்பட்டுவரும் "ஹரய" பத்திரிகையின் அரசியல் கட்டுரையாளராகவும் ஏனைய ஊடக நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் அவரது முழுநேர அரசியல் வாழ்வில் உள்ளடக்கப்பட்டிருந்தது. கொழும்பு மாவட்டத்தின் பிட்டகோட்டே பிரதேசத்தில் குடியிருந்த இவர் எஹலிய கொடையை பிறப்பிடமாகக் கொண்டவர். 1988 நவம்பர் 17ஆம் திகதி கொழும்பு கடுவெலயில் நடைபெற்ற இலங்கை மக்கள் கட்சியின் அபேட்சகர் ஒசி அபேகுணசேகரவின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் மீதான குண்டுத் தாக்குதலில் சந்திரவிமல் கொல்லப்பட்டார். அப்போது அவருக்கு இரண்டு குழந்தைகள் இருந்தனர்.

## நெல்சன் கருணாரத்ன - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 1988 நவம்பர் 23

கலேவெல பிரதேசத்தில் லேக்ஹவுஸ் நிருபராக செயற்பட்ட நெல்சன் கருணாரத்ன மாத்தளை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் ஏகநாயகவின் செயலாளராகவும் சிறிது காலம் கடமையாற்றியுள்ளார். 1987ஆம் ஆண்டு இந்தியா இலங்கை சமாதான ஒப்பந்தத்துக்கு ஆதரவாக செயற்பட்டவரெனவும் தெரிய வருகிறது. 88, 89 காலப்பகுதியில் கொலைகள் மற்றும் வன்முறை சம்பவங்கள் குறித்து செய்தி எழுதியதும், இவர் கொலை அச்சுறுத்தலுக்கு உட்பட ஒரு காரணமாக இருந்தது. 1988 நவம்பர் 23ஆம் திகதி வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த போது நோயாளி ஒருவருக்கு கடும் சுகயீனம் ஏற்பட்டுள்ளதாக ஒருவர் வீட்டின் கதவை தட்டியுள்ளார். அவரது மனைவி கதவைத் திறந்த போது கைத்துப்பாக்கியுடன் ஒருவர் உள்ளே நுழைந்துள்ளார். நெல்சன் பின் வாசல் வழியாக வெளியேறி ஓடும் போது கைத்துப்பாக்கியை வைத்தீருந்த நபர் விரட்டிச் சென்று அவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். தோளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கீழே விழுந்த நெல்சனை நோக்கிச் சென்ற கொலையாளி மார்பில் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து அவரை கொலை செய்துள்ளார்.

## எச்.ஈ. தயாநந்த - எழுத்தாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 02 டிசம்பர் 1988



இலங்கை வங்கியின் அதிகாரியான எச்.ஈ. தயாநந்த "திவயின" பத்திரிகைக்கு தொடர்ந்து எழுதிவந்த கட்டுரைகள் காரணமாக ஊடகத் துறையில் பிரபலமானார். "திவயின" தினசரிப் பத்திரிகையில் அவர் எழுதிவந்த "இடதுசாரி தகவல்" என்ற தலைப்பிலான கட்டுரைகள் பிரபலமடைந்தன. அதேபோல் ஊடகவியலாளர் சுனில் மாதவ தொகுத்தளித்த ஜனரஞ்சக "எட்டாம் பக்கம்" என்ற பகுதிக்கு காத்திரமான கட்டுரைகளை எழுதி வந்தார். எழுத்தாளரான இவர் கவிஞர் மோனிகா ருவன் பத்திரன தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட

சுயாதீன எழுத்தாளர் முன்னணியின் இணைச் செயலாளராகவும் கடமையாற்றி வந்தார். தயாநந்தவின் கொலையுடன் இந்த எழுத்தாளர் முன்னணி இயங்கவில்லை. தமது மனைவிக்கு முதலாவது குழந்தை பிறந்துள்ளதென்ற தகவல் கிடைத்து அவர் வீடு நோக்கி சென்று கொண்டிருக்கையில் கொம்பனித் தெரு பெற்றோல் நிலையத்துக்கு முன்னால் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு எதிரான மாணவர் அமைப்பினால் பல்கலைக்கழகங்களில் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் முக்கிய பேச்சாளராகவிருந்தார். மாத்தறையில் பிறந்த இவர் ஐந்து பேரைக் கொண்ட குடும்பத்தில் மூத்தவராவார்.

### என்.சீ.எம். இஸ்மயில் - பிரதேச ஊடகவியலாளர் - வாழைச்சேனை
### கொலைசெய்யப்பட்ட தினம் - டிசம்பர் 1988

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள வாழைச் சேனையில் வசித்து வந்த என்.சீ.எம். இஸ்மாயில் வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளின் பிரதேச செய்தியாளராக செயல்பட்டு வந்தார். பத்து வருடங்களுக்கு மேலாக செய்தியாளராக செயற்பட்டு வந்த இவர் ஒரு ஆசிரியராவார். இவர் 1942ஆம் ஆண்டு பிறந்தவர். கிழக்கு மாகாண மக்கள் மிக மோசமான யுத்த சூழ்நிலைக்குள் வாழ்ந்து வந்தனர். 1988ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கும் இந்திய அமைதி காக்கும் படையினக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. இது போன்ற மோதல் இடம்பெற்ற டிசம்பர் மாதம் ஒரு நாள் இஸ்மாயிலும் அவரது நண்பரொருவரும் வாழைச்சேனை பிரதான பீதியில் உரையாடிக் கொண்டிருந்த போது அருகிலேயே ஒரு ஷெல் விழுந்து வெடித்தது. இந்த ஷெல்லின் ஒரு பகுதி அவரது நெஞ்சுப் பகுதியை துளைத்துச் சென்றது. இஸ்மாயில் அந்த இடத்திலேயே இறந்தார்.

## எஸ். செல்வராஜா - ஊடகவியலாளர் கொலை செய்யப்பட்ட தினம் - 1988

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை மயிலிட்டியில் வாழ்ந்து வந்த எஸ். செல்வராஜா லேக் ஹவுஸ் நிறுவனத்தால் வெளியிடப்படும் தினகரன் பத்திரிகையின் யாழ் மாவட்ட விஷேட நிருபராக செயற்பட்டு வந்தார். எல்.ரீ.ரீ.ஈ, அமைப்புக்கும் இந்திய அமைதிகாக்கும் படையனருக்குமிடையே இடம்பெற்று வந்த மோதலில் யாழ் மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். 1988 ஆம் ஆண்டு ஒரு நாள் எல்.ரீ.ரீ.ஈயினரால் எஸ். செல்வராஜா கொலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்திய அமைதி காக்கும் படையினர் யாழ்ப்பாணத்தில் தரித்து நின்ற காலத்தில் இவர் கொல்லப்பட்டார் என அறிந்திருந்தவர்கள் இவர் எப்போது எந்த மாதம் கொல்லப்பட்டார் என்பதை அறிந்திருக்கவில்லை.

# 1989

## டி.என்.எஸ். பத்திரன - ஊடக ஊழியர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 24 ஜனவரி 1989

"ஹரய" பத்திரிகையின் ஒப்பு நோக்காளராகவிருந்த டி.என்.எஸ். பத்திரண பத்திரிகை தொகுப்பு வேலைகளிலும் ஈடுபட்டு வந்தார். "ஹரய" பத்திரிகையை வெளியிடும் நவ சமசமாஜக் கட்சியின் முழுநேர அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தார். மாணவப் பருவத்தில் வித்தியாலங்கார பிரிவேனாவின் மாணவ தலைவராகவும் இருந்துள்ளார். இடதுசாரிகளை வேட்டையாடி வந்த மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி) 1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி பத்திரணவையும் வேட்டையாடினர். ஒரு மகனுக்கும் மகளுக்கும் தந்தையான இவர் கொழும்பு கொலன்னாவையில் வாடகை வீடொன்றில் வசித்து வந்தார். இவர் கொலையுண்டதன் பின் இவரது குடும்பத்தினர் மனைவியின் பெற்றோர் வசித்த மொனறாகலை பிரதேசத்துக்குச் சென்றுள்ளனர். இவர் தெனியாய பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

## ஆனந்த நவரத்ன - ஊடகவியலாளர் / எழுத்தாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 25 ஜனவரி 1989

கண்டி நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட நவரத்ன நவ சமசமாஜக் கட்சியின் முழுநேர அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் அக்கட்சியால் வெளியிடப்பட்ட "ஹரய" பத்திரிகையின் ஆசிரிய பீட உறுப்பினராக ஊடகத் துறையிலும் ஈடுபட்டு வந்தார். கவிஞராகவும் கலை விமர்சகராகவும் விஷேடமாக இனப்பிரச்சினை தொடர்பாக காத்திரமான பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூலொன்று "தேசிய பிரச்சினை" என்ற பெயரில்

வெளிவந்துள்ளது. கொழும்புக்கும் கண்டிக்குமிடையே பயணம் செய்து கொண்டு அரசியல் மற்றும் ஊடக வாழ்க்கையை மேற்கொண்ட இவர் 1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி கண்டியிலுள்ள தனது வீட்டுக்குச் சென்றிருந்த போது கொலை செய்யப்பட்டார். வீட்டுக்கு வந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) துப்பாக்கிதாரிகள், நவ நமசமாஜக் கட்சியின் செயற்பாட்டாளரான இடதுசாரியான ஆனந்தவின் தந்தை, மூன்று சகோதரர்கள் உட்பட அவருடன் சேர்த்து ஐவர் ஒரே நேரத்தில் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். இளைஞரான இவர் திருமணம் முடித்தவராவார்.

## பீ.எம். வீரகோன் பண்டார (50) - கலாசார செயற்பாட்டாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் -09 பெப்ரவரி 1989

வீரகோன் மஹத்தயா என்ற பெயரில் பிரசித்தமான வீரகோன் பண்டார கட்சி பேதங்களின்றி கிராமத்தின் முற்போக்காளர்களுடன் இணைந்து சமூக அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு சமூக மற்றும் பொது வேலைகளுக்கு முக்கிய பங்களிப்புச் செய்தவராவார். சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் பல்வேறு அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டு செயல்பட்டு வந்த இவர் எப்போதும் ஏழை மக்களின் பக்கம் சார்ந்து செயற்பட்டவர் என பிரசித்தமானார். இவர் விவசாயத் திணைக்களத்தில் ஒரு அதிகாரியாக கடமையாற்றி வந்தார். குருநாகலை மடஹாபொல என்ற இடத்தில் வசித்த இவர் அறிவாளிகள் நிறைந்த பரம்பரையை அப்பிரதேசத்தில் உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் "பிரபுத்த சமாஜய" என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி அதன் மூலம் கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதற்காக அந்தந்த தலைப்புகளுக்கேற்ற அறிஞர்களை அழைத்து வந்து பிரதேச மக்களின் அறிவுக் கண்ணைத் திறப்பதற்கு முன்னின்று உழைத்தார். இது போன்ற கலாசார செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது 1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்

9ஆம் திகதி இவரது வீட்டுக்கு வந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) துப்பாக்கிதாரிகள் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளுக்கு முன்னால் அவரைச் சுட்டுக் கொலை செய்தனர்.



## என்.ஜீ. பிரேமரத்ன (உபாலி) வீதி நாடகக் கலைஞர்

## கொலைசெய்யப்பட்டதினம் - 11 பெப்ரவரி 1989

உபாலி என்ற பெயரில் அனைவரும் அறிந்த இவர் சிறந்த வீதி நாடகக் கலைஞராவார். டி.பி. விஜேசூரிய ஆரம்பித்த "தம்புவ வீர புரன் அப்பு கொவிபலே" மற்றும் வீரபுரன் அப்பு வீதி நாடகக் குழுவின் ஆரம்ப முக்கிய உறுப்பினராக இருந்தார். வீதி நாடகங்கள் மூலம் மக்களுக்கு சேவை செய்ய முடியுமென நினைத்த அவரும் குழுவினரும் நாடு முழுவதும் சென்று பொதுக் கூட்டங்களில் வீதி நாடகங்களை நடித்தனர். நடிப்பிலும் பாட்டிலும் மக்களை அறிவூட்டிய இவர் இடதுசாரி அரசியல் நோக்குடன் செயற்பட்டவராவார். 1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி அவர் வாழ்ந்த குருநாகலை மாவட்டத்தின் யாபாஹு"வ தொகுதி கட்டுகம் பொலவிலுள்ள அவரது வீட்டுக்கு வந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) துப்பாக்கிதாரிகள் அவரை சுட்டுக் கொன்றனர். அவர்களது நாடகங்கள் மூலம் மக்கள் மத்தியில் கொண்டு சென்ற இனவாதத்துக்கு எதிரான கருத்துகள், மனிதாபிமானம் மற்றும் சமூகக் கருத்துகள் கொலையாளிகளின் எதிர்ப்புக்கு காரணமாகவிருந்தன. இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

## சரத் செனவிரத்ன - வீதி நாடகக் கலைஞர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 11 பெப்ரவரி 1989

வீர புரன்அப்பு வீதி நாடகக் குழுவின் தயாரிப்பு பணிகளில் ஈடுவடுவதே இந்த திருமணமாகாத இளைஞரின் முக்கிய வேலையாகும். வீதி நாடகக் குழுவுக்காக இவர் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அரசியல் கட்சிகளுடன் நேரடித் தொடர்புகள் இல்லாத இவர் முற்போக்கு மக்கள் இயக்கங்களின் பொது நடவடிக்கைகளுக்கு தனது பங்களிப்பை வழங்கினார். வீதி நாடகங்கள் மூலம் மக்களை அறிவூட்டும் நடவடிக்கைகளுக்கு தமது பங்களிப்பை வழங்கியதற்காகவே இவர் படுகொலை செய்யப்பட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது. இவரும் இவருடன் ஒரே நாளில் கொலை செய்யப்பட்ட ஏனைய நாடக சகாக்கள் இருவரைப் போல் கட்டுகம்பலையில் வாழ்ந்தவரவார்.

## ஜே.ஏ. மைத்திரிபால ஜயவீர - வீதி நாடகக் கலைஞர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 11 பெப்ரவரி 1989

"லொக்கு ஐயா" என பிரதேசவாசிகள் மத்தியில் பிரசித்தமான மைத்திரிபால ஜயவீர நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். இவரும் கட்டுகம்பளையில் வாழ்ந்து வந்தவராவார். வீர புரன் அப்பு வீதி நாடகக் குழுவில் இவரும் நடிகராக இருந்து வந்தார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் அரசியலை ஆரம்பித்த இவர்கொலை செய்யப்படும் போது இலங்கை மக்கள் கட்சியின் கிராமியக் கிளையின் தலைவராகவிருந்தார். முற்போக்கு இயக்கங்களில் பங்களிப்பு செய்தபடி கலை நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த இவரும் இவரது நாடக சகாக்கள் இருவரான உபாலி மற்றும் சரத் கொலை செய்யப்பட்ட தினம் அன்றைய இரவிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

## காமினி சேனக பண்டார - கலாசார செயற்பாட்டாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 06 மார்ச் 1989

நீண்ட காலமாக இடதுசாரி அரசியலில் ஈடுபட்டு வந்த இவர் அந்த அரசியல் வெளியீடுகளுக்கு கட்டுரைகள் எழுதுவதிலும் ஆர்வம் காட்டினார். 1970களில் இருந்த இரகசிய புரட்சிகர அரசியல் குழுவொன்றின் "கினிபுப்புர" பத்திரிகையிலும் கடமையாற்றியுள்ளார். இவர் கட்டுரைகளை "சாகர" என்ற புனைப் பெயரிலேயே எழுதி வந்துள்ளார். மலையகத்தில் காணிப் பிரச்சினை தொடர்பாக எழுதப்பட்ட "நிஜபிமே கினி தெல்" என்ற மேடை நாடகத்தில் வீரபுரன் அப்புவின் பாத்திரத்தில் நடித்து பிரதேச மேடைகளுக்கு அறிமுகமாகியிருந்தார். கொலை அரசியலுக்கு எதிராக பலத்த குரல் எழுப்பி வந்த இவர் கொலை செய்யப்படும் போது இலங்கை மக்கள் கட்சியின் இளைஞர் அமைப்பின் முக்கியஸ்தராகவிருந்தார். தல்வத்த ஹெட்டிகெதர காமினி சேனக பண்டார என்ற பெயருடைய இவர் கே.பி. இகலகம என்ற பெயரிலும் பிரபல்யம் பெற்றிருந்தார். 1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் திகதி தனது மனைவியின் வீட்டில் இருந்த போது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

## கே. தனபால சிங்கம் - எழுத்தாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 24 மார்ச் 1989

குமார் தனபால் என்ற பொயில் எழுத்தாளராக பிரபல்யமாகியிருந்த கே. தனபால சிங்கம் யாழ்ப்பாணம், நல்லூர் மருதடி வீதியில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இவ்வாறு இவர் கொலை செய்யப்பட்டதாக யாழ் உதயன் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருந்தும் இவர் தொடர்பான மேலதிகத் தகவல்களைப் பெற முடியவில்லை.

## சுனில் நவரட்ன (30) - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - மார்ச் 1989

1985 - 1990 காலப்பகுதியில் வெளிவந்த வாராந்தப் பத்திரிகையான "ஹரய" பத்திரிகையின் மஸ்கெலிய நிருபராக செயற்பட்ட இவர் நவ சமசமாஜக் கட்சியின் முழுநேர அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். 1988ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் காணாமற் போவோர் தொடர்பான செய்திகளும் வெளிவந்த வண்ணமிருந்தன. நவ சமசமாஜக் கட்சி இது தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக முழு நேர செயற்பாட்டாளர்களை நியமித்திருந்தது. சுனில் நவரத்ன மாத்தறைப் பிரதேசத்தில் காணாமற் போனோர் தொடர்பான தகவல்களை திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்த போது 1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரச படையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ரீ. மகாலிங்கம் - பிரதேச ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 11 மே 1989

ஓய்வு பெற்ற ஆசிரியரான இவர் சட்டத்தரணியுமாவார். கொலை செய்யப்படும் போது இவருக்கு 62 வயதாகும். கொழும்பிலிருந்து வெளிவந்த தேசிய ஆங்கிலப் பத்திரிகையான "சன்" நாளிதழின் ஊர்காவற்துறை நிருபராக செயற்பட்ட இவர் கொலை செய்யப்படும் போது "தி ஐலன்ட்" பத்திரிகையின் ஊர்காவற்துறை நிருபராக பணியாற்றி வந்தார். வடமராட்சி பிரதேசத்தில் கரவெட்டி, நெல்லியடி கிராமத்தில் வாழ்ந்த இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். நெல்லியடியிலுள்ள இவரது வீட்டுக்கு வந்த எல்.ரீ.ரீ.ஈ. துப்பாக்கிதாரிகள் இவரைச் சுட்டுக் கொன்றாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் கொலையுண்டதன் பின்னர் இவரது குடும்பத்தினர் நாட்டை விட்டு வெளியேறினர்.



## பீ.டி. விமலசேன - அச்சக முகாமையாளர்
## கொலை செய்யப்பட்ட தினம் - 27 மே 1989

1958ஆம் ஆண்டு அரச அச்சகத்தில் ஒரு ஊழியராக வாழ்க்கையை ஆரம்பித்த இவர் இலங்கை சமசமாஜக் கட்சியின் தொழிற் சங்கத்தின் முக்கியஸ்தராகவும் இருந்தார். 1963 ஆம் ஆண்டு அச்சகர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட இவர் 1966ஆம் ஆண்டு அச்சகத்தின் தலைவரானார். கொலை செய்யப்படும் வரை தலைவர் பதவியை வகித்த இவர் இலங்கை சமசமாஜக் கட்சியின் தொழிற் சங்கங்களின் சம்மேளன பொதுச் செயலாளராகவும் கடமையாற்றினார். சமூகத்தின் நலனை இலக்காகக் கொண்ட தொழிற் சங்கத் தலைவராக இவர் எடுத்த துணிச்சல் மிக்க நடவடிக்கைகள் இன்று இலங்கையில் பாடசாலைப் பிள்ளைகள் இலவசமாக பாட நூல்களை பெற்றுக் கொடுக்குமளவுக்கு விரிவடைந்துள்ளது. பாடநூல்களை குறைந்த விலைக்குப் பெற்றக் கொடுக்க அரசு பிரேரனையொன்றை நிறைவேற்றி அவற்றை அச்சிட முடியுமா என அரச அச்சகத்திடம் கேட்டபோது அச்சகத்தின் முக்கியஸ்தர் பழைய இயந்திரங்கள் மூலம் பெருந்தொகையான நூல்களை அச்சிட முடியாதென தெரிவித்துள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் தொழிற் சங்கத்தின் செயலாளராகவிருந்த விமலசேன சகோதர ஊழியர்களுடன் பேச்சு நடத்தி தமக்கு அந்தப் பொறுப்பை ஏற்கமுடியுமெனத் தெரிவித்துள்ளார். பின்னர் பாட நூல் அச்சிடும் பொறுப்பை எற்று ஊழியர்களுடன் சிரமதானத்தின் முடிந்தவரை அச்சியந்திரங்களைத் திருத்தி பாடநூல்களை அச்சிடும் பணியை ஆரம்பித்துள்ளார். இந்த நடவடிக்கை காரணமாகவே. முதன் முதலாக இருபத்தைந்து சதத்துக்கு பாலர் பாடப் புத்தகம் கிடைத்தது. பின்னர் குறைந்த விலைக்கு பாட நூல்களை பெற்றுக் கொடுக்கும் நடைமுறை இலவசமாக பாடநூல் வழங்கும் வரை விரிவடைந்தது.

கொலை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் இவர் சமசமாஜக் கட்சியின் அச்சகமான "ஸ்டார்" அச்சகத்தின் முகாமையாளராக கடமையாற்றி வந்தார். முற்போக்கு நூல்கள் மற்றும் வெளியீடுகள் பலவற்றை அச்சிட்ட இந்த

அச்சகத்துக்கு வந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) துப்பாக்கிதாரிகள் 1989ஆம் ஆண்டு மே 27ஆம் திகதி இவரைச் சுட்டுக் கொலை செய்தனர். 1940ஆம் ஆண்டு முக்குறுதுவே என்ற இடத்தில் பிறந்த இவர் கொலை செய்யப்படும் போது 49 வயதைக் கடந்திருந்தார்.

## ஐவன் ஜயசேகர - பிரதேச ஊடகவியலாளர்
## கொலை செய்யப்பட்ட தினம் - 23 ஜுலை 1989

இலங்கை மக்கள் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரான ஐவன் ஜயசேகர மகரகம தொகுதியின் அமைப்பாளராகவும் செயற்பட்டார். சமாதான்தில் நம்பிக்கை கொண்ட இடதுசாரி சிந்தனையுள்ள இவர் பல்வேறு அரசியல் அறிக்கைகளுக்கு தமது கருத்தை எழுதியுள்ளார். அத்துடன் "மகரகம" என்ற பெயரில் தாமே தொகுத்த பத்திரிகையொன்றையும் வெளியிட்டு வந்துள்ளார். இது போன்ற கருத்துகளைக் கொண்டோருக்கு எதிரான சக்திகள் இயங்கிவந்த மோசமான காலகட்டத்தில் அதாவது 1984ஆம் ஆண்டு ஜுன் மாதம் 4ஆம் திகதி மறைந்திருந்த துப்பாக்கிதாரிகள் தமது தோட்டாக்களுக்கு இவரை இறையாக்கிக் கொண்டனர்.

## தேவிஸ் குருகே - வானொலி, தொலைக்காட்சி ஊடகவியலாளர்
## கொலை செய்யப்பட்ட தினம் - 23 ஜுலை 1989



1949 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இரண்டாம் தர அறிவிப்பாளராக இணைத்து கொண்ட தேமிஸ் குருகே 1983ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாக இருந்த நிலையில் ஓய்வு பெற்றார். தொலக்காட்சி இல்லாத அக்காலகட்டத்தில் பொது மக்களுக்கு சமீபமான ஊடகமாக விளங்கிய வானொலியில் தொழிலாளர்களின் குரல்களை ஒலிக்கச் செய்த "கம்கரு பெய" என்ற நிகழ்ச்சி உழைக்கும் மக்களிடையே பிரசித்தமான இவரது நிகழ்ச்சியாகும். "லமா உயன" பொடி மாமா என்ற

பாத்திரத்தில் பிரபலமான சிறுவர் நிகழ்ச்சியொன்றையும் இவர் தயாரித்தளித்தார். "மாசிக ரெங்கும்" அவர் முன்வைத்த மற்றுமொரு நிகழ்ச்சியாகும்.

வானொலியில் ஓய்வு பெற்ற இவர் மீண்டும் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையைப் பொறுப்பேற்றார். கிளர்ச்சி இடம்பெற்ற கட்டத்தில் அவர் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் பொறுப்பான அதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவசரகாலச் சட்டத்தின் கீழ் செய்தித் தணிக்கைக்கு பொறுப்பான அதிகாரியாக பணிபுரிந்துள்ளார். 1989ஆம் ஆண்டு ஜுலை 23ஆம் திகதி அதிகாலை நாரஹேன்பிட்டியிலுள்ள தமது வீட்டிலிருந்து நாரஹேன்பிட்டிய பன்சலைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த போது பொல்ஹேன்கொட பாலத்தின் மீது கொலைகாரர்களின் ஐந்து தோட்டாக்கள் உடலில் பாய்ந்து அவர் உயிர் துறந்தார். அது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) துப்பாக்கிதாரிகள் என நம்பப்பட்ட போதும் பிற்காலங்களில் இக்கொலைக்கு வேறு சந்தேகங்களும் ஏற்பட்டன.



## பிரேமகீர்த்தி டி அல்விஸ்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 31 ஜுலை 1989

1947 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3ஆம்திகதி கொழும்பில் பிறந்த சமரவீர முதலிகே தொன் பிரேம கீர்த்தி டி அல்விஸ், பிரேம் என்ற பெயரில் நண்பர்கள் மற்றும் வானொலி நேயர்கள் மத்தியில் பிரசித்தி பெற்ற ஜனரஞ்சக ஊடகவியலாளராவார். 1967ஆம் ஆண்டு டிசம்பர் மாம் 17ஆம் திகதி முதல் இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராக இணைந்து கொண்ட இவர் நிரந்தர ஊழியராக இறுதியில் கொலையுண்ட போது செய்தி மற்றும் நடப்பு விவகார நிகழ்ச்சித் தயாரிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். 1989ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போது இருண்டு கிடந்த அந்த இரவில் ஆயதங்களை கையிலேந்திய இளைஞர் குழுவினர் வந்து இவரை வீட்டிலிருந்து

பலத்காரமாக அழைத்துச் சென்றனர். மறுநாள் அதிகாலை உயிரடங்கிய இவரது உடல் இவரது வீட்டுக்கருகில் கண்டெடுக்கப்பட்டது. அந்த காலகட்டத்தில் பிரசித்தமான இலத்திரனியல் ஊடகவியலாளராகவிருந்த இவரது முகத்தை மூன்று துப்பாக்கித் தோட்டாக்கள் சிதைத்திருந்தன. இக்கொலைக்கான பொறுப்பை ஏற்பதாக தேசப்பிரேமி மக்கள் இயக்கம் சில சுவரொட்டிகளை ஹோமாகம பிரதேசத்தில் ஒட்டியிருந்தது. இரு பிள்ளைகளின் தந்தையான இவர் கொலை செய்யப்பட்ட போது ஹோமாகம கட்டுவான வீதியில் ஒரு சிறிய வாடகை வீட்டில் வசித்து வந்தார். இவரது வங்கிக் கணக்கில் 1717 ரூபா 14 சதம் மாத்திரமே எஞ்சியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

ஆனந்தா வித்தியாலய சஞ்சிகையின் ஆசிரியராக ஊடகத்துறையில் இவர் கால் பதித்தார். 1961ஆம் ஆண்டு சிறுவர் நிகழ்ச்சியில் பாடகராக வேண்டுமென்ற ஆசையில் இலங்கை வானொலிக்குச் சென்ற இவருக்கு அவரது ஊடக குருவாகவிருந்த கருணாரத்ன அபேசேகரவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. 1961ஆம் ஆண்டு ஜனவரி மாம் 27ஆம் திகதி முதல் சிறுவர் நிகழ்ச்சியில் பிரதி வாசிப்பாளராக வானொலி ஊடக வாழ்க்கையை ஆரம்பித்தார். இலங்கை வானொலியுடன் தொடர்பு கொண்டு கடமையாற்றிய 25 வருட காலத்துக்குள் தனிப்பட்ட வாழ்க்கை மூலமாகவும் அரசியல் கிளர்ச்சி மூலமாகவும் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தார். 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முதல் கட்டாய லீவில் அனுப்பி வைக்கப்பட்டார். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததால் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட இவர் ரஜரட்ட சேவைக்கும், அங்கிருந்து ருஹுணு சேவைக்கும் மீண்டும் கொழும்புக்குமாக தண்டனை வழங்கும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டார்.

பல கலை நடவடிக்கைகளில் பங்களிப்புச் செய்தள்ள இவர் பாடலாசிரியர் என்ற ரீதியில் புகழ்பெற்றார். பின்னர் ரூபவாஹினி ஊடகத்தில் இணைந்து கொண்ட இவர் இவரது குரல் வளத்தால் ஜனரஞ்சகமானவராகத் திகழ்ந்தார்.
கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தை முழுமையாக மீறிய

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) கிளர்ச்சிக் காலத்தில் மரண அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாமல் தனது ஊடகக் கடமையை செவ்வனே செய்துவந்த இவர் பயங்கரவாதத்தின் இறையானார்.

## குலசிரி அமரதுங்க - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 11 ஆகஸ்ட் 1989

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நீண்ட காலம் பணிபுரிந்த ஊடகவியலாளர் குலசிரி அமரதுங்க சிறிது காலம் நாட்டுக்கு வெளியே ஊடக நடவடிக்கையில் ஈடுபட்ட பின்னர் திரும்பி வந்து இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவரின் அழைப்பின் பேரில் ஆலோசக செய்தி ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பாண்டித்தியமுடைய இவர் 1988- 1989 கிளர்ச்சிக் காலத்தில் ரூபவாஹினி செய்தி ஒளிபரப்பை சில நிமிடங்களுக்காவது ஒளிபரப்ப முயற்சி செய்தவரென தெரிவிக்கப்படுகிறது. அரச ஊடகத்தில் கடமையாற்றுவது, செய்தி வாசிப்பது மக்கள் விடுதலை முன்னணியால் (ஜே.வி.பி) மரண தண்டனை விதிப்பதற்கு காரணமான இத் தினங்களில் சில பிரபலமான ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர். ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் கடமைக்கு வர அச்சம் கொண்டிருந்தனர். ரூபவாஹினியில் தோன்றுவதற்கும் பலர் விஷேடமாக அச்சமுற்றனர். அக்காலத்தில் செய்திப் பிரிவுக்கு பொறுப்பாகவிருந்த இவர் செய்தி ஒளிபரப்பை மேற்கொள்ள கடும் முயற்சிகளை மேற்கொண்டதாக இவரது சமகாலத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு மாவட்டத்தில் கல்கிசை பிரதேசத்தில் வாழ்ந்து வந்த இவர் இரு புதல்வர்களின் தந்தையாவார். 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஞாயிறு அதிகாலை (திகதி குறிப்பிட்ட மாதம் 10 முதல் 14 க்கிடையிலான ஞாயிறு என கருதப்படுகிறது) கடமைக்குச் செல்வதற்கு முன்னர் பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருந்த போது

வீட்டுக்குள் நுழைந்த இளைஞர்கள் இருவர் அவசர தேவைக்காக தொலைபேசியை பாவிக்க முடியுமா என கேட்டுள்ளனர். அதற்கு அனுமதி கிடைத்ததுடன் அவருக்கருகிலிருந்த ஒரு புதல்வர் தொலைபேசி இருக்குமிடத்தை காண்பிப்பதற்கு தயாராகியுள்ளார். ஒரேயடியாக ஊடகவியலாளர் அமரதுங்க மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) பிஸ்டல் குழுவினர் அங்கிருந்து உடனடியாக வெளியேறிச் சென்றுள்ளனர்.



**சாகரிகா கோமஸ் (28) - ஊடகவியலாளர், பாடகர், நடிகர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 18 செப்டெம்பர் 1989**

1961ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் திகதி சம்ஸன் கோமஸ், ரூபா கோமஸ் தம்பதியினருக்கு கொழும்பு காசல் மகளிர் வைத்தியசாலையில் பிறந்தவர் சாந்தனி சாகரிகா கோமஸ். பாடசாலை காலம் முதல் பாட்டுப் போட்டிகளில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்ற இவர் பின்னர் சிறந்த பாடகியானார். பாடல்களை அவர் சிறப்பாகப் பாடுவதால் சங்கீத மேதை எட்வின் கோட்டே கொடவிடம் அவர் மேலதிகப் பயிற்சி பெற்றார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிறுவர் நடன அரங்கு, லமா உயன சரசவி மண்டபய, டிகிரி சினா ரெலி போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் திறமையை காட்டுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததுடன் பாடகியாகவும் நடிகையாகவும் அவர் பல்வேறு நிகழ்ச்சிகளில் தனது பங்களிப்பை குறைவின்றி வழங்கினார். பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரவின் "வெஸ்சந்தர" நாடகத்தில் பாடகியாகவும் நடிகையாகவும் தோன்றினார். டவர் ஹோல் நாடக மன்றத்தின் கீழ் தயாரான ஸ்ரீ விக்ரம, சமுத்திர தேவி, சிரி சங்கபோ, பண்டுகாபய, பெஹேசரணீய போன்ற நாடகங்களில் பாடகியாகவும் நடிகையாகவும் தமது பங்கிளப்பை வழங்கினார்.

ரூபவாஹினி அறிவிப்பாளராகவுமிருந்த இவர் அரச ஊடகங்களில் கடமையாற்றுவது மரணத்தை வலிய அழைப்பது எனத் தெரிவித்த காலத்தில் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராகக் கடமையாற்றினார். 1989ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ஆம் திகதி மாலை அவரது வீட்டுக்கு வந்த ஐவரைக் கொண்ட ஆயுதம் தாங்கிய குழுவினர் அவர் வரும்வரை வீட்டிலிருந்தவற்றை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தனர். இரவு 7.30 மணியளவில் வீடு வந்த சாகரிகாவை கைது செய்த அக்குழுவினர் விசாணைக்கெனக் கூறி அவரை அழைத்துச் சென்றனர். மறுதினம் அதிகாலை கடற்கரையிலிருந்து அவரது உயிரற்ற உடல் கண்டெடுக்கப்பட்டது. மறுதினம் அவரது 28ஆவது பிறந்த தினமாகவிருந்தது. படை அதிகாரியான அவரது காதலருடன் திருமணம் செய்ய ஒரு மாத காலமே இருந்தது. அந்த காலகட்டத்தின் படி இவரின் கொலை மக்கள் விடுதலை முன்னணியால் (ஜே.வி.பி) மேற்கொள்ளப்பட்டதென சந்தேகிக்கப்பட்ட போதும் கூலிப்படையினரால் மேற்கொள்ளப்பட்டதென்ற சந்தேகமும் தெரிவிக்கப்பட்டது.



**ராஜினி ராஜசிங்கம் திராணகம - எழுத்தாளர், சுயாதீன ஊடகவியலாளர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 21 செப்டெம்பர் 1989**

கொலை அரசியலுக்கு எதிராக அச்சமின்றி தமது கருத்துக்களை வெளியிட்ட ராஜினி ராஜசிங்கம் திராணகம பல்வேறு வெளியீடுகளுக்கு தமது கருத்துக்களை எழுதிய எழுத்தாளராவார். யாழ் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் தொடர்பான விரிவுரையாளர் சங்கம் தொகுத்த "முறிந்த பனை" என்ற நூலின் இணை ஆசிரியராவார். அதில் முன்னணி வரிசை செயற்பாட்டாளராக விளங்கிய அவர் தமது மக்களின் விடுதலைக்காக கருத்துகளை தெரிவிக்க முடியாத, இணக்கப்பாட்டுக்கு, இடமற்ற கொலை அரசியல் கலாசாரத்துக்கு எதிராகவிருந்தார். அவரது பிறந்த இடமான யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தெற்கில் மனித

உரிமைகள் மற்றும் பெண் உரிமை செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் கலசாரத் துறையில் முற்போக்காளர்கள் மத்தியிலும் பிரசித்தமாகவிருந்தார். வைத்தியராக இருந்த அவர் யாழ் பல்கலைக்கழகத்தின் உடற் கூற்றுப் பிரிவில் மாணவ ஆலோசகராக விளங்கினார். மாணவர்களின் எதிர்காலம் குறித்தும் அவர்களது முன்னேற்றம் குறித்து எவ்வளவு அர்ப்பணிப்புடன் செயற்பட்டாரென்பது அவர் கொலைசெய்யப்பட்டவுடன் மாணவர்கள் எழுதி ஒட்டிய சுவரொட்டிகள் மூலம் தெரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. அந்த சுவரொட்டியில் மாணவர்கள் "நாங்கள் உங்களை புதைக்கவில்லை விதைத்திருக்கின்றோம்." என எழுதியிந்தார்கள்.

தெற்கில் இடதுசாரி சிந்தனையுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளரான தயாபால திராணகமவை திருமணம் செய்திருந்த அவர் வடக்கிற்கும் தெற்கிற்கும் பாலமாகவிருந்து தமது இரு புதல்விகளுடன் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்தார். அவரது கருத்துக்கள், ஆக்கங்கள் மற்றும் நடவடிக்கைகள் காரணமாக அவரது வாழ்க்கை ஆபத்துக்குள்ளாகலாம் என அறிந்த கொழும்பு வெளிநாட்டு நண்பர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வரும்படி வேண்டுகோள் விடுத்தும் அவர் யாழ் மக்களுக்காக சேவையாற்றினார். பிரிட்டனில் கல்விபயின்ற இவர் அங்கே தங்கியிருக்க சந்தர்ப்பம் கிடைத்த போது பிறந்த மண்ணில் வாழ விரும்பினார்.

1989ஆம் அண்டு செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக்தின் உடற் கூற்றுப் பிரிவில் ஆய்வொன்றை மேற்கொண்ட பின்னர் மாலை 5.00 மணியளவில் தமது சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். ஆரம்பத்தில் இந்திய அமைதி காக்கும் படையினர் இக்கொலையைச் செய்ததாக நம்பப்பட்ட போதிலும் பின்னர் இக்கொலையை எல்.ரீ.ரீ.ஈ.யினரே மேற்கொண்டதாகத் தெரிய வந்தது. இவரது கொலைக்கு 60 நாள் பூர்த்தியான தினத்தன்று யாழ் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்த இரங்கல் நிகழ்ச்சிக்கு கொழும்பு மற்றும் வெளிநாடுகளிலிருந்து

பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். சகல தடைகளையும் ஆயுதக் குழுக்களையும் பொருட்படுத்தாமல் ராஜினி கொலையை கண்டித்து மாபெரும் ஊர்வலமொன்று யாழ் நகர வீதிகளுடாக நடைபெற்றது. இவரது கொலைக்குப் பின்னர் அவரது இரு புதல்விகளுடன் கணவர் நாட்டை விட்டு வெளியேறினார். அவரது குடும்பத்தினரும் வெளியேறினர்.

## ஐ. சண்முகலிங்கம் - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 06 நவம்பர் 1989

ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் பீட ஊடகவியலாளரான ஐ. சண்முகலிங்கம் கொலை செய்யப்பட்ட போது "விடுதலை" என்ற பத்திரிகையில் கடமையாகக் கொண்டிருந்தார். இந்திய அமைதி காக்கும் படையினரால் ஈழநாடு, முரசொலி, மற்றும் ஈழமுரசு ஆகிய பத்திரிகை அலுவலகங்கள் மூடப்பட்ட பின்னர் அங்குள்ள அச்சு இயந்திரங்களை கைப்பற்றிய ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பு "விடுதலை" பத்திரிகையை ஆரம்பித்தது. அங்கு ஊடகவியலாளராகப் பணியை ஆரம்பித்த இவர் இதன் காரணமாகவே எல்.ரீ.ரீ.ஈ.யினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். கொலை செய்யப்படும் போது 45 வயது நிரம்பிய இவர் திருமணமானவர். அரியாலை பிரதேசத்தில் வாழ்ந்த இவர் 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் திகதி கொலை செய்யப்பட்டார்.

## எம். அமிர்தலிங்கம் - பத்திரிகை உரிமையாளர், தமிழ் டிரஸ்ட் பண்ட் ஆரம்ப கர்த்தா
## கொலைசெய்யப்பட்ட தினம் - 1989

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த முரசொலி பத்திரிகையின் உரிமையாளரான (முகாமைத்துவப் பணிப்பாளர்) இவர் Tamil Trust Fund என்ற நிதியத்தின் ஆரம்ப கர்த்தாவாவார். காரை நகர் பிரதேசத்தில் பிறந்த இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். 1989ஆம் ஆண்டு ஒரு தினத்தில் (கொலை

செய்யப்பட்ட தினத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை) இவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இக்கொலைக்கு புலிகளே பொறுப்பெனக் கூறப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ.யினருக்கு சார்பானதாகக் காணப்பட்ட அப்பத்திரிகை அக் காலகட்டத்தில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக சுட்டிக் காட்டியமையாலும் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளராகவிருந்ததாலும் இக்கொலைக்கு காரணமாகவிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

## ஆர்.டி. பிட்டவெல நடனக் கலைஞர் கொலைசெய்யப்பட்ட தினம் - 1989

நடனம் தொடர்பான நடனக் கலை பட்டதாரியான ஆர்.டி. பிட்டவெல ஒரு நடன ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்தார். ஆசிரியர் சங்கத்தின் செயற்பாட்டாளரான இவருக்கு 1980ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்தின் போது இவர் தொழிலை இழந்தார். பின்தங்கிய பகுதியான ஊவா பரணகமயில் வாழ்ந்த இவர் தனது குடும்பத்தை வாழ வைப்பதற்காக செய்யாத தொழில் இல்லை. கூலித் தொழில் கூட செய்யும் நிலை ஏற்பட்டது. நீண்ட தூரம் நடந்து சென்று அவருக்குப் பிடித்த நடன நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். நுவரெலிய பிரதேச உல்லாசப் பயண ஹோட்டலொன்றில் நடனமாட வெகு தூரம் நடந்து சென்று வருவார். இதற்கிடையில் இனவாத்துக்கு எதிராக, சமாதானத்தை நேசிப்பவராக, அதேபோல் அரசுக்கு விரோதமானவர் என பிரதேசவாசிகள் அறிந்திருந்தனர். இந்த கருத்தக்களைக் கொண்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் லீக்கின் பிரதேச செயலாளராகவிருந்ததுடன் அந்த அமைப்பின் "கம்கறு மாவத்த" பத்திரிகை வீட்டுக்கு வீடு எடுத்துச் சென்று விற்பனை செய்வதிலும் ஈடுபட்டார். வறுமையில் வாழ்ந்து கொண்டு நடன நிகழ்ச்சிகள் மூலம் குடும்பத்தை கவனித்துக் கொண்டு முறையான சமூகமொன்றுக்காக குரல் எழுப்பும் வகையில் வாழ்ந்து வந்த பிட்டவெல 1989ஆம்ஆண்டு ஒரு தினத்தில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளின் வேட்டுகளுக்கு இலக்காகி கொலை செய்யப்பட்டார்.

## சரத் சந்திரரத்ன - சங்கீத கலைஞர் - பாடகர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 1989

பிரதேசத்தில் இலங்கை மக்கள் கட்சி முக்கியஸ்தரின் நண்பராகவும், அதேவேளை இடதுசாரி சிந்தனை கொண்டவரான சரத் சந்திரரத்ன. "மஹதுன் மல்லி" என்ற பெயரிலேயே பிரசித்திபெற்றிருந்தார். பிரதேசத்தில் பிரபல பாடகராகவும், சங்கீதக் கலைஞராகவும் பிரபலமானவராக விளங்கினார். அவர் யாப்பஹுவ, மாஎலிய, ரம்பே சந்தியில் வர்த்தக நிலையமொன்றையும் நடத்திவந்தார். மக்கள் கட்சியின் ஆதரவாளர்கள் இவரைச் சந்திப்பதற்கென வழமையாக அங்கு வருவர். கிளர்ச்சிக் காலத்தில் ஒரு அச்சத்தை தூண்டும் இரவில் அவரது வர்த்தக நிலையத்துக்கு வந்த துப்பாக்கிதாரிகள் அவரைச் சுட்டுக் கொன்று விட்டு இருளில் மறைந்தனர்.

## எம். நவரட்னம் - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 1989

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழமுரசு, முரசொலி ஆகிய பத்திரிகைகளின் நிருபராகவிருந்த எம். நவரட்னம் ஒரு ஆசிரியராவார். ஈழமுரசு புலிகளின் பத்திரிகையென பிரபலமாகியிருந்தது. ஈழமுரசு புலிகளுக்கு சார்பானதென தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புக்கென கூறிக்கொண்டு வந்த இந்திய அமைதி காக்கும் படை வந்திருந்த காலகட்டத்தில் அதாவது 1989ஆம் ஆண்டு ஒரு நாளில் நவரட்ணம் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இது இந்தியப் படையுடன் நெருங்கிய நடவடிக்கைகளை மேற்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பு இக்கொலையைப் புரிந்ததாக நம்பப்பட்டது. இவர் தெள்ளிப்பலை அரியாலை பிரதேசத்தில் வாழ்ந்தவராவார்.

# 1990

## லக்ஸ்மன் பெரேரா - நாடகத் தயாரிப்பாளர் கொலைசெய்யப்பட்ட தினம் ஜனவரி 1990

ஊடகத் தயாரிப்பாளர் றிச்சர்ட் டி சொய்ஸாவுடன் தொடர்பிருந்தும் அவரால் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த "மே கவுத? மொனவத கரன்னே?" (இது யார்? என்ன செய்கின்றார்?) என்ற மேடை நாடகம் இவர் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டதற்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. "மே கவுத? மொனவத கரன்னே?" என்ற சுலோகத்தை அப்போது ஜனாதிபதியாகவிருந்த ரணசிங்க பிரேமதாஸ 1984ஆம் ஆண்டு தனது தேர்தல் பிரசாரத்தில் பிரதான சுலோகமாகப் பயன்படுத்தினார். இந்தத் தலைப்பின் பெயரில் றிச்சர்ட் டி சொய்ஸா எழுதிய நாடகத்தை லக்ஸ்மன் பெரேரா தயாரித்துக் கொண்டிருந்தார் என்பதை நாடகத்துறையைச் சேர்ந்த பலரும் அறிந்திருந்தனர். அந்த நாடகம் மேடையேற்றப்படுவதற்கு முதல் நாளே இவர் காணாமல்போயுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக அப்போதைய அரசின் பிரபலமான அரசியல்வாதியொருவரின் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. தெஹிவளை, கல்கிஸ்ஸ நகர சபையின் உறுப்பினராகவிருந்த இவர் 1990 ஜனவரி 27ஆம் திகதி கடத்தப்பட்டு காணாமற்போயுள்ளார்.

இவர் கொழும்பு தெஹிவளை பிரதேசத்தில் மேஜர் எல்.வி குணரத்ன மாவத்தையில் வசித்து வந்தார்.



## றிச்சர்ட் டி சொய்ஸா – ஊடகவியலாளர் நடிகர் கொலைசெய்யப்பட்ட தினம் - 18 பெப்ரவரி 1990

பிரபலமான ரூபவாஹினி தொலைக்காட்சி அறிவிப்பாளரும் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நாடக நடிகருமான றிச்சர்ட் டி சொய்ஸா 'இன்டர்பிரஸ்' என்ற செய்திச் சேவையின் இந்நாட்டு மனித உரிமை மீறல் தொடர்பான செய்திகளை வழங்கும் நிருபராகவும் பிரபலமாகியிருந்தார். இந்தச் செய்திச் சேவையில் கடமையாற்றுவதற்காக நாட்டை விட்டுச் செல்லவிருந்தபோதே கொலை செய்யப்பட்டார். இவரால் சேகரிக்கப்பட்ட மனித உரிமை மீறல் தொடர்பான பல தகவல்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு கசிவதைத் தடுப்பதே இவர் கொலைசெய்யப்படுவதற்கு முக்கிய காரணமாகவிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. 1990ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி இரவு சீருடையுடன் இவரது வீட்டுக்குச் சென்ற ஆறு பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் றிச்சர்ட் டி சொய்ஸாவை பலாத்காரமாக கடத்திச் சென்றனர். கடுமையாக தாக்கப்பட்டு கொலைசெய்யப்படட இவரது உடல் 18ஆம் திகதி அதிகாலை கொழும்பு மாவட்டத்தின் மொரட்டுவ கொரலவெல்ல கடற்கரையோரத்தில் இருந்து மீட்கப்பட்டது.

முக்கிய பொலிஸ் நிலையமான வெலிக்கட பொலிஸ் நிலையத்திற்கருகில் உள்ள வீட்டில் தாயாருடன் வசித்து வந்த இவர் குடும்பத்தில் ஒரே பிள்ளையாவார். இவரது கொலைக்குப்பின்னர் இவரது தாயாரான டாக்டர் மனோராணி சரவணமுத்து பிள்ளைகளின் கொலைக்கு எதிராக கிளர்தெழுந்த தாய்மார் முன்னணியின் தலைவியாக முன்னின்று செயற்பட்டார். றிச்சர்ட் டி சொய்ஸாவின் கொலை நடந்து மூன்று மாதங்கள் கடக்கவிருந்த நிலையில் மே மாதம் 15ஆம் திகதி ரூபவாஹினி நிகழ்ச்சியொன்றில் டாக்டர் மனோராணி தன் மகனை கடத்திச் செல்வதற்காக வந்த பொலிஸ் அதிகாரிகளில் ஒருவரான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொனி குணசிங்கவை இனங்கண்டு தெரிவித்ததுடன், அன்று முதல் கொலையாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க சட்டப்படி எடுக்க வேண்டிய

சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். பின்னர் 1990 மே மாதம் முதலாம் திகதி தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலுக்கு இலக்காகி கொலையுண்ட முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுடன் முக்கிய சந்தேக நபரான ரொணி குணசிங்கவும் கொல்லப்பட்டார்.
கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் தொடர்பான காத்திரமான நடவடிக்கைகள் இவரது கொலைக்குப் பின்னரே இத்துறையில் முன்னெடுக்கப்பட்டது. 1994 பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி கருத்துக்களை வெளியிடும் மற்றும் ஊடக அடக்கு முறைக்கு எதிரான மாபெரும் ஆர்ப்பாட்டங்களுடனான வேலைத்திட்டங்கள் றிச்சர்ட் டி சொய்ஸா மற்றும் யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்ட ராஜினி திராணகம ஆகியோரை நினைவுபடுத்தி முன்னெடுக்கப்பட்டன. 'யுக்திய' பத்திகை இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது.

## குமரகுரு குகமூர்த்தி - ஊடகவியலாளர், மனித உரிமைகள் தொடர்பான ஊடகவியலாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 6 செப்டெம்பர், 1990



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப்பிரிவில் லிகிதராக கடமையாற்றிய குமரகுரு குகமூர்த்தி மனித உரிமை செயற்பாட்டாளராகவும் இருந்தார். இனங்களுக்கிடையே நீதி மற்றும் சமத்துவத்துக்கான அமைப்பின் உறுப்பினராகவும் இருந்தார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த 'சட்டர்டே ரிவியு' பத்திரிகைக்கு மனித உரிமை மீறல் தொர்டபான செய்திகளையும் வழங்கி வந்தார். யாழ்ப்பாணத்தில் நல்லூர் பிரதேசத்தில் பிறந்த இவர் திருமணத்தின் பின் மனைவியின் ஊரான மாவிட்டபுரத்தில் வசித்தார். தொழிலுக்காக இவர் கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் தங்கியிருந்தார். யாழ்ப்பாணத்தில் இவருக்கிருந்த தொடர்புகள் காரணமாக யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் ஊடகவியலாளர்களுக்கு உதவிகளையும் வழங்கியுள்ளார்.

இவர் கடத்தப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு கல்கிஸ்ஸ ஹோட்டலில் நடைபெற்ற மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டபோது கல்கிஸ்ஸ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டபோதும் அங்கு வந்திருந்தவர்களின் தலையீடு காரணமாக காப்பாற்றப்பட்டார்.

1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி கடமை முடிந்து ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் தனது இருப்பிடத்தை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது ஜாவத்தை வீதியில் வைத்து வெள்ளை வேனில் வந்தவர்களால் கடத்திச்செல்லப்பட்டார். இவர் கொலை செய்யப்பட்டு இவரது உடலும் மறைக்கப்பட்டுவிட்டதாக சந்தேகிக்கப்படுகின்றது. அரசோ அல்லது அரசுக்கு ஆதரவான ஆயுதக் குழு ஒன்றினாலோ இவர்கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் இவரது மனைவி முதல் குழந்தையாக பெண் குழந்தையொன்றை பெற்றெடுத்திருந்தார். இந்நிலையில் இவர் காணாமல்போனதன் பின்னர் அவரது குடும்பத்தவர்கள் ஊரைவிட்டே வெளியேறியிருந்தனர்.

## சோ. பத்மநாதன் - ஊடக ஊழியர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 27 செப்டெம்பர் 1990

சோ. பத்மநாதன் 'உதயன்' பத்திரிகையின் விநியோகப்பிரிவின் ஊழியராக கடமையாற்றினார். 1990 செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர்ப் பிரதேசத்திலுள்ள 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் சோ. பத்தமநாதன் கொல்லப்பட்டார்.

பத்திரிகை அலுவலகக் கட்டிடமும் பாரிய சேதத்திற்குள்ளானதுடன் நிர்வாகப்பிரிவின் வை. ஜெகநாதன் மற்றும் அச்சியந்திரப்பிரிவில் கடமையாற்றிய சுந்தர்ராஜா ஆகியோர்களின் கைகளில் பாரிய காயம் ஏற்பட்டன.

பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த வீ. கந்தப்பு கடுமையான காயங்களுக்குள்ளானதுடன் அலுவலகத்திற்கு வெளியில் இருந்து வந்திருந்த நபர் ஒருவரும் இந்தத் தாக்குதலில் காயங்களுக்குள்ளானார்.

## யூ.எல்.தாவூத் (எஸ்.ஓ) - எழுத்தாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 1990

கிழக்கு மாகாணத்தின் ஏறாவூர் பிரதேசத்தில் வசித்து வந்த யூ.எல் தாவூத் கொலைசெய்யப்பட்டபோது அலிகார் முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றினார். எழுத்தாளரான இவர் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளை எழுதி வந்தார். இவை மாணவ சமூகத்தை இலக்காகக் கொண்டவை. முஸ்லிம் 'கதை மலர்' என்ற பெயருடைய முஸ்லிம் எழுத்தாளர்களின் கட்டுரைத்தொகுப்பு நூலில் இவரது கட்டுரையும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்திய அமைதி காக்கும் படைக்கும் எல்.ரீ.ரீ.ஈயினருக்கும் இடையில் மோதல் நடைபெற்ற காலத்தில் இவரும் அகதி முகாம் ஒன்றில் தங்கியிருந்தார். அங்கு முஸ்லிம் சமூகத்திற்கு இளைக்கப்படும் அநீதிகள் குறித்து பகிரங்கமாக பேசியுள்ளார். முகாமுக்கு வந்த எல்.ரீ.ரீ.ஈயினர் அவரை விசாரணைக்கென வெளியே அழைத்துச் சென்று சுட்டுக்கொலை செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

## அஹமட் லெப்பே (45) - எழுத்தாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 26 டிசம்பர் 1990

1978இல் அரச சாகித்திய விருது பெற்ற எழுத்தாளராவார். ஆசிரியர் தொழிலில் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் அதிபர் மற்றும் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கு உயர்த்தப்பட்டார். கொலைசெய்யப்பட்டபோது இவர் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபராக பதவியுயர்வு பெற்றிருந்தார். படைப்பாற்றல் கொண்ட எழுத்தாளரான இவர் நாவல்கள் மற்றும் சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவர் கொலைசெய்யப்பட்ட பின்னர் இவரது நண்பர்கள்

“முக்காடு” என்ற பெயரில் இவரது சிறுகதைகளடங்கிய நூலொன்றை வெளியிட்டனர். “வாழைச்சேனை வரலாறு” என்ற பெயரில் வாழைச்சேனை சரித்திரம் குறித்த நூலொன்றையும் இவர் வெளியிட்டார்.

வாழைச்சேனை - பொலன்னறுவை வீதியில் 1990 டிசம்பர் மாதம் 26ஆம் திகதி கண்ணிவெடியில் சிக்கி இவர் கொல்லப்பட்டார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார். இந்த கண்ணிவெடி இவரை இலக்காகக் கொண்டே வைக்கப்பட்டதாக முஸ்லிம் சமூகத்தவர் நம்புகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் மேலதிக அரச அதிபரான இவர் அரச அதிபராக பதவியுயர்வு பெறுவதைத் தடுக்கவே எல்.ரீ.ரீ.ஈயினர் இவரைக் கொலை செய்துள்ளனர் என நம்பப்படுகின்றது.

# 1991

**வேலுப்பிள்ளை ஆனந்தன் (46) - எழுத்தாளர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 21 பெப்ரவரி 1991**

தமிழ் இலக்கியவாதியான வேலுப்பிள்ளை ஆனந்தன் 1949 ஏப்ரல் 8ஆம் திகதி மட்டக்களப்பில் பிறந்தார். அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை தபால் அலுவலகத்தில் லிகிதராக கடமையாற்றிவந்த இவர் இலக்கியம் தொடர்பாக ஆர்வமிருந்தமையினால் பத்திரிகைளுக்கு இலக்கிய கலை விமர்சனங்களையும் எழுதிவந்துள்ளார். மலையாள மொழியில் பாண்டித்தியம் பெற்ற இவர் முப்பதிற்கும் மேற்பட்ட மலையாள சிறுகதைகளை மொழிபெயர்த்துள்ளார். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகளையும் எழுதியுள்ளார். 1995ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி மட்டக்களப்பில் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டபோது இவரும் பலியானார். இவரது மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கு பெரும் இழப்பாகும்.

சம்மாந்துறையில் இருந்து மட்டக்களப்பிலுள்ள அவரது வீட்டை நோக்கிச் செல்லும்போது அவர் பயணம் செய்த வாகனம் புதுக்குடியிருப்பில் தாக்குதலுக்குள்ளானது. இராணுவ முகாம் கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் அதாவது, 200 மீற்றர் தூரத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 1990 இறுதி முதல் 1991 ஆரம்பம் வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இந்தத் தாக்குதலுக்கு முதல்நாள் முஸ்லிம் ஊர்காவற்படையைச் சேர்ந்த இருவர் எல்.ரீ.ரீ..ஈயினரால் கொலை செய்யப்பட்டிருந்தனர். எழுத்தாளர் ஆனந்தன் உட்பட தமிழ் பயணிகள் பயணம் செய்த அந்த வாகனம் 1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி சம்பவ இடத்தை அடைந்தபோது முதல் துப்பாக்கி வேட்டு சாரதியின் முகத்தைச் சிதைத்துள்ளது. இந்நிலையில் வாகனம் அருகிலிருந்த மின்கம்பமொன்றுடன் மோதி நின்றுள்ளது. வாகனத்தின் யன்னலின் ஊடாக வெளியேறிய

பயணியொருவர் வாவியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தபோது அவரது தலையை நோக்கி துப்பாக்கி வேட்டொன்று தீர்க்கப்பட்டுள்ளது. புல்வெளியில் கீழே விழுந்ததால் அப்பயணி துப்பாக்கி வேட்டிலிருந்து தப்பித்துக்கொண்டார். வாகனம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதால் கொலையுண்டவர்களும், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தவர்களும் அந்தத் தீயில் எரிந்து சாம்பலானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கவிஞர் ஆனந்தனும் இந்தக் கொடூரத் தீயில் தனது இன்னுயிரைப் பறிகொடுத்தார். 2000ஆம் ஆண்டில் இவரது நண்பர்கள் இவரது கவிதைகளைச் சேகரித்து ஆனந்தன் கவிதைகள் என்ற பெயரில் நூலாக வெளியிட்டு இவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.



**சூசைப்பிள்ளை நோபட் அல்லது டொமினிக் - எழுத்தாளர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 17 மே 1991**

1948ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி திருகோணமலை பாலையூற்று என்ற கிராமத்தில் பிறந்த இவர் அங்குள்ள புனித ஜோசப் வித்தியாலத்தில் கல்வி பயின்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைபட்டதாரியாகியுள்ளார். அரச அளவைத் திணைக்களத்திலும் கல்வித் திணைக்களத்திலும் கடமையாற்றிய இவர் 1982ஆம் ஆண்டு புளொட் இயக்கத்தில் இணைந்து முழுநேர அரசியலில் ஈடுபடுவதற்காக தொழிலைக் கைவிட்டார். குறுகிய காலத்தில் புளொட் அரசியல் பிரிவின் உறுப்பினரானார். அவர் அரசியலை தெரிவு செய்வதற்கு முன்னர் படைப்பிலக்கியத்தில் ஆழமான ஆர்வம் காட்டி வந்தவராவார்.

தோட்டப்பகுதிகளில் நிலவும் அரசியல் நிலை அம்மக்களின் பிரச்சினைகள் குறித்து "தீர்த்தக்கரை" என்ற சஞ்சிகைக்கு தொடர்ந்தும் எழுதிவந்தார். 'தீர்த்தக்கரை' என்ற சஞ்சிகை மலையகத்தில் இவரால் பிரான்சிஸ் சேவியர் என்ற புனை பெயரில் வெளியிடப்பட்டது. "தேசவன்" என்ற பெயரில் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு எழுதிவந்துள்ளார்.

"புதியதொரு உலகம்" என்ற நாவல் மூலம் இவர் தமிழ் மக்கள் மத்தியிலும் ஏனைய முற்போக்கு எண்ணம் கொண்ட மக்கள் மத்தியிலும் பிரபலமடைந்தார். கோவிந்தன் என்ற புனைபெயரிலேயே இவர் அந்த நாவலை எழுதினார். எதிர் கருத்துக்களுக்கு இடமளிக்காத தமிழ் இளைஞர் அமைப்புகளுக்குள் நிலவும் உட்பூசல்களை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் வகையிலான இந்த நாவலில் புளொட் இயக்கத்தில் அந்த நாட்களில் நிலவிய உட்பூசல்கள் குறித்து எழுதப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இயக்கத்திற்குள்ளிருந்த ஜனநாயக விரோத மற்றும் பூசல்களுக்கு எதிராக 1985ஆம் ஆண்டு அதிலிருந்து விலகி உயிரைக் காத்துக்கொள்வதற்காக இந்தியாவில் மறைந்து வாழ்ந்தபோது இந்த நாவலை எழுதியுள்ளார்.

இந்தியாவில் நாவலை வெளியிட்ட இவர் 1991ஆம் ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி புளொட் இயக்கத்தில் இருந்து விலகி ஜனநாயக எண்ணங்களைக் கொண்ட இளைஞர்களுடன் தீப்பொறி என்ற பெயரிலான ஒரு சிறு அரசியல் குழுவொன்றை ஆரம்பித்தார். இதை ஆரம்பித்து சில தினங்களுக்குள் ஏனைய குழுக்களுக்கும் கருத்துக்களுக்கும் இடமளிக்காத எல்.ரீ.ரீ.யினரால் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரும் மேலும் சிலருட்ன் டொமினிக் கைது செய்யப்பட்டார். 1991ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணம் கொக்குவில் பிரதேசத்தில் அவர் இருந்த வீட்டில் வைத்தே கைதுசெய்யப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட ஒருவர் மூலம் இவர் 1994ஆம் ஆண்டு ஜுன் மாதம் கொலைசெய்யப்பட்டார் என தகவல்கள் வெளியாகின.



**செல்வநிதி தியாகராஜா - ஊடகவியலாளர், நாடகத்தயாரிப்பாளர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 26 ஆகஸ்ட் 1991**

செல்வநிதி தியாகராஜா அல்லது செல்வி என்ற பெயரில் பிரபலமான இவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவில் இறுதியாண்டு மாணவியாவார். தோழி என்ற

பெண்ணிய சஞ்சிகையின் ஆசிரியையான இவர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக உடுவில் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த பூரணி பெண்கள் நிலையத்தில் முக்கியஸ்தவராகவும் செயற்பட்டு வந்தார். மேடை நாடகத் தயாரிப்பாளராகவும் விமர்சகராகவும் இருந்தார். எல்.ரீ.ரீ.யினரால் பல்கலைக்கழகத்தில் மேடையேற்றப்பட்ட நாடகத்தில் பிழையான அரசியல் கருத்துக்கள் குறித்து பகிரங்கமாக விமர்சித்தமை இவரது மரணத்தை துரிதமாக்க ஒரு காரணமாக அமைந்தது. இவரை "வாய் நீளம், மூடிக்கொள்" என எச்சரித்துள்ளனர். சுதந்திரமானதும் காத்திரமானதுமான மனிதாபிமான கருத்துக்களைக் கொண்ட இவரை இந்த அச்சுறுத்தல்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

இவர் கைதுசெய்யப்படும்போது குழந்தைகளுக்காகவும், போராட்டங்களின்போது பெண்களின் பொறுப்பு ஆகிய இரண்டு நாடகங்களை தயாரித்துக்கொண்டிருந்தார். பாலஸ்தீன போராட்டத்தை பின்னணியாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாடகம் மேடையேற்றப்படுவதற்கு முதல்நாள் இவர் கைதுசெய்யப்பட்டார்.

செல்வி வாழ்ந்த, சேவையாற்றிய சமூகத்தில் இருந்து அவரை 1991ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி அபகரித்துச் சென்றனர். தன்னை கைதுசெய்ய வருகின்றனர் என்ற தகவலைக் கேள்விப்பட்ட அவர் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறி பெற்றோர்களுக்குத் தகவலை தெரிவித்த பின்னர் பல்கலைக்கழகத்திற்கு அருகேயுள்ள ஆதிசோதி வீதியிலுள்ள வீடொன்றில் எதிர்பார்ப்புடன் காத்திருந்துள்ளார். இரவு 7.30 மணியளவில் எல்.ரீ.ரீ.ஈயினர் இவரைக் கைதுசெய்துள்ளனர். 1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இவர் கொலைசெய்யப்பட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கைதுசெய்யப்படும்போது இவர் அணிந்திருந்த உடைகளை இவரது வீட்டுக்கு அனுப்பிவைத்த எல்.ரீ.ரீ.யினர் இவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதாகவும் அறிவித்துள்ளனர்.

1992ஆம் ஆண்டு International Pen என்ற சர்வதேச ஊடக இயக்கம் கருத்துச் சுதந்திரத்திற்காக உயிரைப் பணயம் வைத்தவர்களுக்கு வழங்கப்படும் விருதை இவருக்கு வழங்கியது. விருதைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக இவரை விடுதலை செய்யும்படி அல்லது அவரைத் தடுத்துவைத்திருக்கும் இடத்திற்கு வந்து விருதை வழங்க அனுமதிக்கும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு எல்.ரீ.ரீ.யினர் எதுவித பதிலுமளிக்காமல் அவரைக் கொலைசெய்துள்ளனர்.

## எஸ். தில்லைநாதன் - கலாசார செயற்பாட்டாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 26 ஆகஸ்ட் 1991

சிறந்த வீதி நாடகக் கலைஞர் மற்றும் நடிகரான இவர் ஆசிரியர் தொழில் செய்து வந்தார். மூன்று சகோதரிகள், மூன்று சகோதரர்களைக் கொண்ட குடும்பத்தின் மூத்தவரான இவருக்கு குடும்பத்தைக் கவனிக்கும் பொறுப்பும் இருந்தது. யாழ் நகரில் வாழ்ந்த இவர் வவுனியா, செட்டிகுளம், பாவட்டகுளம் போன்ற பின்தங்கிய கிராம வித்தியாலயத்திற்கு முதல்முதலாக ஆசிரியர் நியமனம் பெற்றுச் சென்றார். விடுமுறை கிடைக்கும் போதெல்லாம் யாழ்ப்பாணம் சென்றார். தமது நண்பர்களுடன் கலை தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இவர் யாழ் பல்கலைக்கழகத்தின் கலாச்சாரக் குழுவின் ஆரம்ப உறுப்பினருமாவார். 1991ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் மிகுந்த கவலையுடன் காணப்பட்டார். தமது காதலியான கவிஞர் சிவரமணி அவ்வருடம் மே மாதம் தற்கொலை செய்துகொண்டமை இவரை பெருங்கவலைக்குள்ளாக்கியது. மனித வாழ்வின் பெறுமதி குறைந்து கொலைகள் அரசாண்ட தமது சமூகத்தின் மக்களுக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அந்த தொடர்புகளில் இருந்து விலகி சம்பிரதாயபூர்வ திருமண வாழ்க்கையில் ஈடுபடும்படி அவரது தயார் வலியுறுத்துவதைத் தவிர்க்கமுடியாமல் அவர் தற்கொலை செய்துகொண்டார். தமது காதலியைப்போல் தமது சமூகத்தினது மனித உரிமைகளுக்காக பாடுபட்ட ஆருயிர் நண்பியை இழந்த கவலையிலும் இருந்தபோது

தில்லை ஆக்ஸ்ட் பாடசாலை விடுமுறைக்காலத்தில் செல்வி, மனோகரன் ஆகிய நண்பர்களுடன் நாடகத்தயாரிப்பு ஒன்றில் ஈடுபட்டிருந்தார். எல்.ரீ.ரீ.ஈயை விமர்சித்த காரணத்தால் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது. செல்வி மற்றும் மனோகரன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டதுடன், 1991 ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள தமது வீட்டில் வைத்து இவரும் எல். ரீ.ரீ.யினரால் கைதுசெய்யப்பட்டார்.

கிடைத்த தகவல்களின்படி துணுக்காய் எல்.ரீ.ரீ.யின் வதைமுகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டு இவர் கொலைசெய்யப்பட்டுள்ளார். 1993ஆம் ஆண்டு மே மாதம் இவரது வீட்டுக்கு சென்ற எல்.ரீ.ரீ.ஈயினர் இவருடைய ஆடைகளைக் கையளித்துவிட்டு இவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரிவித்துச் சென்றுள்ளனர்.

## கே.மனோகரன் - கலாசார செயற்பாட்டாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 26 ஆகஸ்ட் 1991

யாழ் பல்கலைக்கழக பௌதீகப் பிரிவின் இறுதியாண்டு மாணவரான கே. மனோகரனும் செல்வி மற்றும் தில்லைநாதன் ஆகியோர் கைதுசெய்யப்பட்ட அதே தினம் இரவு கைதானார். யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதியில் இவர் தனது தாயாருடன் வாழ்ந்து வந்தார். மிகவும் ஏழ்மையான நிலையில் வாழ்ந்த இவர் பல சவால்களுக்கு மத்தியில் கல்வியின் உச்சத்திற்குச் சென்றார். செல்வி, தில்லைநாதன் போன்ற நண்பர், நண்பிகளுடன் கலை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார். இவர்கள் எல்.ரீ.ரீ.ஈயினரால் கைதுசெய்யப்பட்ட தினத்திற்கு மறுநாள் மேடையேற்றப்படவிருந்த நாடகத்தில் இவரும் பங்குகொண்டிருந்தார். தமது பிரதேசத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்திற்கு தகவல்களை வழங்குவதால் எல்.ரீ.ரீ.ஈயினரின் துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டார். இவரும் துணுக்காய் வதைமுகாமில் வதைசெய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டார் என பின்னர் அங்கிருந்து

விடுவிக்கப்பட்டவர்கள் மூலம் தகவல்கள் கிடைத்துள்ளன. இவரது தாய்க்கு என்ன நடந்தது என்று இதுவரை யாருக்கும் தெரியவில்லை.

# 1993



## அன்டனி குவின்டஸ் பெர்னாண்டோ – பிரதேச ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 2 மே 1993

அன்டனி குவின்டஸ் பெர்னாண்டோ கத்தோலிக்க மதப் பத்திரிகையான ஞானார்த்த பிரதீப பத்திரிகையின் காலி மிஷனுக்குப் பொறுப்பான நிருபராக பலகாலம் கடமையாற்றியுள்ளார்.

இலங்கையில் மிகவும் பழமைவாய்ந்த பத்திரிகையான இது 1866ஆம் ஆண்டு ஜ"ன் 9ஆம் திகதி முதல் வெளிவந்துகொண்டிருப்பதுடன் இப்போது இதில் கடமையாற்றும் நிருபர்களை அந்தந்த மிஷனுடன் தொடர்புடைய சுயசேவை நிருபர்களென அழைக்கப்படுகின்றனர். இவர்கள் சம்பளம் பெறாமல் கடமையாற்றுகின்றனர். ஏழு சகோதர சகோதரிகளைக் கொண்ட குடும்பத்தில் ஆறாவதாக இவர் காலியில் பிறந்தார்.

இவர் மிகவும் துன்பியல் வாழ்க்கையை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 1990ஆம் ஆண்டு தாம் கல்வி கற்ற காலி ஸ்ரீ ஹர்தய மகளிர் வித்தியாலயத்தில் பயிற்சி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் எதிர்பாராத விதமாக கொலைசெய்யப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் எழுத்தில் கொண்ட ஆர்வம் காரணமாக 100 மாணவ மாணவிகள் கலந்துகொண்ட சிறுவர் கட்டுரைச் செயலமர்வொன்றை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

1993ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் இவரும் படுகாயமுற்று சிகிச்சைபெற்று வந்தபோதே கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் மே மாதம் 2 திகதி மரணமானார்.

## 1994



### ஏ. சபாலிங்கம் - எழுத்தாளர், சுயாதீன ஊடகவியலாளர்
### கொலைசெய்யப்பட்ட தினம் - 1 மே 1994

தமிழர் போராட்டத்தை ஆவணப்படுத்த நடவடிக்கை மேற்கொண்ட புத்திஜீவிகளுக்குள் ஒருவரான ஏ. சபாலிங்கம் பிரபல எழுத்தாளராவார். 1994 மே மாதம் 1ஆம் திகதி பாரீசில் வைத்து இவர் படுகொலை செய்யப்பட்டார். உயிர்பாதுகாப்புக்காக இலங்கையை விட்டுச் சென்று வாழ்ந்த இவரது கொலைக்கு எதிராக லண்டனில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் சமூக செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் ஆகியோர் பெருமளவில் கலந்துகொண்டனர். இவர்கள் இக்கொலைக்கு எல்.ரீ.ரீ.ஈயினரே காரணம் என குற்றஞ்சாட்டி கொலையாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை வழங்கவேண்டும் என கோரிக்கை விடுத்தனர். கனடாவில் இருந்து வெளிவரும் "தியாகம்" என்ற சஞ்சிகைக்கு அவர் எழுதிய இறுதிக் கட்டுரையில் ஈழ இயக்கத்தின் ஆரம்பகாலம் குறித்தும் பிரபாரகனின் பொறுப்புக் குறித்தும் கூர்மையான இரு கேள்விகள் எழுப்பப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'தியாகம்' சஞ்சிகை எல்.ரீ.ரீ.ஈயை கடுமையாக விமர்சித்த சஞ்சிகையாகும். ஆதனால் பலசந்தர்ப்பங்களில் சஞ்சிகைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. 1973ஆம் ஆண்டு

மொறட்டுவை கட்டுப்பெத்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் மாணவராக இருந்தபோது இவர் அனுராதபுரம் மற்றும் போகம்பரை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். போகம்பரை சிறைச்சாலையில் இரண்டாம் மாடியிலிருந்து கீழேவிழுந்ததால் இடது கையை இழந்தார். இளைஞர் பேரவை என்ற பெயரிலான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி இளைஞர் அரசியல் பிரிவில் முக்கியஸ்தராக தமது அரசியலை ஆரம்பித்தார். எல்.ரீ.ரீ.ஈயினர் ஏனைய அமைப்புக்களை அடக்கி ஒடுக்கிய பின்னர் தமிழர் போராட்டத்திற்குள் வன்முறைகள் தலைதூக்கிய விதம் குறித்து இவர் இறுதிக்காலத்தில் நூல் ஒன்றை எழுதிக்கொண்டிருந்தார். சுவிட்ஸர்லாந்து மற்றும் இலங்கையைச் சேர்ந்த எல்.ரீ.ரீ.ஈயினர் செயற்பாட்டாளர்கள் இருவர் விருந்தினர்களாக அவரது வீட்டுக்குச் சென்று அவரளித்த தேனீர் விருந்தையும் சுவைத்துவிட்டு மனைவி மற்றும் இரு பிள்ளைகளுக்கு முன்பாகவே அவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.



**கே.எஸ். ராஜா (40) - வானொலி அறிவிப்பாளர், தயாரிப்பாளர்**
**கொலை செய்யப்பட்ட தினம் - 3 டிசம்பர் 1994**

கனகரத்தினம் ஸ்ரீஸ்கந்தராஜா அல்லது கே.எஸ் ராஜா பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தபோதும் வானொலியில் கடமையாற்றவேண்டும் என்ற தீராத ஆசை காரணமாக பல்கலைக்கழகத்தை கைவிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் அறிவிப்பாளராக இணைந்து கொண்டவராவார். அதில் பகுதிநேர அறிவிப்பாளராக இருந்த அவர் தமிழ் வர்த்தக சேவையில் அறிவிப்பாளராக நிரந்தர நியமனம் பெற்றார். அப்போது தமிழ்ச் சேவையில் முதலாம்தர நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என்று பிரபலமடைந்திருந்த மயில்வாகனத்தின் சாதனையை முறியடித்தவர் என்ற பெருமையை இவர் பெற்றார். நிகழ்ச்சித் தயாரிப்பில் பிரபலமான இவர் பகுதி நேர அறிவிப்பாளராகவிருந்து கொண்டு தேசிய திரைப்படக்

கூட்டுத்தாபனத்தின் பிரசார அதிகாரியாக நியமனம் பெற்றார். தொழிலில் இருந்து விலகாமல் இந்தியாவிற்குச் சென்று அப்போது இந்தியாவிலிருந்த இலங்கைத் தமிழ் அரசியல் குழுக்களின் மேடைகளில் அறிவிப்பாளராக இருந்தார் என அவரது சமகால நண்பர்களிடமிருந்து தெரிந்துகொள்ளக்கூடியதாகவிருந்தது.

மீண்டும் இலங்கைக்கு திரும்பிய அவர் கே.எஸ். ராஜா என்ற பெயரில் நிகழ்ச்சியொன்றை முன்வைத்து இலங்கை வானொலியில் இணைந்து கொண்டபோதும் அவர் அதிக அக்கறையுடன் செயற்படவில்லையென கூறப்படுகின்றது. மக்கள் குரல் என்ற விவாதத்திற்குரிய நிகழ்ச்சியொன்றை தயாரிக்க பங்களிப்பு வழங்கினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அது ஈ.பி.டி.பி அமைப்பின் ஆதரவில் ஒலிபரப்பானதெனத் தெரிவிக்கப்படுகின்றது. காரைநகரில் பிறந்த இவர் கொழும்பு பொரளையில் மனைவி பிள்ளைகளுடன் வசித்து வந்தார்.

1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி இவரது சடலம் கொழும்பு காலிமுகத்திடலிலுள்ள பண்டாரநாயக்க சிலைக்கு அருகில் இருந்து கண்டெடுக்கப்பட்டது. கொலையுண்டபோது அவருக்கு வயது 40.

# 1995

**கருணாரத்ன சப்புதந்திரி (52) – ஊடகவியலாளர்**
**கிரமபியசோம(41) – ஊடகவியலாளர்**
**எட்வின் வீரசிங்க (45) - புகைப்பட ஊடகவியலாளர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 29 ஏப்ரல் 1995**







'சிலுமின' ஞாயிறு பத்திரிகையின் இணை ஆசிரியரான கருணாரத்ன சப்புதந்திரி, அந்த பத்திரிகையின் உதவி செய்தி ஆசிரியரான கிரமபியசோம மற்றும் புகைப்பட ஊடகவியலாளர் எட்வின் வீரசிங்க ஆகிய மூவரும் 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி பயணம் செய்த அ∴வ்ரோ விமானம் எல்.ரீ.ரீ.ஈயினரின் மிசயில் தாக்குதலில் எரிந்து வீழ்ந்ததில் கொல்லப்பட்டனர். இவர்கள் மூவரும் அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் எரிந்து வீழ்ந்த அ∴வ்ரோ விமானம் தொடர்பான புலனாய்வு கட்டுரை ஒன்றை எழுதுவதற்காகவே யாழ்ப்பாணம் நோக்கி இந்த விமானத்தில் புறப்பட்டுச் சென்றிருந்தனர். இருந்தும் இவர்கள் மூவரும் எரிந்து சாம்பலாகினர். பிரபல ஊடகவியலாளரான கருணாரத்ன சப்புதந்திரி 1973ஆம் ஆண்டுமுதல் சிலுமின பத்திரிகைளில் கடமையற்றியவராவார். இவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார். கிரமபியசோம கொலைசெய்யப்படும்போது அவருக்கு சிறுகுழந்தைகள் இருந்தனர். புகைப்பட ஊடகவியலாளர் எட்வின் வீரசிங்கவுக்கும் இரு பிள்ளைகள் இருந்தனர்.



## எஸ்.எஸ். கணேசபிள்ளை - வானொலி ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 30 ஆகஸ்ட் 1995

எஸ்.எஸ். கணேசபிள்ளை தமிழ் வானொலி நேயர்கள் மத்தியில் வரணியூரான் என்ற பெயரில் பிரபல ஊடகவியலாளர் எனப் புகழ்பெற்றிருந்தார். அவர் சிறந்த வானொலிக் கலைஞராக மட்டுமன்றி சிறந்த பிரதி எழுத்தாளராகவும் விளங்கினார். நகைச்சுவை நாடகங்களில் சிறந்த நடிகராகவும் சிரிக்கவைக்கும் வகையில் சமூகத்திற்குள் அநீதி மற்றும் முறையற்ற நடவடிக்கை, சீதனப் பிரச்சினைகள், காணிப்பிரச்சினைகள் மற்றும் பிரதேசவாதம் போன்றவற்றை விமர்சித்தவராவார். இவர் சிறுவர்களுக்காக நூற்றுக்கும் மேற்பட்ட நகைச்சுவை நாடகங்களை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணம், கொடிகாமம் பிரதேசத்தில் வரணி என்ற இடத்தில் பிறந்துள்ளார். கொழும்பு மருதானையில் வாழ்ந்துகொண்டு பிரபல வானொலிக் கலைஞராக விளங்கிய இவர் வெளிநாட்டு சேவை வாய்ப்பு முகவர் நிலையமொன்றையும் நடத்திவந்தார். 1995ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி இரவில் இவரை எல்.ரீ.ரீ.ஈயினரே சுட்டுக்கொன்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் வானொலி நிகழ்ச்சியின் மூலம் எல்.ரீ.ரீ.ஈயை விமர்சித்து நடத்தப்பட்ட நிகழ்ச்சியொன்றே இந்தக் கொலைக்கு காரணமாக இருந்திருக்கலாமெனக் கருதப்படுகின்றது. மனைவியும் ஒரு புதல்வியும் கொழும்பில் வாழ்ந்தததுடன், அதேவேளை வரணியில் வசித்த மற்றுமொரு புதல்விக்கு இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள எல்.ரீ.ரீ.ஈயினரால் அனுமதிமறுக்கப்பட்டது. இதன் காரணமாக இவரது மரணத்தைக் கேள்விப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள் எவரும் இவரது புதல்வியின் வீட்டுக்குச் சென்று தமது கவலைகைளை தெரிவிக்க அச்சமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 1996

**பிரதீப் பூர்ணஜித் (30) - பக்கவடிவமைப்பாளர் மற்றும் கேலிச்சித்திரக் கலைஞர்.**
**கொலை செய்யப்பட்ட தினம் - 28 ஜுலை 1996**



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் 'நவயுகய' பத்திரிகையின் பக்க வடிவமைப்பாளாராகவும், சித்திரம் மற்றும் கேலிச் சித்திரக் கலைஞராகவும் சேவையாற்றிய பிரதீப பூர்ணஜித் திருமணமாகாத இளைஞராவார். பாணந்துறை நகருக்கருகில் வசித்த இவர் நாளாந்தம் கடமைக்கு வரும் ரயிலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். 1996ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28ஆம் திகதி வழமைபோல் கடமை முடிந்து கொழும்பு கோட்டையில் இருந்து ரயிலில் ஏறிய பிரதீப் பூர்ணஜித்துடன் மேலும் பல உயிர்களை குண்டு வெடித்ததில் பலியாக்கியது. பிரதீப் சர்வதேச புகழ்பெற்ற முத்திரை வடிவமைப்பாளருமாவார்.

**கந்தையா கஜேந்திரன் (30) - ஊடகவியலாளர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 26 அக்டோபர் 1996**

கஜன் என்ற பெயரில் பிரசித்தமடைந்திருந்த கஜேந்திரன் பாரிஸிலிருந்து வெளிவந்த வார இறுதிப் பத்திரிகையான ஈழமுரசின் ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். இது எல்.ரீ.ரீ.ஈயினரின் கருத்துக்களைக் கொண்ட பத்திரிகையாக கருதப்பட்டது. பாரிஸின் வடக்குப் பகுதியில் உள்ள லாசபெய் மாவட்டத்தில் கந்தையா கஜேந்திரன் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் எல்.ரீ.ரீ.ஈயின் சர்வதேச நிதிப் பிரிவின் தலைவராகவிருந்த கந்தையா பேரின்பநாதனும் இவருடன் இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன் இருவரும் கொலைசெய்யப்பட்டதாகத் கூறப்படுகின்றது. எல்.ரீ.ரீ.ஈயினருக்கு விரோதமான குழுவினரே இக்கொலைகளைப் புரிந்துள்ளதாகத் சந்தேகிக்கப்படுகின்றது.

# 1997

## திருநாவுக்கரசு தர்மலிங்கம் - பத்திரிகை விற்பனைப் பிரதிநிதி

**கொலைசெய்யப்பட்ட தினம் - 3 அக்டோபர் 1997**

புத்தகக் கடையொன்றின் உரிமையாளரான திருநாவுக்கரசு தர்மலிங்கம் பத்திரிகை விற்பனை பிரதிநிதியாகவும் செயற்பட்டு வந்தார். சமாதான நீதிவானான இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராகவும் செயற்பட்டு வந்தார். 1997ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் குப்பி விளக்கின் ஒளியில் இரவு உணவை சாப்பிட்டுக்கொண்டிருந்த இவரை நோக்கி ஜன்னலின் ஊடாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த கொலையாளிகள் அங்கிருந்து தப்பிச்சென்றனர். படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த கொழும்புத்துறை பிரதேசத்தின் அமைந்துள்ள வீட்டுக்கு வந்து இக்கொலையைப் புரிந்தவர்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுவினராக இருக்கக்கூடும் என படையினர் சந்தேகித்தபோதும் பின்னர் அது எல்.ரீ.ரீ.ஈயினரால் மேற்கொள்ளப்பட்டதென பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக அறிவிக்கப்படுகின்றது. இந்தச் செய்திகளின்படி பலாத்காரமாக அமர்த்தப்பட்ட படகொன்றின் மூலம் கொழும்புத்துறை கடற்கரைப் பிரதேசத்திற்குள் வந்த எல்.ரீ.ரீ.ஈயின் துப்பாக்கிதாரிகள் சம்பந்தப்பட்ட அலுவலக நண்பரொருவர் மூலம் அப்பிரதேசத்தின் மின் விநியோகத்தைத் துண்டித்துவிட்டு தர்மலிங்கத்தின் வீட்டுக்கு வந்து யன்னலின் ஊடாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# 1998

## சசி கிருஷ்ணகுமார் - சுயாதீன ஊடகவியலாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 29 செப்டெம்பர் 1998



பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான சசி கிருஷ்ணகுமார் பனை அபிவிருத்திச் சபையின் அதிகாரியாக கடமையற்றிக் கொண்டு பத்திரிகைகள் சஞ்சிகைகள் பலவற்றுக்கு சுயாதீன ஊடகவியலாளராக கட்டுரைகளை எழுதியுள்ளார். ஈழநாடு, வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகள் இவற்றில் முக்கியமானவை. திரைப்படம் மற்றும் ஏனைய கலைப் படைப்புகள் தொடர்பான விமர்சனங்களை எழுதுவதில் விருப்பம் கொண்ட இவர் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தகவல்களையும் திரட்டி வழங்கியுள்ளார். 'யுக்திய' பத்திரிகையில் வெளியான அயலவர்களின் நாளேட்டிற்காக யாழ்ப்பாண மக்களுடைய வாழ்வின் அழிவு தொடர்பாக இரகசியத் தகவல்களை வழங்கினார். திரைப்படங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்திய இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் திரைப்பட சங்கமொன்றை அமைப்பதற்கு முன்னோடியாகவிருந்தார். லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், வசந்த ஒபசேகர, தர்மசேன பத்திராஜா ஆகிய இலங்கையின் முன்னணி தயாரிப்பாளர்களின் திரைப்படங்களை யாழ் குடாநாட்டுக்குத் தருவித்து அவற்றைத் திரையிட்டமை தொடர்பாகவும் சகிப்புத் தன்மை கொண்ட கருத்தைக் கட்டியெழுப்புவதிலும் இவர் முன்னணிப் பாத்திரம் வகித்தார்.

சேகரிக்கப்பட்ட பல தகவல்களுடன் 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் 29ஆம் திகதி கொழும்புக்கு வருவதற்காக அவர் பலாலி விமான நிலையத்தில் விமானமேறினார். அன்றைய தினம் பகல் ஆகாயத்தை நோக்கியெழுந்த அந்த விமானம் நண்பகல் 1.40 மணியளிவில் வானத்தில் வெடித்துச் சிதறியது. அந்தச் சம்பவத்தில் அவரும் கொல்லப்பட்டார்.

அந்த விமானத்தில் இருந்த மூன்று ஊழியர்கள் உட்பட 49 பயணிகளும் கொல்லப்பட்டனர். எல்.ரீ.ரீ.ஈயினரின் மிசயில் தாக்குதல் காரணமாக இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

# 1999



## ரோஹண குமார - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 07 செப்டெம்பர் 1999

எட்டியாந்தோட்டை பிரதேசத்தின் கனேபல்ல கிராமத்தில் பிறந்த ரோஹண குமார ஆரம்பத்தில் கலையில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். "சராகி சிஹினய" என்ற நாடகத்தை கிராம நண்பர்களுடன் இணைந்து தயாரித்த இவருக்கு ஏற்பட்ட பொருளாதார சிக்கல் காரணமாக நாடகக் கலையைக் கைவிட்டு கொழும்புக்கு வரவேண்டியேற்பட்டது. சிறு பத்திரிகைகளில் கடமையாற்றிய இவர் பின்னர் 'கிந்தர' (நெருப்பு), 'சட்டன' (போராட்டம்) போன்ற பத்திரிகைளில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவரது இந்த பத்திரிகைக்கலை எப்போதும் கடுமையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டிராததும் கோபத்தைத் தூண்டும் விமர்சனங்களை அள்ளி வீசுவதுமான போக்கையே கொண்டிருந்தது. மோதலைத் தூண்டும் வகையிலும் மோசமான மொழிப் பாவனையாலும் இப்பத்திரிகை வாசகர் மத்தியில் வரவேற்பைப் பெறவில்லை. இவர் இறுதியாக ஆசிரியராகவிருந்த 'சட்டன' பத்திரிகை மூலமாக இவர் ஆரம்பத்தில் பலத்த ஆதரவு வழங்கிய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை பின்னர் கடுமையாக விமர்சனம் செய்து வந்தார். 1999ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி இரவு 10 மணியளவில் ஆட்டோ ஒன்றில் நுகேகொட மிரிஹாணவிலுள்ள தமது வீட்டுக்குச் சென்றுள்ளார். வீட்டுக்கருகில் காத்திருந்த கொலையாளிகள்

இவரை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துள்ளனர். டொயோடா ரகத்தைச் சேர்ந்த இரு வாகனங்களில் கொலையாளிகள் வந்துள்ளனர். அக்கொலையைச் தாம் செய்ததாக ஒப்புக்கொண்ட தார அஜித் என்ற நபர் கைதுசெய்யப்படும்போது ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய பெத்தகானே சஞ்சீவ என்ற நபரின் பெத்தகானே வீதியிலுள்ள வீட்டில் இருந்துள்ளார். தார அஜித் மற்றும் பெத்தகானே சஞ்சீவ ஆகியோர் கொலை செய்யப்பட்டதால் ரோஹன குமாரவின் கொலை தொடர்பான இரகசியங்களும் புதையுண்டுபோயின. இவரது மனைவிக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் அவரும் நாட்டை விட்டுச் செல்லவேண்டிய நிலையேற்பட்டது.

## அற்புதராஜா (ரமேஷ்) - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 2 நவம்பர் 1999



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியால் வெளியிடப்பட்ட 'தினமுரசு' வார இதழின் ஆசிரியரான அற்புதராஜா, நடராஜா ரமேஷ் என்ற பெயரிலேயே பிரபலமடைந்திருந்தார். இவர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (EPDP) யாழ் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாவார். 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கருகில் பட்டப்பகலில் இவர் பயணம் செய்த வாகனத்தை சுற்றிவளைத்த துப்பாக்கிதாரிகள் சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டதில் அவர் கொலைசெய்யப்பட்டார். 'தினமுரசு' வார இதழ் தமக்கு பெரும் அச்சுறுத்தலெனக் கருதிய எல்.ரீ.ரீ.ஈயினர் ரமேஷை சுட்டுக்கொலை செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இருந்தும் பட்டப்பகலில் இக்கொலை இடம்பெற்ற விதம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. 'தினமுரசு' வார இதழ் இவர் கொலைசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தேவைகளை புறக்கணித்து நடந்துகொள்வது குறித்து தலைமைக்கும் பத்திரிகை ஆசிரியருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்ததாகவும் தகவல்கள் கசிந்தன. எனவே இது உட்பூசல் காரணமாக இடம்பெற்ற

கொலையெனவும் சந்தேகிக்கப்படுகின்றது. இவரது சொந்த இடம் யாழ்ப்பாணம்.



**அனுரபிரியந்தகுரே- ஒளியமைப்பு கலைஞர்**
**கொலை செய்யப்பட்ட தினம் - 18 நவம்பர் 1999**

கொழும்பு மாவட்ட ராஜகிரிய பிரதேசத்தில் கலபலுவாவ என்ற இடத்தில் வாழ்ந்துவந்த அனுரபிரியந்த குரே சுயாதீன தொலைக்காட்சிச் சேவையில் ஒளியமைப்புக் கலைஞராக கடமையாற்றினார். ஒரு பெண்குழந்தை இவருக்குண்டு. 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி கொழும்பு மாநகர சபைத் திடலில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் இறுதிப் பிரசார கூட்டத்தை (அப்போது ஆட்சியில் இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி) ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்தபோது கூட்டத்தில் இருந்த தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்கச் செய்ததில் அதில் இவரும் கொலைசெய்யப்பட்டார். இந்தச் சம்பவத்தில் 13 பேர் கொல்லப்பட்டனர். இதில் ஜனாதிபதி வேட்பாளரான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க உட்பட சில ஊடகவியலாளவர்களும் காயமுற்றனர்.



**இந்திக பத்தினிவசம் - கமரா உதவியாளர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 18 டிசம்பர் 1999**

சிரச ஊடக வலையமைப்பின் கமரா உதவியாளராக கடமையாற்றிய இளைஞரான இந்திக பத்தினிவசமும் 1999 ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி கொழும்பு நகரசபைத் திடலில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் இறுதி பிரசாரக் கூட்டத்தில் (பொதுஜன ஐக்கிய முன்னணி) இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலிலேயே கொல்லப்பட்டார். கொழும்பு மாவட்ட நுகேகொட எம்புல்தெனிய பிரதேசத்தில் வாழ்ந்து வந்த இவர் குடும்பத்தின் ஒரேயொரு பிள்ளையாவார். இவர் ஒரு குழந்தையின் தந்தையாவார்.

**பெஸ்டியன் அந்தனி மரியதாஸ் - வானொலிக்கலைஞர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 31 டிசம்பர் 1999**

'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ் குடாநாடு அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அத்துடன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆரம்பித்த வானம்பாடி வானொலி ஒலிபரப்பின் வவுனியா அலுவலகத்தில் பெஸ்டியன் அந்தனி மரியதாஸ் வெளிக்கள கலைஞராக பணிபுரிந்தார். வவுனியாவைச் சேர்ந்த இளைஞரான இவர் அங்குள்ள கத்தோலிக்க தேவாலயத்தின் செயற்பாடுகளிலும் முன்னிலை வகித்தவராவார். 2000ஆம் ஆண்டை வரவேற்க முழுநாடும் தயாரான வேளையில் 1999ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி இரவு வானம்பாடி தமிழ் வானொலி சேவை நேரடி ஒலிபரப்பொன்றுக்குத் தயாரானது. இதற்காக புனித அந்தோனியார் தேவாலயம் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. இதற்கான ஏற்பாடுகளுக்கு மரியதாஸ் பொறுப்பாகவிருந்தார். வானம்பாடி தமிழ் வானொலி சேவையின் கட்டுப்பாட்டாளரான கொழும்பில் பணிபுரிந்த ஜீவரத்ன குமாரும் கொழும்பிலிருந்து வவுனியாவிற்குச் சென்றிருந்தார். சகல ஏற்பாடுகளையும் முடித்துக்கொண்டு கொழும்பிலிருந்து வருகைதந்திருந்த அதிகாரியை தேவாலயத்தில் தங்கவைத்துவிட்டு தனது வீட்டுக்குச் சென்ற மரியதாஸ் அந்த அதிகாரியைப் போல் உடை அணிந்துகொண்டு ஒலிபரப்பு நடவடிக்கைகளுக்கு தயாராக தேவாலயத்திற்கு வந்தார். நிகழ்ச்சி தொடர்பாக முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்ததால் பெருந்தொகையான மக்களும் கூடியிருந்தனர். அன்றைய தினம் இரவு 10.30 மணியளவில் அங்கு வந்த துப்பாக்கிதாரிகள் தேவாலய வாசலுக்கு அருகே வைத்து மரியதாஸின் வாய்க்குள் துப்பாக்கியை வைத்து சுட்டுக் கொன்றனர்.

அக்கால கட்டத்தில் மடுதேவாலயம் மீதான ஷெல் தாக்குதல் குறித்து ஒலிபரப்பான நிகழ்ச்சி காரணமாக எல்.ரீ.ரீ.ஈயினர் வானம்பாடி வானொலி ஒலிபரப்புக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர். எனவே இக்கொலைக்கு எல்.ரீ.ரீ.ஈயினரே காரணமென பரவலான அபிப்பிராயம் நிலவியது.

கொழும்பிலிருந்து வந்த அதிகாரியையே இலக்காக இருந்திருக்கலாம் என ஒரு கருத்து நிலவியபோதும் கொலைக்கு இலக்கானது ஊடகத்திற்கு சேவையாற்றுவதற்காக முன்வந்த துடிப்பு மிக்க மற்றுமொரு இளைஞரே.

# 2000

## செழியன் பேரின்பநாயகம் - எழுத்தாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 10 செப்டெம்பர் 2000

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியை சொந்த ஊராகக் கொண்ட செழியன் பேரின்பநாயகம் சில காலம் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் ஆசிரியர் பீடத்தில் ஊடகவியலாளராக கடமையாற்றியுள்ளார். எழுத்தாளரான இவர் 1994ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறி ரெலோ இயக்கத்தின் சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு மட்டக்களப்பு நகரசபை தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்துடன் செயற்பட்டு வந்துள்ளார். இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தினமான 2000ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து 38 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள அம்பாறை மாவட்டத்தின் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள கல்முனை பாண்டிருப்பிலுள்ள கட்சி அமைப்பாளரான தனது நண்பரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். அன்றையதினம் அங்குவைத்து அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது நண்பரான எஸ். மனோகரனும், அவருடைய பிள்ளையும் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். இது எல்.ரீ.ரீ.ஈயினரால் நடத்தப்பட்டதென நம்பப்படுகின்றது. நகரசபைத் தலைவராக பொறுப்பேற்ற பின்னரும் பேரின்பநாயகம்

முடிந்தபோதெல்லாம் இலங்கை ஒலிரபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு செய்திகளை வழங்கிய பிரதேச செய்தியாளராகவும் செயற்பட்டார். கிழக்கிலங்கை ஊடகவியலாளர் சங்கத்தின் (**EAST LANKA JOURNALIST ASSOCIATION** ) தலைவராகவும் இருந்துள்ளார். இவர் தொடர்ந்து ஒரு எழுத்தாளராகவே பார்க்கப்பட்டார். 1983ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தை சீரழித்த சூறாவளியை மையமாகக் கொண்டு இவர் எழுதிய நூலொன்று மிகப் பிரபலமடைந்தது. இவர் மேலும் சில நூல்களையும் வெளியிட்டிருந்தார்.

## ஏ.எம். நிஹமத்துல்லா – ஊடகவியலாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 16 செப்டெம்பர் 2000

கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் மருதமுனை 3ஆம் வட்டாரத்தில் வசித்து வந்த ஏ.எம் நிஹமத்துல்லா 'தினகரன்' பத்திரிகையின் கல்முனை நிருபராகவிருந்தார். கொலை செய்யப்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமைச்சர் ஏ.எச்.எம். அஷ்ரப்பின் ஊடகச் செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார். இக்காலத்தில் இவர் தொடர்ந்து 'தினகரன்' பத்திரிகைக்கு செய்திகளை வழங்கி வந்தார். 2000ஆம் ஆண்டு செப்டெம்பர் 16ஆம் திகதி அமைச்சர் அஷ்ரப் உட்பட அவரது குழுவினர் பயணம் செய்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த ஊடகவியலாளரும், ஊடகச் செயலாளருமான நிஹமத்துல்லாவும் கொல்லப்பட்டார். இறக்கும்போது அவருதுக்கு வயது 40. இவர் இரு பிள்ளைகளின் தந்தையுமாவார்.



மயில்வாகனம் நிமலராஜன் (39) - ஊடகவியலாளர்
கொலைசெய்யப்பட்ட தினம் - 19 அக்டோபர் 2000

யாழ்ப்பாணத்தில் பிறந்த மயில்வாகனம் நிமலராஜன் தென்பகுதி சிங்கள ஊடகவியலாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கட்டியெழுப்பிக்கொண்டு செயற்பட்ட ஊடகவியலாளராவார். தெற்கிலுள்ள ஊடக நண்பர்கள் இவரை நிமலே என அன்புடன் அழைப்பர். இவர் சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஊடகப் பணியில் ஈடுபட்டார். பி.பி.சி சந்தேசிய (சிங்களம்) மற்றும் தமிழோசை, சூரியன் எவ்.எம் ஆகிய ஊடக நிறுவனங்களுக்காகவும் யாழ் நிருபராக நீண்டகாலம் பணியாற்றினார். அதுமட்டுமன்றி தேவைப்பட்ட எவருக்கும் அவர் தகவல்களை வழங்கும் மூலமாகத் திகழ்ந்தார். அதேபோல் யாழ். குடாநாட்டில் நடைபெறும் சம்பவங்களை முறையாக உலகுக்கு எடுத்துக் கூறும் துணிச்சல் மிக்க ஊடகவியலாளரென இவர் கணிக்கப்பட்டார். நீண்டகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள், அதேபோல் யுத்தத்தால் மூடி மறைக்கப்பட்ட இரகசியங்களை வெளிக்கொணரும் துணிச்சலும் இவருக்கிருந்தது. வடக்கு ஊடகவியலாளர் சங்கச் செயலாளரான இவர் மூன்று பெண்பிள்ளைகளின் தந்தையுமாவார்.

2000ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ஆம் திகதி இரவு தமது இல்லத்தில் அறையொன்றினுள் செய்தியொன்றை எழுதிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த கொலையாளிகள் யன்னல் வழியாக அவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன் கைக்குண்டொன்றையும் எறிந்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். நிமலராஜன் என்ற துணிச்சல் மிக்க ஊடகவியலாளர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரைத்துறந்தார். குண்டு வீச்சால் அவரது தாய், தந்தை மற்றும் வீட்டிலிருந்த உறவுமுறை மகனொருவரும் காயமுற்றனர். அரச கட்டுப்பாட்டிலிருந்த அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற இந்தக் கொலை மற்றும் குண்டுத்தாக்குதல் தொடர்பாக அரசின் மீதே குற்றஞ்சாட்டப்பட்டது.

அரசபடையினருடன் இணைந்து செயற்படும் ஈ.பி.டி.பி அமைப்பு இந்தக் கொலைக்கு காரணம் என குற்றஞ்சாட்டப்பட்டது. ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இக்கொலையை நியாயப்படுத்த முயற்சித்தார். அரச ஊடகங்கள் மூலமும் நிமலராஜன் புலிகளின் உளவாளி என இனங்காட்டவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவரது கொலைக்குப் பின்னர் அவரின் மனைவியும் பிள்ளைகளும் நாட்டைவிட்டு வெளியேறினர்.

# 2004



## ஐயாத்துரை ஜீ. நடேசன் - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 31 மே 2004

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை நடேசன் திருமணத்தின் பின்னர் மனைவியின் ஊரான மட்டக்களப்பில் குடியேறியுள்ளார். மட்டக்களப்பு லேக் வீதியில் இவரது வீடு அமைந்துள்ளது. தேசியப் பத்திரிகையான 'வீரகேசரி' பத்திரிகையின் மட்டக்களப்பு நிருபராகவிருந்த அவர் செய்திகளை மட்டுமன்றி அரசியல் விமர்சனங்களையும் எழுதிவந்த மூத்த பத்திரிகையாளராகவும் திகழ்ந்தார். பத்திரிகைளில் அவர் ஜீ. நடேசன் என்ற பெயரிலேயே எழுதிவந்தார். ஜீ என்ற எழுத்து அவரது மனைவியின் பெயரைக் குறிப்பிடுவதாகக் கூறப்படுகின்றது. இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையுமாவார். தேசிய வருமானவரித் திணைக்களத்தில் உயர் அதிகாரியாக இவர் கடமையாற்றிவந்தார். 2004ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி காலை தனது மோட்டார் சைக்களில் வழமைபோல் அலுவலகத்திற்குப் புறப்பட்டுச் சென்று அலுவலகத்திற்கு சுமார் 200 மீற்றர் தொலைவிலுள்ள மட்டக்களப்பு பார் வீதியிலுள்ள பத்திரிகை

விற்பனை நிலையத்தில் வீரகேசரி பத்திரிகையொன்றை வாங்கிக் கொண்டு திரும்பிச் செல்லும்போது மோட்டார் சைக்கிளில் வந்த கொலையாளிகள் இவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றனர். ஜீ. நடேசன் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினராகவும் கிழக்கு ஊடகவியலாளர் சங்கத்தின் உப தலைவராகவும் இவர் செயற்பட்டு வந்தார். எழுத்தாளரான இவர் வடக்கு - கிழக்கு சாகித்திய அக்கடமி விருதையும் பெற்றுள்ளார். அதேபோல் 2000ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் ஒன்றியத்தால் நடத்தப்படும் சிறந்த பத்திரிகையாளருக்கான விருது வழங்கும் விழாவில் சிறந்த தமிழ் ஊடகவியலாளருக்கான விருதையும் வென்ற ஊடகவியலாளராவார்.

## கந்தசாமி ஐயர் பாலநடராஜ் (48) - எழுத்தாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 16 ஆகஸ்ட் 2004

பாலா என்ற பெயரில் எழுத்துலகில் பிரசித்தமான கந்தசாமி ஐயர் பால நடராஜ் சிறுகதைகளடங்கிய சில தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். எழுத்தாளரான இவர் சுயாதீன ஊடகவியலாளராகவும் விளங்கினார். புலிகளின் பத்திரிகையான விடுதலைப் புலிகள் என்ற பத்திரிகைக்கு எழுதுவதன் மூலம் எழுத்துலகில் பிரவேசித்துள்ளார். யாழ் குடாநாட்டில் பிறந்த இவர் உரும்பிராய் இந்து வித்தியாலயத்தில் கல்வி பயிலும்போது ஈரோஸ் இயக்கத்தில் இணைந்தார். பின்னர் விடுதலைப் புலிகளின் இயக்க உறுப்பினராக செயற்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் பிராமணக் குடும்பமொன்றில் பிறந்த இவர் இந்து ஆலயமொன்றில் பூசகராகும் சந்தர்ப்பத்தை ஒதுக்கிவிட்டு தமது சமூகத்திற்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க அரசியல் செயற்பாட்டாளராக தகுந்த இடத்தைத் தேடிய வழியில் எல்.ரீ.ரீ.ஈயில் இணைந்தார். இடதுசாரி சிந்தனையுள்ள இவருக்கு சிறிதுகாலமே அங்கிருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதிலிருந்து விலகியது உயிரைப்

பயணம் வைப்பதாகும் என புரிந்துகொண்ட இவர் மிக இரகசியமாக கிராம வாழ்க்கை நடத்தவேண்டியிருந்தது. 2000ஆம் ஆண்டில் கொழும்புக்கு வந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் (ஈ.பி.டி.பி) இணைந்து அதன் ஊடகப் பேச்சாளராகவும் அக்கட்சியின் வெளியீடான 'தினமுரசு' வார இதழின் ஊடகவியலாளராகவும் செயற்பட்டுள்ளார். அத்துடன் பல புனைபெயர்களில் எழுதியுள்ளதுடன் புலனாய்வுக் கட்டுரைகளில் பெரும்பாலும் "அம்பிமகள்" என்ற புனைப் பெயரைப் பயன்படுத்தினார்.

2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி காலை வழமைபோல் ஈ.பி.டி.பி அலுவலகத்திற்குச் செல்வதற்காக வீட்டை விட்டு புறப்பட்டுச் சென்றபோது வெள்ளவத்தையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு கொலையாளிகள் அவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றனர். இவர் எல்.ரீ.ரீ.ஈயினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

## லங்கா ஜயசுந்தர - புகைப்பட ஊடகவியலாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 11 டிசம்பர் 2004



விஜய பத்திரிகை குழுமத்தில் இருந்து வெளிவரும் 'லங்காதீப', 'விஜய', 'சிரிகந்த' மற்றும் 'தருணயா' பத்திரிகைகளின் புகைப்பட ஊடகவியலாளராகக் கடமையாற்றியவர். லங்கா ஜயசுந்தர கொழும்பில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றை புகைப்படமெடுத்துக் கொண்டிருந்தபோது குண்டொன்று வெடித்ததில் அதே இடத்தில் கொல்லப்பட்டார். இந்திய ஹிந்தி திரைப்பட உலகின் முடிசூடா மன்னன் ஷாருக்கான் கலந்துகொண்ட இந்த பிரமாண்டமான இசை நிகழ்ச்சிக்கு ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அதன் பிரதிபலனாக இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது குண்டுவெடிப்பு இடம்பெற்றது. பிரபல ஊடக நிறுவனமான 'சிரச' ஊடக வலையமைப்பினால் இந்த இசை நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பிரபலம் பெற்றிருந்த சோமதேரர் மறைந்து மூன்று மாதங்கள் பூர்த்தியாகும் தினத்தில் இந்த இசைநிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததே இந்த

எதிர்ப்புக்குக் காரணமாகும். இசை நிகழ்ச்சி நடைபெறும் தினத்தை மாற்றும்படி கேட்டுக்கொண்டபோதும் ஒரு வருடத்திற்கு முன்பே ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததால் இசை நிகழ்ச்சியை பின்போடுவது முடியாத காரியமென ஏற்பாட்டாளர்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர். குதிரைப் பந்தயத் திடலில் பெருந்தொகையான இசைப்பிரியர்களை நோக்கி வீசப்பட்ட குண்டு வெடித்ததன் காரணமாக இருவர் கொல்லப்பட்டனர். புகைப்பட ஊடகவியலாளர் லங்கா ஜயசுந்தர அதிலொருவராவார். 22 வயது இளைஞரான இவர் ஹக்மன, முறுத்தபிட்டிய இஹலவத்தை என்ற இடத்தைச் சேர்ந்தவராவார்.

# 2005



## தர்மரத்தினம் சிவராம் - ஊடகவியலாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 28 ஏப்ரல் 2005

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சரளமாக எழுதக்கூடிய ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம். ஆங்கில ஊடகங்களில் தராக்கி என்ற புனை பெயரில் எழுதி வந்தார். ஊடகத்துறையில் தராக்கியால் எழுதப்பட்ட அரசியல் பத்திகள் விசேடமாக வாசகர்களின் கவனத்தை ஈர்த்து வந்தன. 1989ஆம் ஆண்டு முதல் 'தி ஐலன்ட்' பத்திரிகையில் தராக்கி என்ற பெயரில் பாதுகாப்பு தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வந்தார். அவர் கொல்லப்படும்போது 'டெய்லி மிரர்' பத்திரிகையில் அரசியல் பத்திகளை எழுதிக்கொண்டிருந்தார். அதேபோல் 'வீரகேசரி' போன்ற பத்திரிகைகளில் எழுதிவந்த அவர் 1998ஆம் ஆண்டு முதல் 'தமிழ் நெற்' இணையதளத்தின் ஆசிரியராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி இரவு 10.30 மணிக்கு பம்பலப்பிட்டியில் ஹோட்டல் ஒன்றிலிருந்து சிவராம் மற்றும் நண்பர்களுடன் வெளியே வந்தபோது ஆயுதக் குழுவொன்று அவரை பலாத்காரமாக அவர்கள் வந்த வாகனத்தில் கடத்திச் சென்றது. பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு முன்னாலேயே இந்தத் துணிகரச் சம்பவம் இடம்பெற்றது. மறுநாள் காலை தலையில் தாக்கப்பட்டு துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இவரது சடலம் அதியுயர் பாதுகாப்பு வலயமான பாராளுமன்ற கட்டிடத் தொகுதிக்கு அருகில் உள்ள தியவண்ண ஓயாவுக்கருகே இருக்கும் பற்றையிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. கொலைக்கான பொறுப்பு அரசின் மீது சுமத்தப்பட்டதுடன் அரசின் பாதுகாப்பைப் பெறும் தமிழ் அரசியல் குழுவொன்றின் மீதும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் பிறந்த இவர் கல்வி பயின்று பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மனிதவியல் பீடத்தில் இரண்டு வருடங்கள் படிப்பினை மேற்கொண்டு இடை நடுவில் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறினார்.

இவரது இரு புதல்விகளும், ஒரு புதல்வரும் இவரது கொலைக்குப் பின்னர் தாய் யோகராஜினியுடன் நாட்டை விட்டு வெளியேறினர். 2006 ஆம் ஆண்டு திறமையான ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் பத்திரிகை ஆசிரியச் சங்க விருது வழங்கும் விழாவில் சிவராமின் ஊடக சேவையைப் பாராட்டி விசேட விருது வழங்கப்பட்டது.

## கண்ணமுத்து அரசகுமார் (36) -ஊடகவியலாளர். கொலைசெய்யப்பட்ட தினம் - 29 ஜுன் 2005

பொபி என்ற பெயரில் பிரதேச வாசிகள் மத்தியில் பிரபலமாகியிருந்த அரசகுமார் பத்திரிகை விநியோகப் பிரதிநிதியாக கடமையாற்றினார். அப்போது எல்.ரீ.ரீ.ஈயினரது மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை முதல் அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று வரை அவர் பத்திரிகை விநியோகித்து வந்தார். மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த

எல்.ரீ.ரீ.ஈயினரின் பத்திரிகையான 'ஈழநாதம்' பத்திரிகையையே இவர் விநியோகித்தார். அப்போதைய அரசும் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டதன் பின்னர் இப்பத்திரிகை மட்டக்களப்பிலிருந்து வெளிவர ஆரம்பித்தது. இப்பத்திரிகை நாளாந்தம் 5000 பிரதிகள் விற்பனையானதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி வழமைபோல் காலை மோட்டார் சைக்கிளில் சென்று பத்திரிகைகளை விநியோகித்து விட்டு அக்கரைப்பற்றிலிருந்து திரும்பிவரும்போது காலை 8.40 மணியளவில் கல்முனை மட்டுபொல பிரதேசத்தில் இவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை விவேகானந்தபுரம் மூன்றாம் குறுக்குத் தெரிவில் குடியிருந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.



## ரேலங்கி செல்வராஜா (45) – ஊடகவியலாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 12 ஆகஸ்ட் 2005

ரேலங்கி செல்வராஜா யாழ்ப்பாணத்தில் பிறப்பிடமாக்க கொண்டவர். இவர் கலை மற்றும் ஊடகத்துறை மீதிருந்த ஈர்ப்புக் காரணமாக இலங்கையின் பிரதானதும் மிகப் பழமைவாய்ந்ததுமான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து நீண்டகாலம் பணிபுரிந்து வந்தார். யாழ். பஸ் தரிப்பிடத்தில் அறிவிப்பாளராக அறிமுகமாகி இத்துறையில் பிரவேசித்த அவர் தமிழ் திரைப்படங்களிலும் நடித்துள்ளார். 1978ஆம் ஆண்டு இலங்கை தமிழ்த் திரைப்படமொன்றில் நடித்ததன் மூலம் சிறந்த நடிகையாக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2000ஆம் ஆண்டு வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையின் சிரேஷ்ட அறிவிப்பாளராக கடமையாற்றிய இவர் பின்னர் அந்தப் பதவியிருந்து விலகி பகுதி நேர அறிவிப்பாளராக இருந்து கொண்டே ஒரு வர்த்தக நிலையமொன்றை ஆரம்பித்தார். ரூபவாஹினி தமிழ்ச்சேவையில் பகுதி நேர அறிவிப்பாளராகவும் ஞாயிறு தோறும் அதிகாலை

ஒளிபரப்பப்படும் "உதயதரிசனம்" என்ற நிகழ்ச்சியையும் தயாரித்து வழங்கினார்.

இவரும் இவரது கணவரும் கொழும்பு பம்பலப்பிட்டியில் "கிங்ரோய் டிரவல் சேர்விஸ்" என்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வந்தனர். 2005ஆம் ஆண்டு ஆக்ஸ்ட் மாதம் 12ஆம் திகதி பகல் 1 மணியளவில் இந்த நிறுவனத்தில் வைத்து இவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். துப்பாக்கிச் சூட்டில் இவரது கணவரான எஸ். செல்வராஜாவும் கொல்லப்பட்டார். இவரால் வானொலியிலும் ரூபவாஹினியிலும் தயாரித்து வழங்கப்பட்ட நிகழ்ச்சி காரணமாக எல்.ரீ.ரீ.ஈயினரே இக்கொலைக்கு காரணமாகவிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. கொலையாளிகள் இவர்களை இனங்கண்டதாலேயே இருவரையும் சுட்டுக்கொன்றதாக சந்தேகிக்கப்படுகின்றது. அதேபோல் இவரது கணவர் புளொட் உறுப்பினராகவிருந்ததும் இக்கொலைக்குக் காரணமாகவிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

## டி. செல்வரத்தினம் (60) – ஊடக ஊழியர் கொலைசெய்யப்பட்ட தினம் - 29 ஆகஸ்ட் 2005

டேவிட் செல்வரத்தினம் 'சுடர் ஒளி' பத்திரிகை அலுவலகத்தில் பாதுகாப்பு ஊழியராக கடமையாற்றி வந்தார். 2005ஆம் ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி மாலை 6.10 மணியளவில் அலுவலகத்தை நோக்கி வீசப்பட்ட கைக்குண்டு வெடித்ததில் இவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

கொழும்பு கிரான்ட்பாஸ் பகுதியில் அமைந்துள்ள இப்பத்திரிகை அலுவலகத்திற்கு கைக்குண்டை எறிந்தது தமிழ் ஊடகவியலாளர்கள், தமிழ் ஊடக நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு விடுக்கப்பட்ட மற்றுமொரு அச்சுறுத்தலாகவிருந்தது. அரச ஆதரவு பெற்ற தரப்பினரே இக்குண்டு வீச்சை நடத்தியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது. இந்தத் தாக்குதலில் மூன்று

வாகனங்கள் சேதமானதுடன் மூன்று ஊழியர்கள் மற்றும் வெளியிலிருந்து வந்திருந்த ஊடகவியலாளர் ஒருவரும் காயமுற்றனர்.

## யோக குமார் கிருஷ்ணப்பிள்ளை - ஊடக ஊழியர்
## கொலையுண்ட தினம் - 2005 செப்டெம்பர் 30

மட்டக்களப்பிலிருந்து வெளியான ஈழநாதம் பத்திரிகை விநியோகஸ்த்தரான யோககுமார் கிருஷ்ணப்பிள்ளை அரச படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள மட்டக்களப்பு நகரில் கொலை செய்யப்பட்டார். செப்டெம்பர் 30ம் திகதி பத்திரிகை விநியோகித்துக் கொண்டிருந்த அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்தார். புலிகளின் ஆதுரவுப் பத்திரிகை என கருதப்படும் ஈழநாதம் பத்திரிகை மட்டக்களப்பில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரே வெளியிடப்பட்டது. யோககுமாருக்கு முன்னர் அப்பத்திரிகையை விநியோகித்த அரசகுமார் என்பவரும் அம்பாறை மாவட்டத்தில் இதேபோல் கொலை செய்யப்பட்டிருந்தார்.



## ஏ.எல்.எம். பளீல் (நற்பிட்டிமுனை பளீல்) (40) - எழுத்தாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 2 டிசம்பர் 2005

அரச நிர்வாக அதிகாரியான ஏ.எல்.எம். பளீல் இலக்கிய மற்றும் ஊடகத்துறையில் நற்பிட்டிமுனை பளீல் என்ற பெயரில் பிரபலமாகியிருந்தார். மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச செயலாளராகவிருந்த இவர் எழுத்தாளராக நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் கல்வி நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவற்றில் முக்கியமானவை கல்வி நூல்களாகும். 'வீரகேசரி', 'தினக்குரல்', 'தினகரன்' போன்ற பிரதான தேசிய பத்திரிகைகளிலும் இவர் அதிகமாக கல்வி தொடர்பான கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். ஆசிரியர் பணியில் வாழ்க்கையை

ஆரம்பித்த இவர் கொலைசெய்யப்படும்போது மாவட்ட செயலாளராக கடமையாற்றியது மட்டுமல்லாது முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினைகள் குறித்தும் அதிக கவனம் செலுத்திய அதிகாரியாவார். இது தொடர்பாக எல்.ரீ.ரீ.யினர் இவரை எச்சரித்துள்ளனர். 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும். காத்தான்குடி பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருந்து ஜ"ம்மா தொழுகைக்காக செல்வதற்குத் தயாரானபோது எல்.ரீ.ரீ.ஈயினரின் துப்பாக்கிதாரிகள் இவரைச் சுட்டுக்கொலை செய்துவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர். 1965ஆம் ஆண்டு கல்முனை பிரதேசத்திலுள்ள நற்பிட்டிமுனையில் பிறந்த இவர் கொலை செய்யப்படும்போது இரண்டு குழந்தைகளின் தந்தையாவார்.

**கே. நவரத்தினம் (45) - ஊடகவியலாளர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 23 டிசம்பர் 2005**

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'யாழ். தினக்குரல்' பத்திரிகையின் விற்பனையாளரான கிருஷ்ணன் நவரத்தினம் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி காலை 5.30 மணியளவில் பத்திரிகைகளை எடுத்துச்செல்ல வரும்போது பத்திரிகை அலுவலகத்திற்கு முன்னால் வைத்து கொலைசெய்யப்பட்டார். இவர் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்று அங்கு சில வருடங்கள் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் தொழிலை இழந்தார். 2002ஆம் ஆண்டு யாழ். குடா நாட்டுக்குத் திரும்பிவந்த அவர் பத்திரிகை விற்பனையை ஆரம்பித்துள்ளார். யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தக நிலையத்தில் வைத்து பத்திரிகை விற்பனை செய்து வந்துள்ளார். சுட்டுக்கொலை செய்யப்பட்ட இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார். இவர் கொலையுண்டு ஒரு மாதத்திற்குப் பின்னர் அவரின் மனைவியும் மரணமடைந்துள்ளார்.

# 2006



## சுப்ரமணியம் சுகிர்தராஜன் (35) ஊடகவியலாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 24 ஜனவரி 2006

திருகோணமலை துறைமுக அதிகாரசபையில் லிகிதராக கடமையாற்றிவந்த சுப்ரமணியம் சுகிர்தராஜன் 'சுடர் ஒளி' பத்திரிகையின் திருகோணமலை நிருபராகவும் கடமையாற்றி வந்தார். 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி அதிகாலை 6.40 மணியளவில் கடமைக்குச் செல்லவென வீட்டை விட்டு புறப்பட்டபோது அங்கு காத்திருந்த கொலையாளிகள் அவருடைய தலையில் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இவர் குடியிருந்த திருகோணமலை உவர்மலை, யோவர் வீதியிலேயே இக்கொலை இடம்பெற்றுள்ளது. கொலை இடம்பெற்ற பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமான வடக்கு - கிழக்கு ஆளுநரின் அலுவலகத்திற்கு அருகிலாகும்.

ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலை கடற்படையினரின் பார்வையில் படும் தூரத்திலுள்ள கடற்கரையில் கொலைசெய்யப்பட்ட ஐந்து பல்கலைக்கழக மாணவர்களும் துப்பாக்கிச் சூட்டின் காரணமாகவே கொல்லப்பட்டனர் என்ற செய்தியை இவர் எழுதியிருந்தார். கொண்டுவந்த குண்டு வெடித்ததன் காரணமாக பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக அரசதரப்பு இதற்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது. கல்முனை பட்டிருப்பு பிரதேசத்தில் பிறந்த சுகிர்தராஜன் சதுர்ஷன், விதுஷா என இரு குழந்தைகளின் தந்தையாவார்.

**எஸ்.டி கணநாதன் (64) – ஊடக அனுசரணையாளர்.**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 11 பெப்ரவரி 2006**

தமிழ் செய்தி மற்றும் தகவல் நிலையத்தின் தனியார் நிறுவன அனுசரணையாளரான எஸ்.கணநாதன் யாழ்ப்பாணம் அரியால்ல, மாம்பழம் சந்தியில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டார். அரியாலை இராணுவ முகாமிற்கு அண்மையில் இக்கொலை இடம்பெற்றுள்ளது. இவர் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் பதவி வகித்தார். கொலையுண்டபோது இவருக்கு 64 வயதாகும்.

**பெஸ்டியன் ஜோர்ஜ் சுரேஷ் - ஊடக ஊழியர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 3 மே 2006**

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை விநியோக முகாமையாளராக பெஸ்டியன் ஜோர்ஜ் சுரேஷ் கடமையாற்றிவந்தார். சர்வதேச ஊடக தினம் இலங்கையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2006ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி மாலை நடைபெற்றுக்கொண்டிருந்த அதேநேரத்தில் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளின் தாக்குதலில் இவர் கொல்லப்பட்டார். மற்றுமொரு ஊடக ஊழியரான ரஞ்சித்குமாரும் கொல்லப்பட்டதுடன் மேலும் மூன்று ஊடக ஊழியர்கள் காயமுற்றனர்.

விற்பனைப் பிரிவு உதயகுகார் (48), தயாபரன் (31) மற்றும் சதீஷ்(24) ஆகியோர் காயமுற்றவர்களாவர். பத்திரிகை நிறுவனத்தின் கணணிப் பிரிவு பூரணமாக தாக்கியழிக்கப்பட்டதுடன் அச்சு இயந்திரங்களும் சேதமாக்கப்பட்டன. அரச கட்டுப்பாட்டின் கீழுள்ள யாழ்ப்பாணம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் கஸ்தூரியார் வீதியிலுள்ள உதயன் அலுவலகத்தின் மீதான தாக்குதலுக்கு

ரி.56 ரக ரைபிள்களுடன் ஆறுபேர் வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் சிரேஷ்ட ஊடக பணியாளர் குகநாதனைத் தேடி அலுவலகம் முழுவதும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் உரையாடி சுற்றித் திரிந்ததுடன் சுமார் 40 துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து இந்த அழிவை ஏற்படுத்தியுள்ளனர். சுரேஷ் ஒரு குழந்தையின் தந்தையாவார்.

## ராஜரத்தினம் ரஞ்சித்குமார் (28) - ஊடகஊழியர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 3 மே 2006

சர்வதேச ஊடக தினத்தன்று இலங்கையில் நடைபெற்ற 2006ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி 'உதயன்' அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பெஸ்டியன் ஜோர்ஜ் சுரேஷ்"டன் ராஜரத்தினம் ரஞ்சித்குமாரும் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். இவர் திருமணமாகி யாழ்ப்பாணம் கைதடி பிரதேசத்தில் நாவற்குழி சந்தியில் 14/ 5 ஆம் இலக்க இல்லத்தில் வசித்துவந்தார்.



## நிஹால் டி சில்வா (64) - எழுத்தாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 27 மே 2006

பிரபல ஆங்கில மொழி இலக்கியவாதியான நிஹால் டி சில்வா வேடிக்கைகளுடன் வினோதமாக வாழ்ந்த நண்பர்களுக்கு மத்தியில் பிரசித்தமான நபராவார். தொழில் ரீதியில் வியாபாரியான இவர் இலக்கியவாதியாக மட்டுமன்றி ஆங்கில மொழி இலக்கிய சமூகத்திற்குள் ஆர்வமிக்க உறுப்பினராக இலக்கிய கருத்துப் பகிர்வுகளில் அடிக்கடி காணக்கூடியவராகவும் இருந்தார். இவரின் ROAD FROM ELEPHANTPASS என்ற நூலுக்கு நேஷன் விருதும் அரச சாகித்திய விரும் கிடைத்தது. கினிரெல்ல கொன்ஸ்பிரசி (GINIRALLA CONSPIRACIY) என்ற நூலில் பல்கலைக்கழகத்திற்குள் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) அரசியல் நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட அழிவுகள் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டிருந்தது. ஆர்த்தி

என்ற பெயரில் மேலுமொரு நூலை எழுதிக்கொண்டிருந்த அவர் 2006ஆம் ஆண்டு மே மாதம் ஐந்து நண்பர்களுடன் வில்பத்து தேசிய வனப்பிரதேசத்திற்கு உல்லாசப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தபோது கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்தார். அவர் எழுதிக்கொண்டிருந்த ஆர்த்தி என்ற நூலை எழுதி முடிக்காமல் போனதுடன், நண்பர்கள் ஐவருடன் பாதை வழிகாட்டியும் ஜீப் வண்டியுடன் கண்ணிவெடியில் சிக்கியதால் அனைவரும் கொல்லப்பட்டனர். காலியில் பிறந்த இவர் பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வசித்து வந்தார். இவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார்.



**சம்பத் லக்மால் டி சில்வா – ஊடகவியலாளர்**
**கொலை செய்யப்பட்டதினம் - 02 ஜுலை 2006**

சுயாதீன ஊடகவியலாளராகவிருந்த சம்பத் லக்மால் டி சில்வா 2006ஆம் ஆண்டு ஜுலை மாதம் 2ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் பொரலஸ்கமுவையிலுள்ள அவரது தாயார் வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டார். சிலகாலமாக அவர் தொடர்பு வைத்திருந்த இராணுவ அதிகாரியிடமிருந்து கிடைத்த தொலைபேசி அழைப்பையடுத்து வீட்டை விட்டுச் சென்றுள்ளார். அவர்கள் லக்மாலை அழைத்துச் சென்றுள்ளதுடன் அன்றைய தினமே காலை அவருடைய உடல் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டது. வீட்டுக்கு அப்பால் மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் இவரது சடலம் காணப்பட்டது. அவர் தனது தாயாருடன் வாழ்ந்து வந்தார். இவர் திருமணமாகாதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மரியதாஸ் மனோஜன்ராஜ் (24) - ஊடக ஊழியர்**
**கொலைசெய்யப்பட்ட தினம் - 27 ஜுலை 2006**

யாழ்ப்பாணம் அச்சுவேலி சங்கானை வீதியில் வசித்து வந்த மரியதாஸ் மனோஜன்ராஜ் 2006ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27ஆம் திகதி அதிகாலை கொல்லப்பட்டார். 'யாழ். தினக்குரல்' பத்திரிகை விற்பனையை தொழிலாகக் கொண்ட

இளைஞரான இவர் அன்றைய தினம் அதிகாலை 3.45 மணியளவில் தனது மோட்டார் சைக்கிளில் பத்திரிகையை எடுத்துவர 'யாழ். தினக்குரல்' அலுவலகத்திற்குச் செல்லும் வழியில் இராணுவ சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவர் பத்திரிகைகளை எடுத்துக்கொண்டு அதேவழியில் திரும்பிவரும்போது அச்சுவேலி, நவகிரி என்ற இடத்தில் கூட்டுறவு சங்கக் கடைக்கு முன்னால் கிளைமோர் குண்டொன்று வெடித்ததால் கொல்லப்பட்டார். இவர் வெளிநாடொன்றுக்குச் செல்லவிருந்த வேளையிலேயே இவருடைய கொலை இடம்பெற்றுள்ளது. இவருக்கு இரு சகோதரர்கள் உள்ளனர்.

## பத்மநாதன் விசாமநந்தன் (29) - இசைக்கலைஞர் கொலை செய்யப்பட்டதினம் - 02 ஆகஸ்ட் 2006

அரச கட்டுப்பாட்டுப் பகுதியான யாழ்ப்பாணம் நாவலர் வீதி அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தமது 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகத்திற்கு முன்னால் 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி பகல் 1.25 மணியளவில் பத்மநாதன் விசாமநந்தன் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். யாழ்ப்பாணம் பெருமாள்கோவிலடி பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரான இவர் ஐங்கரன் என்ற இசைக்குழுவின் ஆரம்பகர்த்தாவாகவும், இசைக்கலைஞராகவும், பாடகராகவும் செயற்பட்டு வந்தார்.

## சதாசிவம் பாஸ்கரன் (44) – ஊடக ஊழியர் கொலைசெய்யப்பட்ட தினம் - 15 ஆகஸ்ட் 2006

சாரதியாக கடமையாற்றிய சதாசிவம் பாஸ்கரன் 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி கடைகளுக்கு பத்திரிகைகளை விநியோகித்துவிட்டு திரும்பி வரும் வழியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். ஊரடங்கு அமுலில் இருந்த யாழ். குடாநாட்டில் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தபோது அன்றைய பத்திரிகைகளை கடைகளுக்கு விநியோகிக்க சாரதி

பாஸ்கரன் சென்றுள்ளார். இவர் புத்தூர் சந்தியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். 'உதயன்' பத்திரிகையின் சின்னமும் பெயரும் வாகனத்தில் தெளிவாக எழுதப்பட்டிருந்தது. துப்பாக்கிச் சூட்டில் வாகனமும் சேதமடைந்தது. இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார்.



## சின்னத்தம்பி சிவமகாராஜா (68) - பத்திரிகை உரிமையாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 20 ஆகஸ்ட் 2006

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த தினசரிப் பத்திரிகையான 'நமது ஈழநாடு' பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளரான சின்னத்தம்பி சிவமகாராஜா பல கௌரவப் பதவிகளையும் வகித்தவராவார். இவர் யாழ். பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக பதவி வகித்ததுடன் தமிழ் செய்தி மற்றும் தகவல் நிலையத்தின் பணிப்பாளராகவும் பணிபுரிந்தார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான இவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராகவிருந்தார். இவரது சொந்த வீடு மக்கள் வெளியேற்றப்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்தது. இதனால் இவர் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அருகில் வாடகை வீடொன்றில் தனியாக வசித்து வந்துள்ளார். நாளாந்தம் ஆலய பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்வதை வழமையாகக் கொண்டிருந்தார். அன்றைய தினம் அவர் பூஜையில் கலந்துகொள்ளாத காரணத்தாலும் இரவு துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டதாலும் சந்தேகமுற்ற நண்பர்களும் அயலவர்களும் அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர். 2006ஆம் ஆண்டு ஆக்ஸ்ட் மாதம் 20ஆம் திகதி இரவு வீட்டில் நித்திரை செய்துகொண்டிருந்தபோது யன்னல் வழியாக துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்த அவரது உடலை அயலவர்கள் கண்டுள்ளனர்.

அவரது கொலையுடன் 'நமது ஈழநாடு' பத்திரிகை அச்சிடுவதை நிறுத்தவேண்டியதாயிற்று. இவர் பிரமச்சாரியாகவே வாழ்ந்து வந்தார்.

# 2007

## எஸ். ரவீந்திரன் (38) – ஊடக ஊழியர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 12 பெப்ரவரி 2007

'நமது நாழநாடு' பத்திரிகையின் அச்சுப் பகுதி முகாமையாளரான எஸ். ரவீந்திரன் அவரது வீட்டுக்கு வந்த துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இரு பிள்ளைகளின் தந்தையான இவர் யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேசத்தில் வசித்து வந்தார்.



## சுப்பிரமணியம் ராமச்சந்திரன் - (37) ஊடகவியலாளர்
## கடத்தப்பட்ட தினம் - 15 பெப்ரவரி 2007

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'யாழ். தினக்குரல்', 'வலம்புரி' பத்திரிகைகளின் நிருபராக கடமையாற்றிய சுப்பிரமணியம் ராமச்சந்திரன், அரசடி கரவெட்டி மற்றும் வடமராட்சி பகுதிகளில் தனியார் வகுப்புகளில் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி தனியார் வகுப்புகளில் கற்பித்துவிட்டு சைக்கிளில் வரும்போது கரவெட்டி பிரதேசத்திலுள்ள கலிகைச் சந்தியில் வைத்து இனந்தெரியாத ஒரு குழுவினர் இவரைக் கடத்திச் சென்றுள்ளனர். படையினரின் பாதுகாப்பிலுள்ள இப்பிரதேசத்தில் கடத்தப்பட்ட ராமச்சந்திரனைப் பற்றிய எதுவித தகவல்களும் கிடைக்காததுடன் இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாமென நம்பப்படுகின்றது. இவர் இரு குழந்தைகளின் தந்தையாவார்.

## சுபாஷ் சந்திரபோஸ் (32) – ஊடகவியலாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 16 ஏப்ரல் 2007



'நிலா' என்ற இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியரான சுபாஷ் சந்திரபோஸ் தானே அச்சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். வவுனியா திருநாவற்குளம் கிராமத்தில் வசித்து வந்த இவர் ஒரு அச்சகத்தின் உரிமையாளருமாவார். லண்டனிலிருந்து வெளிவந்த 'தமிழ்வேர்ள்ட்' சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதிவந்த இவர் சுயாதீன ஊடகவியலாளராகவும் கடமையாற்றினார். இலங்கை ஊடகக் கல்லூரியின் மாணவராகவிருந்த அவர் அந்த பாடத்திட்டம் முடிவடைந்தவுடன் தமிழ் பத்திரிகையான 'வீரகேசரி'யில் ஒருமாத பயிற்சியின் பின் வவுனியாவுக்குத் திரும்பிச் சென்று ஊடக நடவடிக்கையில் ஈடுபட்டார். இவர் ஒரு பிள்ளையின் தந்தையுமாவார்.

இவர் 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் வீட்டுக்கு வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். கொலையாளிகள் தப்பிச் சென்றதன் பின்னர் இவரின் பிள்ளை அயல் வீடுகளின் கதவுகளைத் தட்டி உதவி கேட்டபோதும் துப்பாக்கி வேட்டுச் சத்தம் தொடர்ந்து கேட்டதால் அச்சமுற்று அயலவர்கள் எவரும் உதவிக்குச் செல்லவில்லை. இவரது கொலை இடம்பெறும்போது பிள்ளையும் அருகில் இருந்துள்ளது. பிள்ளையின் கூற்றுப்படி கொலையாளிகள் சிங்களத்திலும் தமிழிலும் சரளமாக உரையாடியுள்ளதாகத் தெரியவருகின்றது.

## செல்வராஜா ரஜிவர்மன் (25) - ஊடகவியலாளர் கொலைசெய்யப்பட்ட தினம் - 29 ஏப்ரல் 2007



செல்வராஜா ரஜிவர்மன் 1982ஆம் ஆண்டு பிறந்த 25 வயதுடைய இளைஞராவார். இளம் ஊடகவியலாளரான இவர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் அலுவலக ஊடகவியலாளராக

கடமையாற்றினார். இவர் விசேடமாக குற்றச் செயல்கள் குறித்த செய்திகளை எழுதி வந்துள்ளார். தமது செய்திக்காக தகவல் தேடும் பொருட்டு அலுவலகத்திலிருந்து வெளியே சென்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த கொலையாளிகள் இவர் மீது துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். 'உதயன்' பத்திரிகை அலுவலகத்திற்கு அருகில் நாவலர் வீதியில் ராசாவின் தோட்டம் வீதி மற்றும் ஸ்டான்லி வீதி சந்திக்கும் இடத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இராணுவ சோதனைச் சாவடிகள் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் காலை 10 மணியளவில் சுதந்திரமாக நடமாடிய கொலையாளிகள் ரஜிவர்மனை சுட்டுக்கொன்றுவிட்டு பாதுகாப்பாக அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர். யாழ்ப்பாணம் புத்தூர் பிரதேசத்தில் ஆவரங்கால் பகுதியில் இவர் தாய், மற்றும் மூத்த சகோதரி, இரு இளைய சகோதரர்களுடன் வசித்து வந்துள்ளார். 'உதயன்' பத்திரிகையில் கடமையாற்றுவதற்கு முன்னர் இவர் 'ஈழநாடு' பத்திரிகையில் கடமையாற்றியுள்ளார்.



## சகாதேவன் நிலக்ஷன் (25) – ஊடக மாணவர் கொலைசெய்யப்பட்ட தினம் - 01 ஆகஸ்ட் 2007

யாழ்ப்பாணம் ஊடக ஆய்வு மற்றும் தகவல் நிலைய மாணவராக ஊடகப் பாடநெறியை முடித்துக்கொண்டு வெளியேறிய சகாதேவன் நிலக்ஷன் பின்னர் கொழும்பு சென்று இரண்டு வாரகால ஊடகப் பயிற்சியை முடித்துக்கொண்டார். பின்னர் யாழ்ப்பாணத்திற்கு திரும்பிச்சென்ற தினத்திற்கு மறுதினம் அதிகாலை 5.10 மணியளவில் அவரது வீட்டுக்கு வந்த கொலையாளிகள் விசாரணைக்கென அவரை வீட்டை விட்டு வெளியே அழைத்துச் சென்றுள்ளனர். அரச படையினரின் பாதுகாப்பின் கீழுள்ள யாழ்ப்பாணம் கொக்குவில் ஆடியபாதம் வீதியிலுள்ள அவரது வீட்டுக்கு ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் வந்த கொலையாளிகள் அவரை சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றுள்ளனர். திருமணமாகாத இளைஞரான சகாதேவன் நிலக்ஷன் 'சாளரம்' என்ற

சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் மாணவர் அமைப்பின் முன்னாள் தலைவராவார். இக்கொலையின் பின்னர் இவருடைய சகோதரனையும் பெற்றோர் வெளிநாடொன்றுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.



## அந்தனிப்பிள்ளை ஷெரீன் சித்திரஞ்சன் (36) - ஊடக ஊழியர்
## கடத்திச் செல்லப்பட்ட தினம் - 5 நவம்பர் 2007

அந்தனிப்பிள்ளை ஷெரீன் சித்திரஞ்சன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'யாழ். தினக்குரல்' விநியோகப் பிரிவில் கடமையாற்றி வந்தார். 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி அன்று பத்திரிகைகளை விநியோகித்துக் கொண்டிருக்கும்போது காலை 6 மணியளவில் பாதுகாப்புப் படையினரின் கடுமையான பாதுகாப்பின் கீழுள்ள பலாலி வீதியில் இவர் காணாமற்போயுள்ளார். 'யாழ். தினக்குரல்' பத்திரிகையில் கடமையாற்றுவதற்கு முன்னர் இவர் 'நமது ஈழநாடு' பத்திரிகை விநியோகப் பிரிவில் கடமையாற்றியுள்ளார். இவர் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.
ஆணைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் வசித்து வந்த இவர் ஒரு குழந்தையின் தந்தையுமாவார்.

## வடிவேல் நிமலராஜா (31) - ஊடக ஊழியர்
## கொலை செய்யப்பட்ட தினம் - 17 நவம்பர் 2007

யாழ்ப்பாணம் 'உதயன்' பத்திரிகையின் இரவு நேர ஒப்புநோக்காளரான வடிவேல் நிமலராஜா அங்கு மூன்று வருடகாலம் சேவையாற்றியுள்ளார். இரவு நேர சேவையை முடித்துக்கொண்டு 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதி சைக்கிளில் வீடு நோக்கி சென்று கொண்டிருக்கும் போது காலை 7.30 மணிக்கு உதயன் அலுவலகத்திற்கு

அருகே நாவலர் வீதி ரயில் கடவையருகே வைத்து இனந்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டார். யாழ்ப்பாண நகரில் கச்சேரி நல்லூர் வீதியில் வசித்து வந்த இவர் திருமணமாகாதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**இசைவிழி செம்பியன் - அறிவிப்பாளர்.**
**சுரேஷ் லிம்பியோ - தொழில்நுட்பப் பிரிவு ஊழியர்**
**ரீ.தர்மலிங்கம் - பொறியியலாளர்**
**கொலை செய்யப்பட்ட தினம் -27 நவம்பர் 2007**

புலிகளின் குரல் வானொலி சேவையில் பணிபுரிந்த இசைவிழி செம்பியான் சுரேஷ் லிம்பியோ, ரீ. தர்மலிங்கம் ஆகியோர் 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் ஒரே இடத்தில் வைத்துக் கொல்லப்பட்டனர். இலங்கை விமானப்படையினரின் விமானக் குண்டு வீச்சு காரணமாக கிளிநொச்சி, கொக்குவில்லிலுள்ள புலிகளின் குரல் வானொலி நிலையம் மற்றும் பல கட்டிடங்கள் அழிக்கப்பட்டன. இதில் 11 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் மூவர் புலிகளின் குரல் வானொலி நிலையத்தின் ஊழியர்களாவர். இசைவிழி செம்பியன் அதன் அறிவிப்பாளராவார். மூன்று பிள்ளைகளின் தயாரான இவர் சுபாஜினி என்ற பெயரில் பிரபலமடைந்திருந்தார். சுரேஷ் லிம்பியோ தொழில்நுட்பப் பிரிவில் கடமையாற்றினார். இவர் ஒரு குழந்தையின் தந்தையாவார்.

ரீ. தர்மலிங்கம் பொறியியலாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். இக்குண்டு வீச்சில் புலிகளின் குரல் வானொலியின் மேலும் மூன்று ஊழியர்கள் காயமுற்றனர்.

டபிள்யூ குணசிங்க (62) - ஊடகவியலாளர்
கொலைசெய்யப்பட்ட தினம் - 5 டிசம்பர் 2007



அனுராதபுரம் மாவட்ட கெப்பித்திக்கொல்லாவ வலய கல்வி அலுவலகத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்ற டபிள்யூ குணசிங்க தேசிய பத்திரிகையான 'திவயின' பத்திரிகையின் கெப்பத்திக்கொல்லாவ நிருபராக 20 வருட காலம் கடமையாற்றியுள்ளார். 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி இவர் பயணம் செய்த பஸ் கெப்பத்திக்கொல்லாவ அபிமானபுரவில் அமுக்க வெடியில் சிக்கியதில் இவர் கொல்லப்பட்டார். கெப்பத்திக்கொல்லாவ பிரதேசத்தில் அந்த வருடத்தில் இடம்பெற்ற இரண்டாவது குண்டுவெடிப்புச் சம்பவம் இதுவாகும். இதில் 16 பயணிகள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் குணசிங்க இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

பரராஜசிங்கம் தேவகுமார் (34) - ஊடகவியலாளர்
கொலைசெய்யப்பட்ட தினம் - 28 மே 2008



இலங்கையின் பிரபலமான இலத்திரனியல் ஊடக வலையமைப்புக்குச் சொந்தமான சக்தி தொலைக்காட்சி, சக்தி எவ்.எம். ஆகியவற்றின் யாழ். நிருபராக பரராஜசிங்கம் தேவகுமார் கடமையாற்றிவந்தார். 2008ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி மாலை 4 மணியளவில் வட்டுக்கோட்டை மதவடி கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்த தேவகுமார் கூரான ஆயுதங்களால் வெட்டியும் குத்தியும் மிகவும் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். அவருடன் பயணம் செய்த அவரது நண்பரான மகேந்திரன் வரதன் என்பவரும் வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மரணமடைந்தார். பின்னர் கிடைத்த தகவல்களின் படி இந்தக் கொலையை எல்.ரீ.ரீ.ஈயினரே மேற்கொண்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. அரசு யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளும் திட்டங்கள் தொடர்பான செய்திகளை வெளியிடுவது எல்.ரீ.ரீ.ஈயினரின் எதிர்ப்புக்கு

காரணமென தெரிவிக்கப்படுகின்றது. இவருடன் உடனிருந்த நண்பர் ஈ.பி.டி.பி. அமைப்பின் ஆதரவாளரெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர் கொலைசெய்யப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு திருமணமாகியிருந்தார்.



## மொஹமட் மஹ்ரூப் ரஸ்மி (31) - ஊடகவியலாளர்
## கொலைசெய்யப்பட்ட தினம் - 6 ஒக்டோபர் 2008

ரஸ்மி மஹ்ரூப் என்ற பெயரில் ஊடகத்துறையினரால் அழைக்கப்படும் மொஹமட் மஹ்ரூப் ரஸ்மி இலங்கையின் பிரதான இலத்திரனியல் ஊடக வலையமைப்பான 'சிரச' தொலைக்காட்சியின் அனுராதபுர நிருபராக நான்கு வருடங்களாகக் கடமையாற்றிய இளம் ஊடகவியலாளராவார். தேசிய தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் தொலைக்காட்சி ஊடகவியலாளராக பயிற்சிபெற்று சுயாதீன தொலைக்காட்சி சேவையில் சில காலம் சேவையாற்றியுள்ளார்.

இவர் ஏழு வருடகாலமாக ஊடகவியலாளராக கடமையாற்றியுள்ளார். ரஜரட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் துடிப்புமிக்க உறுப்பினராகவும் இருந்தார். வட மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக்க பெரேரா உட்பட 27 பேரைப் பலிகொண்ட தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில ரஸ்மி மொஹமட்டும் பலியானார். 2008ஆம் ஆண்டு அக்டோபர் 6ஆம் திகதி காலை 8.40 மணியளவில் அனுராதபுரம் பழைய பஸ்நிலையத்திற்கு அருகிலுள்ள மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத் திறப்பு விழா வைபவத்தை இவர் ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்தபோதே இந்தக் குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றது. இவர் திருமணமானவர். இந்த வைபவத்தில் கலந்துகொண்ட இவரது சகோதரியும் அவரது கணவரும் இக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டனர். அனுராதபுரம் தர்மபால மாவத்தையில் இவர் வசித்து வந்தார்.

# 2009



லசந்த விக்ரமதுங்க - பத்திரிகை ஆசிரியர்
கொலையுண்ட தினம் - 2009 ஜனவரி 08

அரசு மற்றும் ஏனைய அரசியல்வாதிகளின் ஊழல், மோசடி, முறைகேடுகளை துணிச்சலுடன் வெளியிட்டு புலனாய்வு ஊடகவியலாளராக அவர் பிரபலமடைந்தார். லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் 1994ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியாராகவிருந்தார். அப்பத்திரிகையை வெளியிட்ட லீடர் வெளியீட்டு நிறுவனத்தின் உரிமையாளராகவிருந்தது அவரது சகோதரராவார். அந்த நிறுவனத்தின் பணிப்பாளராகவும் லசந்த விக்ரமதுங்க இருந்தார்.

சண்டே லீடர் பத்திரிகை மூலம் அவர் துணிச்சலுடன் வெளியிட்ட விடயங்கள் காரணமாக அவர் பலமுறை பல இடையூறுகளை சந்தித்துள்ளார். நுகேகொடையிலுள்ள அவரது வீடு குண்டு வீச்சுக்குள்ளானது. ஒரு முறை அவர் தாக்குதலுக்குள்ளானார். மற்றொருமுறை துப்பாக்கிச் சூட்டிலிருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். ரத்மலானை உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள லீடர் அச்சகம் 2007 நவம்பர் மாதம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. தொலைபேசி மூலம் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாக அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தது. அத்துடன் அவருக்குப் பின்னால் மோட்டார் சைக்கிள்கள் பின்தொடர்வதையும் அவர் கண்டுள்ளார். அவர் கொலையுண்ட தினமான 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி பத்தரமுல்லையிலுள்ள அவரது வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார். அவர் தமக்குப் பின்னால் மோட்டார் சைக்கிள்கள் பின்தொடர்ந்து வருவதாக தமது மனைவிக்கும் நெருங்கியவர்கள் சிலருக்கும் வாகனத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் போதே தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார். அன்று கொலையாளிகளிடம் இருந்து அவரால் தப்பிக்க முடியவில்லை. கல்கிஸ்சை அத்திடிய

வீதியில் அத்திடிய மாதிரிப் பாடசாலைக்கு அருகில் அவரது வாகனத்தை முந்திச் சென்ற மோட்டார் சைக்கிளில் வந்த கொலையாளிகள் அவரது தலையை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். உயர் பாதுகாப்பு வலயத்தில் காலை 10.00 மணியளவில் அவரை கொலை செய்துவிட்டு கொலையாளிகள் சுதந்திரமாக தப்பிச் சென்றுள்ளனர். கொலையாளிகளை இனங்காண முடியாத அளவுக்கு அவர் மீது துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்த வெற்று தோட்டாக்களைக் கூட பொறுக்கிச் செல்லும் அளவிற்கு பயிற்சி பெற்றிருந்தனர். கலுபோவில போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இருந்தும் அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

கொழும்பு, கொட்டாஞ்சேனை, பெனடிக் வித்தியாலயத்தில் கல்விகற்ற லசந்த விக்ரமதுங்க 1980ஆம் ஆண்டில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமானம் செய்து கொண்டார். சட்டக் கல்லூரி மாணவனாக இருக்கும் போதே 1977ம் ஆண்டு ஊடகவியலாளராக சன் பத்திரிகையில் இணைந்து கொண்டார். 1983ஆம் ஆண்டில் இருந்து தி ஐலன்ட் பத்திரிகையில் பிரதி செய்தி ஆசிரியராக பணியாற்றினார். சட்டத்தரணியாகவும், ஊடகவியலாளராகவும் இருந்த போதும் ஆங்கிலத்தைப் போலவே சிங்கள மொழியிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த அவரைப்பற்றி அறிந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்க 1986ம் ஆண்டு தமது பிரத்தியேகச் செயலாளராக நியமித்துக் கொண்டார். பின்னர் அந்தக் கட்சியின் (ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சி) கொழும்பு மாவட்ட வேட்பாளராக 1989ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டார். அதில் அவர் தோல்வியுற்றாலும் அவரது ஊடக வாழ்க்கை தொடர்ந்து 1988ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை சுரநிமல என்ற புனைப் பெயரில் சன்டே டைம்ஸ் பத்திரிகைக்கு அரசியல் கட்டுரைகளை இவர் எழுதி வந்தார். இவரை ஆசிரியராகக் கொண்ட சண்டே லீடர் பத்திரிகை 1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆசிரியராக அவர் துணிச்சலுடன் மேற்கொண்ட ஊடக பாவனை காரணமாக அவர் கொலையாளிகளின் இலக்கானார்.

## புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி - ஊடகவியலாளர்
## கொலையுண்ட தினம் - 2009 பெப்ரவரி 12

பல்வேறு தமிழ்ப் பத்திரிகைகள் மற்றும் வெளியீடுகளுக்கு செய்தி மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் அதேபோல் கவிதை சிறுகதை எழுதி வந்த புண்ணிமூர்த்தி சத்தியமூர்த்தி வன்னி யுத்தத்தின் யுத்த சூனியப் பிரதேசத்தில் விழுந்த ஆட்டிலரிக்கு பலியானார் என தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் பெப்ரவரி 12ஆம் திகதி நடைபெற்றதாக தெரிய வருகின்றது. புலிகளின் செய்திச் சேவைகளுக்கும் செய்தி வழங்கியதாக தெரிவிக்கப்பட்டதுன் அவர் வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்துள்ளார்.

## சசி மதன் (27) - ஊடக ஊழியர்
## கொலையுண்ட தினம் - 2009 மார்ச் 06

புலிகளின் நிர்வாகத்தின் கீழிருந்த வன்னி மாவட்டத்தின் வாசகர்களுக்கு இருந்த ஒரே பத்திரிகையான ஈழநாதம் பத்திரிகையின் முல்லைத்தீவு பகுதியின் விநியோக முகாமையாளராக கடமையாற்றிய சசிதரன் யுத்த சூனியப் பிரதேசத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஆட்டிலரி தாக்குதல் காரணமாக கொல்லப்பட்டார். இறுதி யுத்தத்தின் போது பாதுகாப்பு காரணமாக யுத்த சூனிய பிரதேசத்தில் சிக்கிய இவர் பொது மக்கள் சிலருடன் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஒரு மூலத்தில் மாத்திரம் தெரியவந்த சிலர் தொடர்பான தகவல்கள்

### 1. கே.எஸ். இரத்தினசிங்கம் - ஊடகவியலாளர் - மட்டக்களப்பு - 1986

மட்டக்களப்பு மாவட்ட வவுணதீவு கண்ணண்குடா பிரதேசத்தில் வசித்து வந்த கே.எஸ். இரத்தினசிங்கம் 'வீரகேசரி' பத்திரிகையின் நிருபராக கடமையாற்றி வந்துள்ளார். 1986ஆம் ஆண்டு இவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என நம்பிக்கையான தனிநபர் தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது. இருந்தும் சம்பந்தப்பட்ட பத்திரிகை மூலம் உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

### 2. ரீ.தயானந்தன் - ஊடகவியலாளர் - தம்பிலுவில், அம்பாறை - 1985

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசத்தில் தம்பிலுவில் என்ற கிராமத்தைச் சேர்ந்த ரி.தயானந்தன் 1985ஆம் ஆண்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டார் என தனிநபர் மூலம் தெரியவருகின்றது. இவரும் 'வீரகேசரி' பத்திரிகையின் நிருபராக இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் அதை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியவில்லை.

### 3. ஏறாவூரில் கொலையுண்ட கவிஞர் கொலைசெய்யப்பட்ட தினம் - 11 ஆகஸ்ட் 1990

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி இரவிலிருந்து 12ஆம் திகதி அதிகாலை வரை கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூரில் 121 முஸ்லிம்கள் எல்.ரீ.ரீ.ஈயினரால் படுகொலைசெய்யப்பட்டதை விளக்கும் 'பனையின் அடியில்' என்ற நூலில் ஒரு முஸ்லிம் குடும்பத்தின் உறவினரான தமிழ் கவிஞரொருவர்

கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டு பாதுகாப்புக்காக ஆகஸ்ட் 11ஆம் திகதி இரவு தமிழ் கவிஞரின் வீட்டுக்கு அயலிலுள்ள உறவினர்கள் சிலர் சென்றுள்ளனர். உயிரைக் காப்பாற்றிக் கொண்ட ஒரு நபர் அந்த நூலுக்கு தகவல் வழங்கியுள்ளார். அதில் அந்த வீட்டில் கைக்குழந்தை உட்பட 13 பேர் கொலை செய்யப்பட்டனர். சகலரையும் கொலைசெய்ய எல்.ரீ.ரீ.ஈயினர் தயாராவதாக அறிந்துகொண்ட அக்கவிஞர் காலில் விழுந்து அப்படிச் செய்யவேண்டாமென கெஞ்சிக் கேட்டுள்ளார். காலில் விழுந்து கெஞ்சியபோதும் கொலையாளிகள் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாக தெரிவிக்கப்படுகின்றது. பெயர் தெரியாத இந்தக் கவிஞர் குறித்து கிழக்கு மாகாணத்தில் எவரிடமிருந்தும் எதுவித தகவல்களையும் பெறமுடியவில்லை. "பனையின் அடியில்" என்ற நூல் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க அறிக்கைகள் மூலம் தொகுக்கப்பட்டதாகும்.

## 4. நாகலிங்கம் தியாகராஜா - ஊடகவியலாளர் - மட்டக்களப்பு

நாகலிங்கம் தியாகராஜா ஊடகவியலாளராகவிருந்ததாகவும் அவர் கொலை செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டபோதும் எந்த நாளில் கொலை செய்யப்பட்டார் என்ற தகவல் தெரியவில்லை.

## 5. கே.பி. உபசேன - பத்திரிகை விற்பனையாளர் - கோலைசெய்யப்பட்ட தினம் - 16 மே 1988

பத்திரிகை விற்பனை செய்தது மற்றும் விநியோகித்தமைக்காக கே.பி. உபசேன கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. எப்பிரதேசம் எனக்கூடத் தெரிவிக்கப்படவில்லை.

6. யூ.சி கருணாதிலக - புகைப்பட ஊடகவியலாளர்
கொலைசெய்யப்பட் தினம் - 9 ஜூலை 1988

'திவயின' பத்திரிகையின் புகைப்பட ஊடகவியலாளராக கடமையாற்றிய யூ.சி கருணாதிலக 1988ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

7. நெல்சன் கருணாரத்ன - ஊடகவியலாளர்
கொலை செய்யப்பட்ட தினம் - 23 நவம்பர் 1988

கலேவெல பிரதேச ஊடகவியலாளரான நெல்சன் கருணாரத்ன 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

8. விஜேசிறி நாணயக்கார - ஊடகவியலாளர்
கொலைசெய்யப்பட்ட தினம் - 22 ஏப்ரல் 1989

மத்துகம ஊடகவியலாளராக கடமையாற்றியதாகத் தெரிவிக்கப்படும் விஜேசிறி நாணயக்கார 1989ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

9. ஜினசேன கஸ்தூரியாராச்சி - ஊடகவியலாளர்
கொலைசெய்யப்பட்ட தினம் - 21 ஆகஸ்ட் 1989

'டெயிலி நியூஸ்' பத்திரிகையின் கேகாலை பிரதேச ஊடகவியலாளரான ஜினசேன கஸ்தூரியாராச்சி 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி கொலைசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**10. ஐ.சீ. பெர்னாண்டோ - பத்திரிகை விநியோகஸ்தர் கொலைசெய்யப்பட்ட தினம் - கிளர்ச்சிக்காலம்**

கண்டி மாவட்டத்தின் மெனிக்ஹின்ன பிரதேசத்தில் பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்ட நபரென தெரிவிக்கப்படுகின்றது. கொலைசெய்யப்பட்ட தினம், இடம் உட்பட எதுவித தகவல்களும் குறிப்பிடப்படவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட இல 4 முதல் 9 வரை குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் குறித்த ரஜீத் கீர்த்தி தென்னக்கோனின் "வாரண புராணய" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியரிடம் வேறு தகவல்கள் இருக்கவில்லை. வேறு நபர்கள் அல்லது எழுத்து மூல தகல்கள் மூலம் இந்த நபர்கள் தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்ள எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

## ஊடக மற்றும் கலை கலாசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் மாணவ அரசியல் செயற்பாட்டாளர்கள்

### பத்மசிறி திரிமாவிதான - படைப்பாளி
### கொலை செய்யப்பட்ட தினம் - 22 அக்டோபர் 1988

வளர்ந்து வரும் கவிஞர், ஓவியர் மற்றும் 'வெத சிசுஹண்ட' சஞ்சிகைக்கு எழுதிவந்த எழுத்தாளரான பத்மசிறி திரிமாவிதான கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவராவார். மாணவர் செயற்பாட்டுக்குழுவின் மூலம் மாணவத் தலைவரான இவர் இரத்தினபுரி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் செயலாளராக தெரிவானார். அம்பலாங்கொட கஹவ பிரதேசத்தில் பிறந்த இவர் 1988ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ஆம் திகதி கொலைசெய்யப்பட்டார். தலையில் பெரிய ஆணியை அறைந்து இந்த மாணவர் படுகொலை செய்யப்பட்ட விதம் அக்காலசமூகத்தில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியது.

### உபாலி கமகே - வெடிஹண்ட பத்திரிகை ஆசிரியர்
### கொலைசெய்யப்பட்ட தினம் - ஜனவரி 1990

மஹநாம என அழைகப்பட்ட உபாலி கமகே அனைத்து பல்கலைக்கழக மாணவர் பேரவையின் முக்கிய சங்கமாக விளங்கிய சமாஜவாதி மாணவர் சங்கத்தின் முழுநேர மாணவர் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டார். ஊடகக் குழுவின் செயலாளராக கடமையாற்றிய இவர் 'வெடி ஹண்ட'. என்ற பாதாள உலக இரகசியங்களை அம்பலப்படுத்தும் பத்திரிகை மற்றும் இதுபோன்ற பத்திரிகைகள் சிலவற்றுக்கு ஆசிரியராகவும் இருந்துள்ளார். மாணவர் போராட்ட மத்திய நிலையத்தின் தேசிய குழுவின்

இறுதி முடிவெடுக்கும் குழுவிலும் இவர் அங்கம் வகித்துள்ளார். கொழும்பு மாவட்டத்தில் கொட்டாவ பிரதேசத்தில் 1990ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கைதுசெய்யப்பட்டு பின்னர் கொலைசெய்யப்பட்டார்.

**அத்துல சேனாரத்ன – 'வெத சிசு ஹண்ட', ஆசிரியர்**

**கொலைசெய்யப்பட்ட தினம் - 17 செப்டெம்பர் 1990**

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பல்கலைக்கழக மாணவர் சங்கங்களின் கூட்டமைப்பான அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் செயற்பாடுகள் 1987 - 1990 கிளர்ச்சியில் செயலிழந்து காணப்பட்டது. கிளர்ச்சியாளர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் அத்துல சோனாரத்ன. 1980ஆம் ஆண்டு மார்ச் மாதம் தப்பிவந்து மீண்டும் ஒன்றிணைப்பு வேளைகளில் ஈடுபட்டார். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் ஏற்பாட்டாளராகவிருந்த இவர் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவராவார். மருத்துவ செயற்பாட்டுக்குழுவின் முன்னணி உறுப்பினராகவும் இருந்தார். 'வெத சிசுஹண்ட' சஞ்சிகையின் ஆசிரியரும் இவரே. தாம் கொண்டிருந்த அரசியல் கருத்துக்கள் மற்றும் மாணவர் இயக்கம் தொடர்பான ஊடக நடவடிக்கைகளையும் இவரே மேற்கொண்டார்.

1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி மீண்டும் கைதான இவர் கொலைசெய்யப்பட்டார்.

## திடீர் விபத்து மற்றும் வேறு காரணங்களால் உயிரிழந்த சிலரின் விபரம்

**லீனா அய்ரின் ஹப்புதந்திரி - எழுத்தாளர், கவிஞர்**
**விபத்துக்குள்ளான தினம் - 18 மே 1987**

வாழ்ந்திருந்தால் படைப்புத் துறையில் சாதனை படைக்கும் பெண் எழுத்தாளராக பரிணமித்திருக்கக்கூடிய ஆற்றல் பெற்ற லீனா அய்ரின் ஹப்புதந்திரி அகால மரணமடைந்தார். 1971 ஆம் ஆண்டு கிளர்ச்சியின்போது குற்றவாளியாக நான்கு வருட சிறைத்தண்டனை அனுபவித்தார்.

விடுதலையான பின்னரும் மக்கள் விடுதலை முன்னணியுடன் (ஜே.வி.பி) இரண்டாவது கிளர்ச்சிக்கு தயாரானபோது இவர் அதன் அரசியல் செயற்பாடுகள் குறித்து விரக்தி காரணமாக அதை விமர்சித்து அதிலிருந்து விலகிக்கொண்டார். இடதுசாரி அரசியல் சிந்தனையைக் கொண்டிருந்த இவர் விசேடமாக பெண்கள் மீதான அழுத்தங்கள் தொடர்பாக கிளர்தெழுந்த பெண்ணியவாதியாக இருந்தார். 1980 தசாப்தங்களின் படைப்புக்களை ஆய்வு செய்பவர்கள் இவரது இடதுசாரி பெண்ணிய மற்றும் சமூகம் தொடர்பான அழுத்தமான இவரது ஆக்கங்களை இனங்காணக்கூடியதாகவிருக்கும். கவிதைகள், சிறுகதைகள் ஆகியவற்றை எழுதியுள்ள இவர் ஊடகங்கள் மூலம் சமூக அரசியல் விவாதங்களில் பங்குபற்றினார். விமர்சனக் கட்டுரைகளையும் எழுதினார்.

மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து (ஜே.வி.பி) வெளியேறியமை, செயற்பாடுமிக்க படைப்பாளியாக அவர் வெளியிட்ட அவரது அரசியல் வழி முறைகள் ஆகியன மக்கள் விடுதலை முன்னணிக்கு (ஜே.வி.பி) அச்சுறுத்தலாக இருந்ததால் அந்த அமைப்பு தொடர்பாக அச்சத்துடனேயே வாழவேண்டியிருந்தது. 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி மாணவர் தயா பத்திரனவின் கொலையுடன் மக்கள் விடுதலை முன்னணியை (ஜே.வி.பி) விமர்சித்து

வெளியேறியவர்களுக்கு அச்சத்துடன் வாழ வேண்டியேற்பட்டது போல் லீனா அய்ரினும் சந்தேகத்துடனேயே வாழ்ந்தார்.

இருந்தும் 1987ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி இவர் வாகன விபத்தில் சிக்கியபோது, அவரது நண்பர்கள் இது திட்டமிடப்பட்ட விபத்தா என ஆரம்பத்தில் சந்தேகப்பட்டனர். இருந்தும் பின்னர் அது வர்த்தகர் ஒருவரின் வாகனத்தின் மீது மோதியதால் ஏற்பட்ட மரணமென்பதை ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று.

ஹொரண தம்பர பிரதேசத்தில் தமது தாயாருடனும், இரு புதல்வர்களுடனும் வாழ்ந்து வந்த இவர் ராஜகிரிய பிரதேசத்தில் வாகன விபத்தில் சிக்கினார் . அப்போது இவர் மகளிர் மற்றும் ஊடக ஒருமைப்பாட்டின் செயற்பாட்டாளராக இருந்ததுடன் அந்த அமைப்பினால் வெளியிடப்பட்ட ஊடக ஆய்வு என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தார்.

1987ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி விபத்துக்குள்ளாகி நினைவு திரும்பாத நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு 7 நாட்களின் பின்னர் 18ஆம் திகதி உயிரிழந்தார்.

**சந்திரகுமார விக்ரமரத்ன - கவிஞர்**
**இறுதியாகக் கண்ட தினம் - 1991**

சந்திரகுமார விக்கிரமரத்ன அல்லது அவரது நண்பர்களால் சந்தரே என அழைக்கப்பட்ட இவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்துகொண்டாரா என்ற சந்தேகம் இன்றும் கேள்விக்குறியாகவேயுள்ளது. சிறந்த படைப்பாற்றல் மிக்க கவிஞரான இவரது படைப்புக்களை மறக்கமுடியாமல் இவரது நண்பர்கள் இன்றும் கவலை கொண்டுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாட்டாளரென சிலர் அறிந்திருந்தனர். நிரந்தர வீடின்றி இவர் ஒவ்வொரு இடங்களில் வாழ்ந்து வந்துள்ளார். படைப்புத்துறையில்

ஈடுபட்டிருந்த நண்பர்களுடன் பழகிய அவர் இவ்வாறு ஒவ்வொரு இடத்தில் வாழ்வதை வழமையாகக் கொண்டிருந்தார். 1988 - 1990 இடைப்பட்ட காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) கிளர்ச்சி மற்றும் இதற்கெதிராக நடைமுறைப்படுத்தப்பட்ட அரச கிளர்ச்சி வரை இவர் வாழ்ந்துள்ளார். இறுதியாக இவரைக் கண்ட நண்பர்கள் இவர் தம்முடன் கண்டியிலிருந்து கொழும்பு வரை பஸ்ஸில் பயணம் செய்ததாகத் தெரிவிக்கின்றனர். பஸ் கொழும்பை நெருங்கும்போது அவர் பஸ்ஸில் இருக்கவில்லை. இதன்பின்னர் அவர் எவ்வாறு காணாமற்போனார் என்பது அனைவருக்கும் பெரும் கேள்விக்குறியாகவிருந்தது. இவ்வாறு அவரை இறுதியாகக்கண்டது 1991ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஒரு தினத்திலாகும். அவர் அப்போது விரக்தியுற்ற நிலையில் பல தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாயாருடன் இருந்த வந்த இவர் இளமைப்பருவத்தில் வாழ்க்கையை கொண்டுசெல்ல பஸ்களில் பாடல்களைப்பாடியுள்ளார். இது மட்டுமன்றி பல சிறுவியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார். இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் அவர் தொடர்ந்தும் கவிதைகளை எழுதிவந்ததால் படைப்பாளிகளுக்கு அவரை மறக்க முடியாத படைப்பாளியாகவிருந்தார். சுனில் மாதவ தொகுத்தளித்த 'திவயின' பத்திரிகையின் எட்டாம் பக்கத்துக்கே இவர் அதிகளவு படைப்புக்களை எழுதியுள்ளார். இவர் இறுதியாக 'ராவய' பத்திரிகைக்கு 'மலகெயக சட்டஹண்' (மரணவீட்டு குறிப்பு) என்ற பத்தியை எழுதிக்கொண்டிருந்தார். இவர் காலி பத்தேகம என்ற இடத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கையின் முன்னணி கவிஞரான ரத்ன ஸ்ரீ விஜேசிங்க ஒரு முறை இவரை "எமது தாயகத்து கோர்க்கி" என புகழ்ந்துரைத்துள்ளார்.

**குலசிங்க – ஊடகவியலாளர்**
**விபத்துக்குள்ளான தினம்**

கொழும்பில் இருந்து வெளிவரும் தேசிய பத்திரிகையான 'தி ஐலண்ட்' பத்திரிகையின் ஊடகவியலாளரான குலசிங்க எதிர்பாரதவிதமாக மரணத்தை தழுவிக்கொண்டார். கடமைக்காக காலை பஸ்ஸில் பயணம் செய்தபோது சக பயணியுடன் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. குலசிங்க அலுவலகத்திற்கு அருகில் பஸ்ஸை விட்டு இறங்கியபோது சம்பந்தப்பட்ட பயணியும் இறங்கி வந்து எதிர்பாரதவிதமாக இவரைத் தாக்கியுள்ளார்.இந்தத் தாக்குதலால் கீழே விழுந்த இவரது தலை நடைபாதை கொங்கிறீட் கல்லில்பலமாக மோதியதால் அவர் அந்த இடத்திலேயே இறந்துவிட்டார்.

**கே. நந்த குமார் – ஊடக ஊழியர்**
**விபத்துக்குள்ளான தினம் - 6 மே 2001**

'உதயன்' பத்திரிகையின் முகாமைத்துவ பிரிவில் சேவையாற்றிய நந்தகுமார் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதால் அவர் மரணமடைந்தார். ஆனால் திட்டமிட்ட விபத்தென சந்தேகம் நிலவுகின்றது. நந்தகுமார் இவ்வாறு விபத்துக்குள்ளானது 2001ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதியாகும். இதன் பின்னர் ஜுன் 23ஆம் திகதி 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் காணமயில்நாதனும் விபத்துக்குள்ளானார். இதுவும் திட்டமிட்ட செயலென சந்தேகிக்கப்படுவதுடன் அவர் கடும்காயங்களுக்குள்ளாகி உயிர்பிழைத்தார்.

**ருக்ஷிகா பிரசாதினி (21) - ஊடகவியலாளர்**
**விபத்துக்குள்ளான தினம் - 19 டிசம்பர் 2006**

'வீ.எவ்.எம்.' வானொலி சேவையின் அறிவிப்பாளரும் ஊடகவியலாளருமான ருக்ஷிகா பிரசாதினி வாகன விபத்தொன்றில் சிக்கி மரணமானது 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதியாகும். இதற்கு 12 தினங்களுக்கு

முன்னர் இவர் வாகனத்தில் செய்தியாளர் மாநாடொன்றிற்குச் செல்லும்போது விபத்துக்குள்ளானார். கொழும்பு 8 ஹன்சி றோட்டில் இவர் பயணம் செய்த வாகனம் சர்வதேச நிறுவனம் ஒன்றின் அதிகாரியொருவர் பயணம் செய்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. 12 நாட்கள் கொழும்பு வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனளிக்காததால் மரணமடைந்தார். இவரது மரணம் குறித்து நியாயம் கிடைக்க எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. இவர் சென்ற வாகனம் வெளிநாட்டு ராஜதந்திரியின் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாலேயே இந்த நிலை ஏற்பட்டது. ஊடகத்துறைக்குள் நுழைந்து சில மாதங்களுக்குள்ளாகவே இவர் துரதிஷ்டவசமாக விபத்தில் பலியானார்.

## ஏனையவை

### கோப்ரல் சேபால குணதிலக

இவர் ஊடகவியலாளரோ கலைஞரோ அல்லது ஊடக ஊழியரோ அல்ல. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிதுருதலாகல ஒளிபரப்புக் கோபுரம் தாக்கப்பட்டபோது கோப்ரல் சேபாய குணதிலக கொல்லப்பட்டார். 1984ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி ரூபவாஹினி ஒளிபரப்புக் கோபுரத்தின் பாதுகாப்புக்கு இவர் பொறுப்பாகவிருந்தார். மலையுச்சியில் காட்டுக்கு மத்தியிலுள்ள இக்கோபுரத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலுக்கு முன்னர் கோப்ரல் மீது கைக்குண்டு எறியப்பட்டது. இதில் இவர் கொல்லப்பட்டதுடன் ஏனைய வீரர்கள் எதிர்த்தாக்குதல் நடத்தியதால் தாக்குதல் நடத்தியவர்கள் பின்வாங்கிச் சென்றுள்ளனர். கோபுரத்துக்கு அடியில் வெடிமருந்துகளை மறைத்து கோபுரத்தைத் தகர்க்க முயன்றபோதும் ஜெலிக்னைட் திரியை கொளுத்த முடியாத காரணத்தால் தகர்ப்பு முயற்சி பயனளிக்கவில்லை. அங்கு கடமையாற்றிய ரூபவாஹினி ஊழியர்களுக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. இக்கோபுரம் மீதான தாக்குதலை றெலோ அமைப்பினரே மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### ரணதுங்க

பலதனிநபர்கள் மூலங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டபடி 'திவயின' பத்திரிகையின் பக்க வடிவமைப்பாளராக கடமையாற்றிய ரணதுங்க என்பவர் மக்கள் விடுதலை முன்னணியின் ஜே.வி.பி ஆயுதக்குழு உறுப்பினராக இவர் செயற்பட்டுள்ளதாக இவரது மரணத்தின் பின் தெரியவந்துள்ளது. இவர் இந்தச் சந்தர்ப்பத்தில் கடமைக்குச் செல்லவில்லையென்றும் 1989ஆம் ஆண்டு இவர் கொல்லப்பட்டது அரசியலுடன் சம்பந்தப்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆனந்த மெண்டிஸ்

கொலைசெய்யப்பட்ட மீட்டியகொட பிரதேச ஊடகவியலாளர் ஆனந்த மெண்டிஸின் பெயர் இதற்கு முன்னர் ஒரு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொலை செய்யப்படுவதற்குப் பல வருடங்களுக்கு முன்னர் இவர் தமது நடவடிக்கைகளைக் கைவிட்டு வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக சமகால ஊடகவியலாளர்கள் மூலம் தெரியவந்துள்ளது. 1988ஆம் ஆண்டு 17ஆம் திகதி பகல் வேறு காரணங்களால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கொலைகள் நடந்துள்ள விதம் தொடர்பான சில ஆய்வுகள்

பிரதான பட்டியலுடன் தொடர்புள்ள 114 பேர் மட்டும் கணக்கெடுப்பில் சேர்த்துக்கெள்ளப்பட்டுள்ளனர். இதில் 114 பேரில் 109 பேர் ஆண்கள் 5 பேர் பெண்கள்.

**1. இனஅடிப்படையில் கொலைகள் இடம்பெற்றுள்ள எண்ணிக்கை**

| | |
|---|---|
| சிங்களம் | - 48 |
| தமிழ் | - 60 |
| முஸ்லிம் | - 06 |
| மொத்தம் | 114 |

**2. துறையின் அடிப்படையிலான இடம்பெற்ற கொலைகளின் எண்ணிக்கை**

இதைத் தெளிவாக வகைப்படுத்த முடியாதுள்ளதுடன் சிலர் ஊடகம் மற்றும் கலை கலாசார நடவடிக்கைகளிலும் பிரசித்திபெற்றவர்களாவர். இருந்தும் குறிப்பிட்டளவில் அதிகளவில் பிரசித்தி பெற்ற துறையின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்கள் பட்டியலில் புகைப்பட ஊடகவியலாளர்கள் நால்வரும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். வகைப்படுத்தல் தொடர்பான சர்ச்சையுள்ள இலத்திரனியல் ஊடகத்துறையில் பொறியியலாளர், தொழில்நுட்ப அதிகாரிகள் ஊடகத்தொழில்துறையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| 1. ஊடகவியலாளர்கள் | - 55 |
| 2. ஊடக ஊழியர்கள் | - 29 |
| 3. உரிமையாளர்கள், பங்காளர்கள் | - 4 |
| 4. கலை கலாசார செயற்பாட்டாளர்கள் | - 27 |
| 5. மொத்தம் | - 114 |

## மாகாண அடிப்படையில் கொலைகள் இடம்பெற்றுள்ள பட்டியல்

சம்பந்தப்பட்ட நபர் குடியிருந்த இடத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் கொலைசெய்யப்பட்ட மாகாணத்தை கவனத்திற்கொண்டு வரிசைப்படுத்தப்படுள்ளது.

| மாகாணம் | சிங்களம | தமிழ் | முஸ்லிம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மேல்மாகாணம் | 20 | 08 | - | 28 |
| வடக்கு மாகாணம் | 09 | 44 | - | 51 |
| கிழக்கு மாகாணம் | 01 | 06 | 05 | 12 |
| ஏனைய மாகாணங்கள் | 20 | - | 01 | 21 |
| வெளிநாடுகள் | - | 02 | - | 02 |
| மொத்தம் | 48 | 60 | 06 | 114 |

## 3. கொலைகளுக்கான முக்கிய காரணம்

1. இனப்பிரச்சினை, யுத்தம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கொலைகள் (தமிழ் ஆயுதக் குழுக்கள் உருவானமை, இயக்கங்களுக்குள் இடம்பெற்ற கொலைகள் குழுக்களுக்கிடையிலான கொலைகள் உள்ளடங்கலாக
2. மக்கள் விடுதலை முன்னணியின் ஜே.வி.பி கிளர்ச்சி மற்றும் அரசின் பதில் கிளர்ச்சியால் இடம்பெற்ற கொலைகள்
3. அரசியல்வாதிகளினதும் மற்றும் ஏனைய சதிமுயற்சிகள் காரணமாக இடம்பெற்ற கொலைகள் (பலவீனம், ஊழல் மோசடி மற்றும் முறைகேடு ஆகியன வெளிவருவதைத் தடுக்க இடம்பெற்ற கொலைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. உதாரணமாக – விமல் எஸ்.

சுரேந்திர, சம்பத் லக்மால், ரோஹணகுமார மற்றும் லசந்த விக்கிரமதுங்க)

| காரணம் | சிங்களம் | தமிழ் | முஸ்லிம் | கொ. மொ. எண் |
|---|---|---|---|---|
| 1 | 14 | 60 | 06 | 80 |
| 2 | 29 | - | - | 29 |
| 3 | 05 | - | - | 05 |
| கொலையுண்டவர்-களின் எண்ணிக்கை | 48 | 60 | 06 | 114 |

கொலைகளுக்கான காரணத்தை குறிப்பிடும் வகையில் கீழ்க்கண்ட பட்டியலில் 1,2,3 என்ற இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலக்கம் 3 கீழ் கொலையுண்ட 4 சிங்களவர்களில் தருண கஹந்த கமகே இனப்பிரச்சினை மற்றும் யுத்தத்துடன் தொடர்பால் 1 ஆம் இலக்கப் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும் என்று கருத்து நிலவுகின்றது.

1ஆம் இலக்க பட்டியலில் கொலையுண்ட முஸ்லிம்கள் 6 பேரில் நிஹமத்துல்லாவின் கொலை அந்த பட்டியலுக்கு பொருந்துமா என்ற கேள்வியும் எழுகின்றது. ஹெலிகொப்டர் விபத்து, இனப்பிரச்சினை மற்றும் யுத்தத்திற்கு பொருந்துமா அரசியல் சதி முயற்சியா ஹெலிகொப்டரின் கோளாறா என்பது தீர்க்கப்படாத பிரச்சினையாகும்.

## சில பொது முடிவுகள்

இடம்பெற்றுள்ள 111 படுகொலைகளில் 80 இனப்பிரச்சினை, தமிழ் ஆயுதக் குழுக்கள் உருவானமை, குழுக்களின் உட்பூசல், அதிகாரப் போட்டி, யுத்தம் மற்றும் அதனுடன் தொடர்பான கொலைகளாகும். இவர்களில் 60 பேர் தமிழர்களாவர்.
வருட ரீதியில் எடுத்துக்கொண்டால் 1989ஆம் ஆண்டே அதிக கொலைகள் இடம்பெற்றுள்ளன. அந்த எண்ணிக்கை 22 ஆகும். இதில் 6 யுத்தம் தொடர்புடைய பட்டியலுக்குக் கீழ் வருவதுடன் ஏனைய 14 கொலைகள் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி ஜே.வி.பி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதில் இரண்டு கொலைகள் தொடர்பாக வேறு சந்தேகங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

1985, 1986, 1992, 2001, 2002 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளில் கொலைகள் இடம்பெற்றதாக அறிவிக்கப்படவில்லை. (பட்டியலின் அடிப்படையில் தேடிய விவரங்களின் படி) விசேடமாக 2001, 2002 மற்றும் 2003 முதல் 2004 மே மாதம் வரையிலான மூன்றரை ஆண்டு காலத்தில கொலைகள் இடம்பெறவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டது மற்றும் அதையடுத்து ஏற்பட்ட சமாதான நடவடிக்கைகளையும் இதற்கு காரணமாகக் கொள்ளலாம். 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற ஐக்கிய தேசிய முன்னணி 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இக்காலகட்டத்தில் சமூகத்திற்குள் வேறு கொலைகள் இடம்பெற்றபோதும் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் மற்றும் ஏனைய எதிராளிகளை அவ்வப்போது புலிகள் கொலைசெய்து வந்தனர்.

இருந்தும் அதற்கு முன்னைய காலத்திலும் சமாதான நடவடிக்கைகள் சீர்குலைந்த 2004ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான காலவரையில் யுத்தம் மற்றும் சுதந்திர கொலைகள் இடம்பெறவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் சமாதான நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்திற்குள் ஊடகவிலாளர்கள், ஊடக ஊழியர்கள் மற்றும் கலை கலாசார செயற்பாட்டாளர்களின் கொலைகள் அறிவிக்கப்படாவிட்டாலும் இதனுடன் ஒப்பிடும்போது இதுவரை சரித்திரத்தில் ஊடக மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறையைப் போலவே இலக்காகக் கொண்ட தொடர் கொலைகள் சமாதான நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2009 மார்ச் மாதம் வரை இடம்பெற்றுள்ளன. 2004ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதுவரை நாட்டை ஆட்சி செய்வதுடன் இடம்பெற்றுள்ள கொலைகள் 36 ஆகும். 4 சிங்கள ஊடகவியலாளரும், எழுத்தாளரும் அடங்குகின்றனர். இதில் முஸ்லிம் ஊடகவியலாளரும், எழுத்தாளரும் அடங்குவர்.

எஞ்சிய 29 பேரும் தமிழ் ஊடகவியலாளர்கள், ஊடக உரிமையாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்களாவர். இதில் ஒரு இசையமைப்பாளரும் அடங்குவார். இக்காலத்தில் சம்பத் லக்மாலின் கொலை மற்றும் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையைத் தவிர்ந்த ஏனைய 34 கொலைகளும் நேரடியாக யுத்தம் காரணமாக இடம்பெற்ற கொலைகளாகும். மூன்று சிங்களவர்களும், இரு முஸ்லிகளும் குண்டுவெடிப்பில் சிக்கி கொல்லப்பட்டனர். 29 தமிழர்களில் 27 பேர் நேரடியாக யுத்தச் செய்திகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான செய்திகளை அறிக்கையிடுவதை தடுப்பதற்காகவும் அவற்றை வெளியிடும் ஊடகங்களை அடக்கி ஒடுக்குவதை நோக்காகக் கொண்டு நடத்தப்பட்ட கொலைகளாகும். அவை சுதந்திரமான கருத்துக்களைக் கொண்டிருப்பது, கருத்துக்களை வெளியிடுவது மற்றும் தொடர்பாடல்படுத்துவதைத் தடுப்பது, அதேபோல் வடக்கின் மக்கள் வாழ்க்கை தொடர்பான உண்மை நிலையை உலகத்திற்கு மறைப்பது போன்றவற்றை இலக்காகக் கொண்டதாகும். தமிழ் ஊடகத்துறையில் பிரபலமான சிலரும் இக்காலத்திற்குள் கொலை செய்யப்பட்டனர்.

# கருத்துக் கொலைக்கு இறையானோர்

## சீதா ரஞ்சனி

கருத்துக் கொலை மற்றும் ஊடக அடக்குமுறையின் மிகமோசமான குற்றம் ஆட்கொலையாகும். ஆட்கொலை மற்றும் கொலை செய்யப்பட்ட விதம் குறித்து ஆராய்ந்த போது, கருத்துக்களைக் கொண்டிருத்தல், வெளிப்படுத்துதல் மற்றும் தகவல்களை வெளியிடுவதை தடுப்பதற்கு, அடக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏனைய முயற்சிகளின் விபரீதத்தை புரிந்து கொள்ளக்கூடியதாகவிருக்கும். இவ்வாறு இடம்பெறுவதற்கான காரணமாகவிருந்த சமூக அரசியல் நிலைமைகளை உணர்ந்து கொள்வதற்கும் இது உதவியாகவிருக்கும். இத்தகவல் தொகுப்பு அதை ஆய்வு செய்ய ஒரு வழியை திறந்து வைப்பதாக அமையும். இதை இலகுவாக்க இந்த தகவல்கள் சம்பந்தப்பட்ட துறையின் முக்கியத்துவம் அல்லது பிரபல்யம் போன்ற காரணங்களை கொண்டு வரிசைப்படுத்தாமல் கொலையுண்ட ஆண்டு என்ற ரீதியில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம்,
மேற்பார்வை: பத்திரிகை நிறுவனம்,
இல. 96, கிருள வீதி, நாரஹேன்பிட்ட,
கொழும்பு 05
freemediasrilanka@gmail.com

ISBN : 978-955-0583-02-7